Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 10 சனிக்கிழமை (26.07.2014) பக்கங்கள் 20 ஓசை –298

### பருப்பு விலை இன்று முதல் குறைப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் தானியங்கள் மீதான விசேட வியாபார பண்ட அறவீடு இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி மைசூர்பருப்பு ஒரு கிலோகிராம் 3 ரூபாவாலும், பாசிப்பயறு ஒரு கிலோ 32 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# தமிழரசுக் கட்சிக்கு புதிய தலைவர் விக்னேஸ்வரனுக்கு அதிக வாய்ப்பு

## உள்ளிருந்து கிளம்புகிறது எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவியில் மாற்றம் இடம்பெறவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன்படி வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை தமிழரசுக் கட்சியின் தலைவராக நியமிப்பதற்கு இரா. சம்பந்தன் திட்டமிட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தான் போட்டியிடாமல் இருப்பதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக செயற்படப் போவதாகவும் தற்போது தமிழரசுக் கட்சியின் தலைவராகவும், கூட்டமைப்பின் தலைவராகவும் இருப்பதனால் கூட்டமைப்பிலுள்ள ஏனைய பங்காளிக் கட்சிகளின் விடயத்தினை கட்டுப்படுத்த முடியாதிருப்பதனால் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவியினை வடமாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு வழங்க சம்பந்தன் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(19) ஆம் பக்கம் பார்க்க

# கொழும்புடன் இணைந்து செயற்பட மோடி அரசு ஆர்வமாக இருக்கிறது

### மீனவர்களின் அத்துமீறல் விவகாரம் இலங்கையின் உறவை பாதிக்காது



## இந்திய பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கை - இந்திய கடற்பரப்பில் இரு நாட்டு மீனவர்களின் அத்துமீறல் விவகாரம் ஒருபோதும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவைப் பாதிக்கப்போவதில்லை என்றும் இநத விடயம் உட்பட அனைத்து விடயங்களிலும் இருநாட்டு அரசுகளும் ஒரு இணக்கப்பாட்டுடன் இணைந்து செயற்பட ஒரு இணக்கப்பாடு உருவாக்கப்பட்டுள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் அருண் ஜெயட்லீ தெரிவித்துள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாடு இரத்தினபுரியில்

(கொழும்பு)

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 20 ஆவது தேசிய மாநாட்டில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா பங்கேற்று சிறப்பித்துள்ளார்.

இரத்தினபுரியில் அமைந்துள்ள நகரசபை மண்டபத்தில் தேசிய மாநாடு நேற்று நடைபெற்றது.

முன்பதாக இரத்தினபுரியின் பிரதான வீதியில் நடந்த பேரணியில் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான

(19) ஆம் பக்கம் பார்க்க



## யாழ். நீதிமன்ற வாயிலில் நேற்று அமைதிப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)


பாலியல் வல்லுறவு மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் ஆகியவற்றுக்கு எதிராக நேற்று யாழ். நீதிமன்றம் முன்பாக அமைதிப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

பெண்கள் செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தங்கள் வாயை கறுப்புத் துணிகளால் கட்டிய படி பல்வேறு சுலோகங்கள் அடங்கிய பதாதைகளை கையில் தாங்கியிருந்தனர்.

யாழ். பொது நூலகம் முன்பாக ஆரம்பித்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் யாழ். நீதிமன்ற முன்றலைச் சென்றடைந்து அங்கிருந்து மீண்டும் யாழ். நூலகத்தை வந்தடைந்து முடிவுற்றது. (25)

## மாவைக்கந்தனுக்கு பக்திபூர்வ இரதோற்சவம்



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் புகழ் மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த உற்சவப் பெருவிழாவில், நேற்று தேர்த் திருவிழா இடம் பெற்றது.

காலை இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சண்முகப் பெருமான், முற்பகல் 10.00 மணியளவில் தேரில் ஆரோகணித்து முற்பகல் 10.45 மணியளவில் அடியவர்களின் அரோகரா கோஷத்துடன் வீதிவலம் வந்தார். (18,116)

## பாலியல் துஷ்பிரயோகம்; வழக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ஊரிப் பகுதியில் இரண்டு சிறுமிகளை கடற்படைச் சிப்பாய் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகத் தெரிவித்து மேற்கொள்ளப்பட்ட வழக்கின் விசாரணையினை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை யாழ். சிறுவர் நீதிமன்ற பதில் நீதவான் மு.திருநாவுக்கரசு ஒத்திவைத்துள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் காரைநகர் ஊரிப் பிரதேசத்தில் இரு சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட சந்தேகத்தின் பேரில் 7 கடற்படை சிப்பாய்கள் கைது செய்யப்பட்டு கடந்த 21 ஆம் திகதி முதல் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி வழக்கு விசாரணை கடந்த 21 ஆம் திகதி சிறுவர் நீதிமன்றில் நீதிபதி க.ஜீவராணி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, 7 நபர்களையும் பிணையில் விடுதலை செய்ய அனுமதித்ததுடன், வழக்கு விசாரணையினை நேற்று வரை ஒத்திவைத்தார்.

அதனடிப்படையில் நேற்று மேற்படி வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்ட போது, வழக்கினை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை யாழ். சிறுவர் நீதிமன்ற நீதிபதி ஒத்திவைத்துள்ளார்.

படையினர் சார்பாக தென் பகுதியைச் சேர்ந்த வழக்கறிஞர் ஒருவர் முன்னிலையாகியிருந்தார்.

சிறுமியின் சார்பில் எவரும் மன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை. சம்பவ தினத்தன்று சிறுமி அணிந்திருந்த உடைகள் நீதிமன்றில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டன. (25)

## வீதி விபத்தில் ஒருவர் மரணம்

நேற்று முன்தினம் மருதனார் மடம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்ததாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கீரிமலை பண்டத்தரிப்பைச் சேர்ந்த யராட் றோசலின் டயஸ் (வயது - 51) என்பவரே இவ்வாறு உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாரினால் இவரது சடலம் நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# அழிவடைந்த பிரதேசங்களின் அபிவிருத்தியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அக்கறை

## வலி.கிழக்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யுத்தத்தால் அழிவடைந்த பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதில் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றார் என வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி.கிழக்கு பிரதேச இணைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

மகளிர் அமைப்பின் சுயதொழிலை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்று அச்சுவேலி, தம்பாலை கதிரிப்பாய் தம்பாலை மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி.ஆனந்தராணி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த காலங்களில் அழிவு யுத்தத்திற்கு நிதியினை அள்ளி வழங்கியவர்கள் இன்று யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எமது உறவுகளுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு ஏன் முன்வரவில்லை? வெளிநாடுகளுக்கு செல்லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இங்கு அம்மக்கள் படும் அவல நிலைகளை எடுத்துக் கூறி பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களுக்கான தீர்வுகளையோ, உதவிகளையோ பெற்றுக் கொடுப்பதற்கு முன்வரவில்லை.

அன்று யுத்தத்தை ஆதரித்தவர்கள் அதனால் ஏற்பட்ட அழிவுகளுக்கு அவர்கள் பொறுப்பேற்காமல் இன்று மீண்டும் அழிவை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கின்றார்கள் ஆனால் டக்ளஸ் தேவானந்தா அன்று யுத்தம் எமக்கு அழிவையே பெற்றுத்தரும் எனக்கூறி அதனை எதிர்த்த ஒரே ஒரு தமிழ் அரசியல்வாதி ஆவார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இன்று யுத்தத்தால் அழிவடைந்த பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதுடன் எமது தமிழ் மக்கள் யாரிடமும் கையேந்தாது தங்களுடைய சொந்த முயற்சியில் சுதந்திரமான வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதற்காக அயராது உழைத்து வருகின்றார். என்பதனை நீங்கள் அனைவரும் புரிந்துகொண்டு உங்களிற்கு யார் என்ன செய்கின்றார்கள் என்பதை சிந்தித்து இனிவருங்காலங்களில் வரும் சந்தர்ப்பங்களையாவது சரியாகப் பயன்படுத்தி சரியானவர்களைத் தெரிவு செய்யவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இக்கலந்துரையாடலில் அச்சுவேலி தெற்கு, சமுர்த்தி உத்தியோகத்தர் திரு.ம.சந்திரசேகரனும் கலந்து கொண்டார்.

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(மானிப்பாய்)

யாழ்ப்பாணம், மானிப்பாயைச் சேர்ந்த சுவாமிப்பிள்ளை மரியதாஸ் அண்மையில் நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கபட்டு யாழ்.மாவட்ட நீதிபதி ஆனந்தராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் தேசிய சேமிப்பு வங்கியில் உதவி முகாமையாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர் ஆவார்.

# செம்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் பாரம்பரிய விளையாட்டுப் பெருவிழா

பொலிகண்டி செம்மீன் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும் விளையாட்டு விழா இன்றும், நாளையும் பொலிகண்டி மேற்கு குடியேற்ற செம்மீன் விளையாட்டுக்கழக கடற்கரை மைதானத்தில் கழகத் தலைவர் ந.தங்கவேலாயுதம் தலைமையில் சிறப்புற நடைபெறவுள்ளது.

இன்று காலை முதலாம் நாள் நிகழ்வாக சாண்டோ ஆ.துரைரத்தினத்தினால் பயிற்சியளிக்கப்பட்ட செம்மீன் கழக வீரன் கணேசமூர்த்தி கவீந்திரன் ஜயோகன்ஸவின் நெறிப்படுத்தலின் கீழ் கழக வீரர்களின் வாகனம் இழுத்தல், கடலில் படகு இழுத்தல் போன்ற வீரதீர சாகச நிகழ்வுகளும் வெளிக் கழகங்களுக்கான போட்டிகளாக மோட்டார் படகு ஓட்டம், கட்டுமரம் வலித்தல், தம்பதிகள் சைக்கிள் ஓட்டம், வினோத வீடைப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

மாலை நிகழ்வாக 30-40 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான ஓட்டம், 40-50 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான ஓட்டம், 45 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான ஓட்டம், 10 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கான மெய்வல்லுநர் போட்டி, இல்லங்களுக்கிடையிலான அஞ்சல் ஓட்டம், இல்லங்களுக்கிடையிலான 800 மீற்றர் 1500 மீற்றர் ஓட்டப்போட்டி இல்லங்களுக்கிடையிலான கயிறு இழுத்தல் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

நாளை காலை நிகழ்வாக வெளிக்கழக ஆண்கள் பெண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டியும் மாலை நிகழ்வுகளாக 10 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் மற்றும் இடைவேளை உடற்பயிற்சி நிகழ்வும் இடம்பெற்று வெளிக்கழகங்களுக்கான போட்டிகளாக கிறிஸ் கம்பம் ஏறுதல், தலையணைச் சண்டை, சாப்பாட்டுப் போட்டி, கயிறு இழுத்தல் என்பனவும் நடைபெறவுள்ளன. (116)



மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய இராஜகோபுர கட்டுமாணப் பணிகளுக்காக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆளுநர் நிதியிலிருந்து ஒரு மில்லியன் ரூபா காசோலையை ஆலய பிரதம குருக்களிடம் கடந்த வாரம் ஆளுநர் அலுவலகத்தில் வைத்துக் கையளிப்பதைக் காணலாம்.

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி மகாத்மா காந்தி சனசமூக நிலையம் நடத்தும் விளையாட்டு விழா மற்றும் பரிசளிப்பு விழா நிகழ்வு இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத்தின் தலைவர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) பிரதம விருந்தினராகவும், நல்லூர் பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச அமைப்பாளருமான அ.இரவீந்திரதாசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக்**

**ரீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்.
சிவலிங்கப்புளியடி.
வண்ணார்பண்ணை.
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3395)



# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் **1077**

திகதி **24.07.2014**

வெற்றி எண்கள் **04 12 21 26**

ஆங்கில எழுத்து **0**

**ஜக்பொட் பரிசு ரூ.3,44,39,140/= வெல்லப்படவில்லை**

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,44,39,140/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 11 | 50,000/= | ரூ. 5,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 268 | 1,000/= | ரூ. 2,68,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 498 | 1,000/= | ரூ. 4,98,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12048 | 60/= | ரூ. 7,22,880/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6329 | 40/= | ரூ. 2,53,160/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 158269 | 20/= | ரூ. 31,65,380/= |
| ஆங்கில எழுத்து | 22984 | 20/= | ரூ. 4,59,680/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 69,17,100/=

**எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 34,748,800/=**

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.07.27 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3733)


## உற்சவ கால கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதற்கான முன்னாயத்த ஏற்பாடுகள் தொடர்பான இரண்டாவது கலந்துரையாடல் யாழ்.மாநகர முதல்வர் தலைமையில் நாளை மறுதினம் 28 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முதல்வர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென முதல்வர் அறிவித்துள்ளார்.


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப்பீடம்

**மீள் பரீட்சைகள் (பழைய பாடத்திட்டம்) கல்வியாண்டு 2011/2012**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய கற்கைநெறியை பழைய பாடத்திட்டத்திற்கு பயின்று மீள் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான மீள் பரீட்சைகள் எதிர்வரும் 30.07.2014 ஆம் திகதி முதல் ஆரம்பமாகின்றன.

மாணவர்கள் பரீட்சை நேரசூசியினைக் கலைப்பீடாதிபதி அலுவலகம் மற்றும் தத்தமது துறை அலுவலக விளம்பரப் பலகைகளில் பார்வையிடலாம்.

பதிவாளர்
17.04.2014

யாழ்.பல்கலைக்கழகம்

(C/3751)

# விலைப்பட்டியல் குறித்த பலகைகள் பல்பொருள் வாணிபங்களில் இல்லை

## – குற்றம் சாட்டுகின்றனர் மக்கள் –

யாழ்.நகரவீதிகளில் உள்ள பெரும்பாலான வியாபார நிலையங்களில் விலைப்பட்டியல் பலகைகளைக் காணமுடியவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்.பிரதானவீதி, வைத்திய சாலை வீதி, பருத்தித்துறைவீதி என பல்வேறு வீதிகளிலும் அமைந்துள்ள பல்பொருள் வாணிபங்களில் இவ்வாறு விலைப் பட்டியல் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையினால் தெரிவிக்கப்பட்ட போதிலும் அது கடைப்பிடிக்கப்படுவதாகத் தெரியவில்லை.

எனினும் இவ்வாறான வியாபார நிலையங்களில் விலைப் பட்டியல் பலகையில் பொருட்களின் பெயர் மட்டுமே காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றது ஆனால் பொருள்களுக்கான விலைகள் குறிக்கப்பட்டிருப்பதில்லை.

இதனால் பொருட்களின் விலைகுறித்து நுகர்வோருக்கு அதிருப்தியான நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் பலரும் கவலை வெளியிட்டுள்ளனர். (இ)

# மக்கள் சந்திப்பு

நீராவியடி J/ 100 கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளின் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கும் முகமாக பொது மக்களுடனான சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் அரசடி லேன் நீராவியடி கல்வி நிலையத்தில் நல்லூர் பிரதேசசபை எதிர்க் கட்சித்தலைவர் அம்பலம் இரவீந்திரதாசன் தலைமையில் இடம் பெற்றது.

பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், பா.நகுலேஸ்வரக் குருக்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரின் சிந்தனைக்கமைவாக யாழ்.மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டு வருகின்றார். அந்த வகையில் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் கணவரால் கைவிடப்பட்டு பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்குடனான இக் கலந்துரையாடல் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# வருடாந்த திருவிழாக்கள்

## அன்னம்மாள் ஆலயம்

பாண்டியந்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா கடந்த 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்று வருகின்றன.

இன்று மாலை 5 மணிக்கு நற்கருணைத்திருவிழா செபமாலையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதுடன் நற்கருணை ஆராதனையும் இடம்பெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத்திருப்பலி அருட்தந்தை நீக்கிலஸ் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும் என ஆலயநிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

## பேதுருவானவர் ஆலயம்


(மண்டைதீவு)

மண்டைதீவு புனிதபேதுருவானவர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா நிகழ்வு நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இந்தத்திருவிழா நிகழ்வு தொடர்ந்து பத்துநாட்கள் நடைபெறவுள்ளதுடன் இறுதிநாளில் பிற்பகல் திருச்சொரூபபவனியும் இடம் பெறவுள்ளது.

மண்டைதீவுப்பகுதியில் மக்கள் மீண்டும் மீள்குடியமர்த்தப்பட்டு நான்கு வருடங்களாக பேதுருவானவர் ஆலயம் திருவிழா நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது (பா)

# நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு வீதிகளில் பந்தல் வேலைகள் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

நல்லைக்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலயவீதிகளில் பந்தல்போடும் வேலைகள் இடம்பெற்று வ்ருகின்றன.

கோவில் வீதியில் பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் பருத்தித்துறை வீதியில் அமைக்கப்படும் இரு பந்தல்களில் ஒன்று தற்போது அமைக்கப்படுகின்றது.

அத்தோடு ஆலய வெளிவீதியில் பக்தர்கள் அங்கப்பிரதட்சனம் செய்ய வசதியாக வெளிவீதி அனைத்திலும் வெள்ளை மணல்கள் குவியலாக கொட்டப்பட்டு வருவதுடன் மஹோற்சவத்திற்கு ஆலயத்தை அலங்கரிக்கும் வேலைகளும் இடம்பெறுகின்றன. (இ)

ஆமிக்குக் காணி - 02

# படை விலகலைத் தடுத்தல் காணி குடுப்பைத் தடுக்கேலாது



வடபுலத்தான் எழுதுவது...

போர் முழுஞ்சதுக்குப் பிறகு ஏன் ஆமிக்கு காணி?

இப்பிடித்தான் எல்லாரும் கேக்கினம்.

நானும் இப்பிடித்தான் கேக்கிறன்.

போர் முழுஞ்சதுக்குப் பிறகு ஆமிக்கு இஞ்ச – வடக்கு கிழக்கில – என்ன வேலை?

இப்ப புலிகளே இல்லாமல் போனதுக்குப் பிறகு ஆமிக்கும் அலுவல் இல்ல.

அப்பிடி அலுவல் ஒண்டும் இல்லாத ஆமிக்கு காணி ஏன்? இடம் ஏன்?

இப்பிடித்தான் எல்லாற்ற மனசிலையும் ஒரு எண்ணம் ஓடுது.

ஆனால் போர் முழுஞ்ச பிறகு அஞ்சு வருசமாக இராணுவம் தனக்கெண்டு சொந்த இடங்களை தேடுவதற்கு மும்முரமாக ஈடுபடவில்லை.

2009இற்குப் பிறகு தமிழ்ப் பகுதிகளில இருந்து பழப்பழயாக இராணுவம் குறைக்கப்பட்டுக்கொண்டே இருந்தது.

இருந்தாப்போல ஆமிக்கு எங்கட ஆக்கள் விடுகிற சவாலும் அர்சாங்கத்தோட மல்லுக்கட்டுறதும் கூடக் கூட ஆமிக்கும் தமிழ்ப்பகுதிகளை விட்டு போற யோசனை குறையத் தொடங்கிச்சு.

வெளிக்கிட்டுப் போற ஆமியை புரியாணி குடுத்து கூப்பிடுகிற காரியத்தை கூட்டமைப்புக்காரரும் அதிதீவிர தமிழ்த்தேசியவாதிகளும் பாத்தால் இராணுவ முகாம்கள் கூடுமோ? குறையுமோ?

அப்பிடி இராணுவத்தை மறிச்சு வைச்சுக்கொண்டே இராணுவமே வெளியேறு என்று போலிக்கூச்சல் போடுகினம் இவை.

இராணுவத்தை மறிச்சு வைச்சால் அதுக்கு இடம் தேவை. காணி தேவை.

போர்க்காலத்திலேயே – புலிகளின் காலத்திலேயே நிரந்தரமாக காணி கேக்காத அல்லது நிரந்தரமாக காணி எடுக்கிறதைப் பற்றி யோசிக்காத இராணுவம் இப்ப இராணுவத்துக்கெண்டு சொந்தமாக காணி கேக்குதெண்டால்……! அதின்ர அர்த்தம் என்ன?

போருக்குப் பிறகு இராணுவத்தைச் சீண்டிச் சீண்டியே அதை நிரந்தரமாக தமிழ்ப் பகுதிகளிலேயே தங்க வைக்கிற ஒரு வேலையத்தான் இந்த தமிழ்த் தேசியவாதிகள் செய்துகொண்டு இருக்கினம்.

அப்பிடிப் பாத்தால் ஆமியை நிரந்தமாக மறிச்சு வைச்சிருக்கிற ஆக்களும் அதற்கு காணி எடுத்துக்குடுக்கிற ஆக்களும் மறைமுகமாக இவை தான்.

வெளியில பாத்தால் ஆமியை கலைக்கிற ஆட்லெறி படையணி மாதிரியோ, கரும்புலி அணி மாதிரியோ இருக்கும். கொஞ்சம் கவனித்துப் பாத்தால் ஆமிக்கு ஐஸ்கிறீம் குடுக்குற கோசுஷ்டி இவைதான் எண்டு விளங்கும்.

இப்பிடித்தான் இவையின்ர எல்லா விளையாட்டும்.

இதை விளங்காமல்தான் சனங்கள் ஒருபக்கமும் பேப்பர்க்காரர் ஒருபக்கமும் நிண்டு ஏதோ கூட்டமைப்புக்காரர்தான் இந்த மண்ணை மீட்கிறதுக்காக அலாதிப்படுகினம் எண்டு படம் காட்டுகினம்.

இது முந்தி ஒருதடவை நான் சொன்னதைப்போல ஆணியைப் பிடுங்குகிறேன் எண்டு சொல்லிக்கொண்டே ஆணியை அறைஞ்சு இறுக்குகிற சங்கதிதான்.

சுத்தியலால் ஆணியை பிடுங்கவும் முழயும். பிடுங்க முழயாமல் அறையவும் முழயும்.

இப்ப இவை எல்லாரும் செய்பிற காரியம் ஆணியை அறையுறது தான்.

மகிழ்ச்சி என்ற உணர்ச்சி இல்லாவிட்டால் வாழ்க்கை சுமக்க முடியாத பெரிய சுமையாகிவிடும். - பெர்னார்ட்ஷா

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## வாழ்க்கை கொண்டாடுவதற்கானது!

"உழைத்தால் உயரலாம்.. உழைத்தால் உயரலாம்.. என்கிறீர்களே... யார் உழைத்தால் யார் உயரலாம்" என்று கேட்டார் ஒரு புதுக்கவிஞர். பாடுபட்டு உழைப்பவரின் பலன்கள் வேறொருவரிடம் போய்ச் சேர்வது குறித்துக் கேட்கப்பட்ட கேள்வி அது.

இதையேதான் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும் சினிமாப் பாடலில் சொன்னார்: "காடு விளைஞ்சென்ன மச்சான் நமக்குக் கையும் காலும் தானே மிச்சம்". உழைப்பவர்களுக்கு ஏற்படுத்தப்படும் இந்த அநீதி, பாடுபட்டு உழைக்கச் சொல்லிச் சொல்கிறவர்களை சந்தேகப்பட வைக்கிறது.

மறுபுறம், "செய்யும் தொழிலே தெய்வம் அதில் திறமைதான் நமது செல்வம்" "ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது அங்கே ஆணும் பெண்ணும் சேராவிட்டால் சுவையிருக்காது" என்றெல்லாமும் அவரே எழுதியிருக்கிறார். உழைப்பின் பயனை இன்னொருவர் பிடுங்குவதற்கெதிராகப் போராடு; ஆனால் உழைக்காமலிருக்காதே என்றுதான் அதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

கடின உழைப்பு இல்லாவிட்டால் நாம் விரும்பும் இலக்கை அடைய முடியாது என்ற நிதர்சனமும் நமக்குப் புரிகிறது. அனைவருக்கும் ஆசை உள்ளது. இலட்சியம் இருக்கிறது. பல்வேறு திட்டங்கள் உள்ளன. ஆகவே உழைக்கத்தான் வேண்டும் என்று பரபரக்கிறோம்.

உழைப்பே கடவுள் என்றுதான் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. உழைப்பை நாம் வணங்கவே செய்கிறோம். உழைக்காவிட்டால் குற்ற உணர்ச்சிகொள்கிறோம். உழைப்பு, வேலை, முன்னேற்ற இலக்குகள் என்று ஓடிக்கொண்டிருக்கிறோம். இதுதான் மனித இயல்பாக முன்வைக்கப்படுகிறது.

ஆனால் இது செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட திணிப்பு. மனித குலத்தின் இயல்பு இதுவல்ல என்று சொல்கிறார் சமூகவியல் அறிஞரான ஜோன் செர்சான். இன்னுமின்னும் என்று முன்னேறும் சமூகப் போட்டியில் உழைப்புக்கு அடிமையாகிவிட்டோம் என்கிறார் அவர்.

தனிப்பட்ட சமூக வாழ்க்கைக்கு மனிதனுக்கு இன்று நேரமே இல்லை. கூடி மகிழ்தல், விளையாட்டு, விருந்தோம்பல் ஆகிய மனித இயல்புகளுக்கு இன்று இடமில்லாமல் போய்விட்டது. இன்று மனிதன் வேலைநேரம் போக படுக்கையிலும், கழிப்பறையிலும்கூட வேலை செய்யும் நிலை வந்துவிட்டது. கீழ்நோக்கி வீழ்ந்துவிடுவோமோ என்ற அச்சத்தால் உயர் நடுத்தரவர்க்கம் பீடிக்கப்பட்டு, மேலும் மேலும் உழைத்துக் கொண்டிருக்கிறது.

நமக்கு முந்தைய சமூகம் இதைப் பற்றி கேள்வி எழுப்பாததன் சுமையை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நமது எதிர்கால சமூகத்துக்காக இந்த உழைப்பு மேனியாவை கேள்விக்குள்ளாக்க வேண்டும் என்கிறார் செர்சான்.

மனிதகுலத்தின் இயல்பான குணங்கள் மாறிவிட்டன. புதிய புதிய தொழில்நுட்பங்கள் எல்லாம் வந்து நாம் நம்முடைய திறன்களை, லட்சக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்த உணர்வுகளை இழந்து கொண்டிருக்கிறோம்.

நாம் மேலும் மேலும் தனிமைப்பட்டுக்கொண்டே இருக்கிறோம். நமக்கு பேஸ்புக்கில் நண்பர்கள் இருக்கிறார்கள். ஆனால் நேரடி நண்பர்களை இழந்துவிட்டோம்.

நாம் அனைவரும் தொழில்நுட்பத்தால் மூழ்கடிக்கப்பட்டுள்ளோம். மக்கள் தங்கள் செல்போன்களைப் பார்த்த வண்ணம் பிணங்களைப் போல நடந்து கொண்டிருக்கிறார்கள். மேலும் மேலும் உழைத்து வசதிகளைப் பெருக்கிக் கொள்ளும் பேராவலில் பறக்கிறார்கள்.

ஆனால், மக்கள் விரைவில் இந்த செயற்கையான தனிமனித வாழ்வில் வெறுப்படைந்து விடுவார்கள். மாறுவார்கள். வாழ்க்கை உழைப்பதற்கும், கவலைப்படுவதற்கும், சக மனிதர்களை விலக்கி வைப்பதற்கும் உரியதல்ல; அது கொண்டாடுவதற்கு உள்ளது என்ற செர்சான் அவர்களது நம்பிக்கை பலிதமானால் நல்லது தான்.

- ஆசிரியர்.

# தேசிய தமிழ் மொழித்தினப்போட்டி

# யாழ்.கல்வி வலயம் முன்னிலை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டிகளில் இதுவரையில் வடமாகாணத்தில் மூன்று தங்கம், மூன்று வெள்ளி, மூன்று வெண்கலம் மற்றும் 10 கேடயங்களை மாணவர்கள் பெற்றுள்ளனர்.

ஹற்றன் சிறிபாதக் கல்லூரியில் நடைபெற்று வரும் இப்போட்டிகளில் வடமாகாணத்திலிருந்து பங்குபற்றிய கல்வி வலயங்களில் யாழ்.கல்வி வலயம் முன்னிலை வகித்து வருகின்றது.

இதுவரையில் நடைபெற்ற போட்டிகளில் திறனாய்வுப் போட்டியில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவி பி.சிந்துஜா, குறுநாடக ஆங்கிலப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவி எஸ். இனுசியா, சிறுகதைப் போட்டியில் நாவற்குழி மகாவித்தியாலய மாணவி ஜே.சோபனா, இசை தனி 3 போட்டியில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி இ.லதாங்கி, இசை தனி 4 போட்டியில் ஹாட்லிக் கல்லூரி மாணவன் எல்.கோமதுரன், இசை 5 போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் ஆர்.நிரோஜன், நடனம் 2 போட்டியில் இந்து மகளிர் கல்லூரி மாணவி பி.நிவேதனா, நடனம் 3 போட்டியில் இந்து மகளிர் கல்லூரி மாணவி எம்.யுவலக்சி, நடனம் தனி 4 போட்டியில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மாணவன் எஸ்.அஜித்குமார் ஆகியோர் முதலிடம் பெற்று தங்கப்பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.

எழுத்துப் போட்டியில் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி எஸ். லனோஜா, இசை தனி 2 போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் பி.சாரங்கன், நடனம் தனி 5 போட்டியில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மாணவி பி.சிந்துஜா ஆகியோர் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளனர்.

இலக்கிய நயத்துடன் கட்டுரை வரைதல் போட்டியில் கனகராயன்குளம் மகா வித்தியாலய மாணவி பி.தரன்சியா, இலக்கணப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவி எஸ்.இமாஜினி, கவிதை ஆக்கப் போட்டியில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மாணவி எஸ்.ஜனனி ஆகியோர் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

குழுநிலைப் போட்டிகளில் இசைக்குழு 1 இல் ஹாட்லிக் கல்லூரியும், நடனம் குழு 1 இல் இந்து மகளிர் கல்லூரியும் நாட்டிய நாடகத்தில் இணுவில் மத்திய கல்லூரியும் நாட்டார் பாடலில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயமும், மேடை நாடகத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும், வில்லுப்பாட்டில் யாழ்.இந்துக் கல்லூரியும் முதலிடம் பெற்றுள்ளன.

இசைக்குழு 2 இல் ஹாட்லிக் கல்லூரியும், விவாதப் போட்டியில் மன்னார் சித்தி விநாயகர் மகாவித்தியாலயமும், இரண்டாம் இடங்களைப் பெற்றன. தமிழ் அறிவுப் போட்டியில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளது.

# பத்திரிகைகள் மூலம் பலத்தை அதிகரிக்கும் அரசியல்வாதிகள்

## - அமைச்சர் ராஜித கிண்டல் -

(கொழும்பு)

அரசியல்வாதிகளில் சிலர் பத்திரிகைகள் மூலமாக தமது அரசியல் பலத்தை அதிகரித்துக் கொள்ள முயற்சித்து வருவதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு பொது நூலகத்தில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழா ஒன்றில் பேசும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல்வாதிகள் இவ்வாறான முயற்சியில் ஈடுபட்டாலும் இணையத்தளங்கள் மூலம் அரசியல்வாதிகள் வெளியிடும் கருத்துக்கள் அடங்கிய செய்திகள் அதிகளவில் வெளிவருகின்றன.

இந்தச் செய்திகள் மக்களின் மனங்களுக்கு செல்கின்றன. எனது மகன் தினமும் இணையத்தளங்களில் வெளியாகும் செய்திகளை படிப்பது வழக்கம்.

அந்தச் செய்திகள் குறித்து அவர் எனக்கு தெளிவுபடுத்துவார். செய்தி இணையத்தளங்கள் நாட்டிற்குள் பெரும் புரட்சியை ஏற்படுத்தி வருவதாக தெரிகிறது.

உண்மையான செய்திகளை இணையத்தளங்களில் மாத்திரமே இன்று படிக்க முடிகிறது.

இன்றைய இளைய தலைமுறையினர் புதிய அரசியல் கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ளனர். இது இணையத்தள செய்திகள் மூலம் தெளிவாகியுள்ளது.

இந்த நிலைமை எங்கு சென்று எந்த இடத்தில் வெடித்து சிதறுமோ என்று தெரியாது.

எந்தத் தலைவருக்கும் நாளைய தினம் பற்றி சிந்திக்க முடியாது. அந்தளவுக்கு இளைய தலைமுறையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

நாம் எமது இளமைக் காலத்தில் இடதுசாரி கொள்கையுடன் இருந்து வந்தோம். ஒரு காலத்தில் இது இல்லாமல் போனது.

தற்போது அது எழுச்சி பெற்று முன்னோக்கி வந்து கொண்டிருக்கின்றது. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அதனை தவிர்க்க முடியாது.

இலங்கையில் 1988-89 ஆம் ஆண்டு புரட்சிகளுக்கு முன்னர் இளைஞர்களின் கைகளில் சித்திரக்கதை பத்திரிகைகளே இருந்தன. புரட்சி நடைபெற்ற போது அவர்களின் கைகளில் துப்பாக்கிகள் இருந்தன.

அதன் பின்னர் அவர்களின் கைகளில் துப்பாக்கிகள் இருக்கவில்லை. அது சிறந்தது. கைவிட்ட துப்பாக்கியை மீண்டும் இளைஞர்கள் கையில் எடுக்கக் கூடும்.

இளைஞர்கள் அந்த இடத்திற்குச் செல்லும் முன்னர் அதனை தவிர்க்க வேண்டியது இன்றைய ஆட்சியாளர்களுக்கு இருக்கும் பொறுப்பு என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கடுமையான வறட்சியினால் 6 மாவட்டங்கள் பெரும் பாதிப்பு

(கொழும்பு)

கடும் வறட்சி நிலைமை காரணமாக, வவுனியா, முல்லைத்தீவு, அநுராதபுரம், பொலநறுவை, மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மே மாதம் முதல் வாரம் முதல் குறித்த மாவட்டங்களில் மழை பெய்யவில்லை என காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், குறித்த மாவட்ட மக்கள் சுத்தமான குடிநீர் இன்றி இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, விவசாய பயிர் செய்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்தப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டத்தின் உலுக்குளம், வீரபுரம், அலகல்ல மற்றும் மடுகந்த ஆகிய பிரதேசங்களில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பராக்கிரம சமுத்திரம், மின்னேரிய குளம் உள்ளிட்ட 72 நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் நூற்றுக்கு 20 சதவீதம் குறைவடைந்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதவிர, 250 சிறிய குளங்கள் பலவற்றில் நீர் வற்றிப் போயுள்ளதாகவும் நீர்ப்பாசனப் பணிப்பாளர் சந்ரா கமலதாச தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த மாவட்ட மக்களுக்கு இலவசமாக குடிநீரை விநியோகிக்கும் நோக்கில் தம்மிடம் உள்ள நீர்த்தாங்கிகள் அந்தந்த மாவட்ட செயலாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

எதிர்வரும் இரண்டு வாரங்களில் குறித்த மாவட்டங்களில் மழை பெய்யக் கூடும் என காலநிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

# தமிழ் தலைமைகள் கூடி படைக்கக்கூடிய முன்னுதாரணம் என்ன?

## திருச்சிற்றம்பலம் பரந்தாமன் கட்டுரையிலிருந்து

**பிரபாகரனின் காலம் போன்று இப்போது இரண்டு பக்கங்கள் இல்லை. தமிழ் பேசும் தலைமைகள் எல்லோருமே இலங்கை என்ற ஒற்றை நாட்டுக்குள் தான் தீர்வைத் தேடுகின்றார்கள். எல்லோரும் ஒரே கொள்கையோடு இருக்கின்றபோது, அவர்கள் கொண்டிருக்கும் கொள்கைகளை வைத்து அல்லாமல், அவர்கள் முன்னெடுக்கும் சேவைகளை வைத்தே அவர்கள் மீதான மக்களின் மதிப்புகள் தீர்மானிக்கப்படும். மக்கள் விளைவுகளைப் பார்க்கவே விரும்புகின்றார்கள்.**

இன்றைய தமிழர் அரசியல் முதன்மையாக இரண்டு தலைமைகளால், இரண்டு தடங்களில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. ஒன்று, அரசியல் அதிகார விவகாரத்தைத் தீவிரமாக முன்னிலைப்படுத்தி, அபிவிருத்தி விடயங்களுக்குக் குறைந்தளவு முக்கியத்துவத்தை கொடுக்கின்றது.

அடுத்தது, அபிவிருத்தி விடயங்களையே மும்முரமாக முன்னிலைப் படுத்தி அரசியல் விவகாரங்களை இரண்டாம் பட்சமாக்குகின்றது.

ஒன்று - எதிர்ப்பு அரசியல். ,



அடுத்தது - இணக்க அரசியல்; ஒன்று - சம்பந்தனும் அவரது கட்சியும். அடுத்தது - தேவானந்தாவும் அவரது கட்சியும்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், கமரூனின் வருகை, மன்மோகன் சிங்கோடு நடந்த சந்திப்புக்கள், இந்தியாவில் நிகழ்ந்த ஆட்சி மாற்றம், தென்னாபிரிக்க அரசின் வருகை, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் சர்வதேச போர்க்குற்ற விசாரணைகள் போன்றவையெல்லாம் முன்னேற்றங்கள் போலத் தென்படுகின்ற விடயங்கள். இந்த விடயங்களோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னை இணைத்து பெருமை கொள்கின்றது. இந்த விடயங்களின் ஊடாக முழுமையான அரசியல் அதிகாரங்களைப் பெற்றெடுத்தாலே, நிலைக்கக்கூடிய பரிபூரணமான சமூக பொருளாதார அபிவிருத்தி சாத்தியமாகும் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு.

இருந்தாலும், உண்மையில் இவையெல்லாம் தொடக்கத்தில் நம்பிக்கை தருவது போன்ற தோற்றத்தை அளிக்கின்றன. ஆனால், நடைமுறையில் அவநம்பிக்கையைத் தாங்கிவருகின்ற விடயங்களாகவே இருக்கின்றன. சாதாரண மக்களது அன்றாட வாழ்வின் மேம்பாட்டினில் நேரடியான ஆக்கபூர்வ விளைவுகள் எதனையும் இந்தப் பாதையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் காண முடியவில்லை.

இராணுவத்தை வெளியேற்றுவது போன்றதான அரசியற் கோஷங்களையும், அரசியல் அதிகாரங்களைப் பெற்றெடுத்தல் போன்றதான அதியுச்ச வாக்குறுதிகளையும், சர்வதேச சமூகத்தின் திருவிளையாடல்கள் பற்றிய இராஜதந்திர விளக்கங்களையும், போர்குற்ற விசாரணைகள் தொடர்பான நீதிக் கதைகளையும் தமிழ் மக்கள் தாராளமாக கேட்டுவிட்டார்கள். ஆனால், அவை எவையுமே உருப்படியான எவற்றையும் இற்றைவரை கொண்டுவந்து சேர்க்கவில்லை.

அரசியல் அதிகாரங்களே எல்லாவற்றுக்கும் அடிப்படையானவை என்பது புரிகின்ற போதிலும், அவற்றைப் பெற்றெடுப்பது எவ்வாறு சாத்தியமாகப் போகின்றது என்ற கேள்வியே சாதாரண மக்களிடத்தில் மிஞ்சிக் கிடக்கின்றது.

இன்னொரு தடத்தில், தேவானந்தாவும் அவரது கட்சியும் - கிடைத்ததையும், கிடைப்பதையும், கிடைக்கக்கூடியதையும் சேர்த்தெடுத்து தமிழர்கள் முதலில் தமது இருப்பைத் திடப்படுத்திக்கொள்ளவேண்டும் என்ற அபிவிருத்திப் பாதையில் பயணிக்கின்றார்கள்.அரசியல் அதிகார விடயங்களை ஓர் ஓரத்தில் வைத்துவிட்டு, மக்களுக்கான வாழ்வாதர பணிகளை முன்னெடுக்கின்றார்கள்.

முழுமையான அரசியல் அதிகாரங்கள் இல்லாமையால் மட்டுப்படுத்தப்பட்ட ஓர் அபிவிருத்தியே செய்யப்படுகின்ற போதிலும், நம்பிக்கையீனத்திற்கு மத்தியில் இருந்து நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் முயற்சி இது என்று சொல்லப்படுகின்றது.

இந்தப் பாதையில் மக்கள் விளைவு-களைப் பார்க்கின்றார்கள். ஏதோ ஒரு வகையில், தமது சொந்த மண்ணில், அமைதியாக வாழும் சூழல் உருவாகுவதாக அவர்கள் கருதுகின்றார்கள். அரசியல் அதிகாரங்களை விட்டுக் கொடுக்க வேண்டியிருந்தாலும், ஒரு நீண்டகாலப் பயனை நோக்குமிடத்து, தேவானந்தா முன்னெடுத்துச் செல்லும் அரசியல்தான் பொருத்தமானதோ என்ற கேள்வி மக்களிடத்தில் எழுகின்றது.

பிரபாகரனின் காலத்தில் தேவானந்தாவும் அவரது கட்சியும் மறுபக்கத்தில் இருந்தனர்; மறுபக்கத்தில் இருந்ததால் துரோக முத்திரையையும் சுமந்தனர். முன்பொரு காலத்தில் துரோக முத்திரை குத்தப்பட்டிருந்த பலர் இப்போது கூட்டமைப்புக்கு உள்ளேயே இருக்கிறர்கள்.

பிரபாகரனின் காலம் போன்று இப்போது இரண்டு பக்கங்கள் இல்லை. தமிழ் பேசும் தலைமைகள் எல்லோருமே இலங்கை என்ற ஒற்றை நாட்டுக்குள் தான் தீர்வைத் தேடுகின்றார்கள். எல்லோரும் ஒரே கொள்கையோடு இருக்கின்றபோது, அவர்கள் கொண்டிருக்கும் கொள்கைகளை வைத்து அல்லாமல், அவர்கள் முன்னெடுக்கும் சேவைகளை வைத்தே அவர்கள் மீதான மக்களின் மதிப்புகள் தீர்மானிக்கப்படும். மக்கள் விளைவுகளைப் பார்க்கவே விரும்புகின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் வாக்குப் பலம் இருக்கின்றது. அந்தப் பலம் எத்தகையது எனில், எவ்வளவு ஆழமான அதிருப்திகள் இருப்பினும் தேர்தல் வருகின்றபோது தமிழ் மக்கள் தமக்கே வாக்களிப்பார்கள் என்ற தைரியத்தினால் வந்த பலம்.

இன்னொரு வகையில் இதனைச் சொல்லுவதானால், தமக்குரிய கடமை-களை முழுமையாகச் செய்யாதுவிடினும் கூட, அடுத்த தேர்தலில் தாம் வென்று விடுவோம் என்ற அசட்டுத் துணிச்சலோடு வந்த பலம்.

இது, ஏறக்குறைய பிரபாகரனிடமிருந்த ஆயுத பலத்தைப் போன்றது. அந்தப் பலம் எத்தகையது எனில், என்னதான் அதிருப்திகள் இருந்தாலும் மக்கள் தனக்குப் பின்னால்தான் நிற்க வேண்டும், அவர்களுக்கு வேறு வழியில்லை என்ற தைரியத்தினால் வந்த பலம்.

இன்னொரு வகையில் சொல்லுவதானால், மக்களுக்கான எந்தவித பொதுச் சேவைகளையும் முன்னெடுக்காது, வெறுமனே ஆயுதப் போராட்டத்தை மட்டும் நடத்திக் கொண்டிருந்தாலும் கூட, மக்கள் தனக்குப் பின்னாலேயே நிற்பார்கள் என்ற அசட்டுத் திமிரோடு வந்த பலம்.

ஆனால், இங்கே வேறுபாடு என்னவெனில், எது நடந்தாலும் மக்கள் தனக்குப் பின்னாலேயே நிற்பார்கள் என்பது திடமான நிச்சயம் ஆகிவிட்டிருந்த போதும், மாறிவிடமாட்டாத ஒரு தெய்வீக வரம் போல அதனைக் கருதிவிடாமல், மக்களுக்கான சேவை-களைப் பிரபாகரன் விரிவாக்கியபடியே இருந்தார். கடுமையான போரும் அரசியல் நெருக்கடிகளும் தன்னை நாற்புறத்தாலும் நெருக்கிய பொழுதுகளில் கூட, பொதுச் சேவைகளுக்கு இடையூறுகள் நேர அவர் விடவில்லை.

வெளிநாடுகளில் இருந்தபடி, இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் எதிர் காலத்தை எழுத முனைகின்ற தமிழ் செயற்பாட்டாளர்களும், தாங்கள் ஆற்றுகின்ற பணிகள் தொடர்பாக மீளச் சிந்திக்க வேண்டும். நம்பிக்கையீனத்திற்கு மத்தியில் நம்பிக்கையினையூட்டி மக்கள் இந்த மண்ணில் நிலைத்து வாழத்தக்க சூழலை ஏற்படுத்த உருப்படியாக எதைச் செய்ய முடியும் என்பதைப் பற்றி அவர்கள் யோசிக்க வேண்டும்.

பிரபாகரனின் வழித்தோன்றல்களாக தம்மை அடையாளப்படுத்த முனைவோர்கள் முதன்மையாக விளங்கிக் கொள்ள வேண்டியது என்னவெனில், அவரது பணிகளைத் தொடர்வதென்பது நிச்சயமாக புலிக்கொடிகளை ஏந்தியபடி மேற்குலக நகரங்களில் கோஷங்களை எழுப்புவது அல்ல.

எந்த மக்களுக்காக இத்தகைய போராட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றனவோ, அந்த மக்களுக்கு அந்தப் போராட்டங்கள் நன்மைகள் எதனையும் தரவில்லை.



பிரபாகரனின் அரசியற் கோட்பாட்டை வலுப்படுத்த விரும்புகின்றவர்கள் செய்யவேண்டியது என்னவெனில், சொந்த மண்ணை விட்டு விலகாமல் மக்கள் இங்கேயே காலூன்றி நிற்பதற்கேற்ற சமூக, பொருளாதாரச் சூழலை இங்கே உருவாக்கப்பாடுபட வேண்டும்.

தமிழர் நிலங்கள் சிங்கள மயமாக்கப்படுவதாக மேற்குலகில் குரல் எழுப்புகின்ற தமிழ் ஆர்வலர்கள் உணரவேண்டியது என்னவெனில், மேற்குலகத்திற்கு அது ஒரு பிரச்சினை அல்ல. செறிவான சனத்தொகை உடைய இறுக்கமான பிரதேசங்களிலிருந்து, வேலை வாய்ப்புக் கிடைக்கின்ற அல்லது வாழ்க்கைச் செலவு குறைவான பிரதேசங்களுக்கு மக்கள் நகர்ந்து செல்வது ஓர் இயல்பான விடயம் என்றே மேற்குலகில் கருதப்படும். இங்கு நில ஆக்கிரமிப்புப் பிரச்சினைக்குத் தீர்வு என்னவெனில், அரசியல் பிரச்சினைகளைக் காரணம் காட்டி இந்த மண்ணிலிருந்து மக்கள் தொடர்ந்தும் வெளியேறுவது நிறுத்தப்பட வேண்டும். தேவையான பொருளாதார நிறைவுகளுடன் மக்கள் இங்கு வாழும் புறச்சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

**தமிழர் நிலங்கள் சிங்கள மயமாக்கப்படுவதாக மேற்குலகில் குரல் எழுப்புகின்ற தமிழ் ஆர்வலர்கள் உணரவேண்டியது என்னவெனில், மேற்குலகத்திற்கு அது ஒரு பிரச்சினை அல்ல. செறிவான சனத்தொகை உடைய இறுக்கமான பிரதேசங்களிலிருந்து, வேலை வாய்ப்புக் கிடைக்கின்ற அல்லது வாழ்க்கைச் செலவு குறைவான பிரதேசங்களுக்கு மக்கள் நகர்ந்து செல்வது ஓர் இயல்பான விடயம் என்றே மேற்குலகில் கருதப்படும். இங்கு நில ஆக்கிரமிப்புப் பிரச்சினைக்குத் தீர்வு என்னவெனில், அரசியல் பிரச்சினைகளைக் காரணம் காட்டி இந்த மண்ணிலிருந்து மக்கள் தொடர்ந்தும் வெளி–யேறுவது நிறுத்தப்பட வேண்டும். தேவையான பொருளாதார நிறைவு–களுடன் மக்கள் இங்கு வாழும் புறச்சூழல் உருவாக்கப்பட வேண்டும்.**

மக்களின் நிலங்களை அரசு பலவந்தமாக பறித்தெடுக்கின்ற பிரச்சினை ஒருபுறம் இருக்க, மக்கள் வாழாத வெற்று நிலங்களில் அரசு யாராவது மக்களைக் கொண்டுவந்து குடியேற்றினால், அதனை ஒரு பிரச்சினையாக எவரும் மேற்குலகத்தின் முன் வைத்தால், அதனை அவர்கள் ஒரு பொருட்டாக எடுக்கப்போவதில்லை.

நிலம் காக்கப்பட வேண்டும் எனில், மக்கள் அங்கு வாழ வேண்டும் மக்கள் அங்கு வாழ வேண்டுமெனில், அதற்கேற்ற சமூக, பொருளாதாரச் சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும்.

மத்திய அரசோடு பங்காளியாக இருப்பதால் அரசியல் அதிகார விடயங்களில் கடும் நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவதில் தேவானந்தாவின் கட்சிக்கு சங்கடங்கள் இருக்கலாம், அது புரிந்துகொள்ளத்தக்கது.

அபிவிருத்தி விடயங்களில் அரசோடு இணைவது அரசியல் அதிகாரத்திற்கான வற்புறுத்தல்களை மழுங்கடித்துவிடும் என்ற சங்கடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இருக்கலாம், அதுவும் புரிந்துகொள்ளத்தக்கது.

ஆனால், ஒருங்கிணைய முடியாது விட்டாலும் கூட, தமிழ் மக்களின் தலைமைகளாக இரண்டு தடங்களில் பயணிக்கின்ற இந்த இரண்டு தரப்பினரும் ஓர் ஒத்திசைவோடு இயங்கலாம்.

**(மாற்றம் இணையதளத்திலிருந்து)**

# 83 இல் அரசின் பிழையான தீர்மானமே 30 ஆண்டுகால போருக்கு வழி வகுத்தது

## அமைச்சர் டியூ தெரிவிப்பு



(கொழும்பு)

1983 ஆம் ஆண்டு அன்றைய அரசாங்கம் எடுத்த பிழையான தீர்மானமே இலங்கையில் 30 ஆண்டுகால போருக்கு வழி வகுத்ததென சிரேஷ்ட அமைச்சர் டி.யூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

1970ஆம் ஆண்டு காலப்பகுதியை விடவும் நாட்டில்தற்போது இனவாதம் அதிகளவில் தலை தூக்கியுள்ளது.

துட்கைமுனு மன்னன் எல்லாள மன்னனுடன் போர் புரிந்தது இனவாதம் காரணமாக அல்ல. அதனால்தான் துட்டகெமுனு மன்னன், எல்லாள மன்னரின் அஸ்தியை வைத்து விஹாரை ஒன்றை அமைத்து மக்களின் கௌரவத்தைப் பெற்றுக் கொடுத்தார்.

அன்றைய விடவும் முன்னேற்ற மடைந்த இன்றைய சமூகத்தில் இனவாதம் தலைதூக்குவதனை ஏற்றுக்கொள்ளமுடியாது. 83ஆம ஆண்டில் அரசாங்கம் எடுத்த இரண்டு பிழையான தீர்மானங்கள் 30 ஆண்டு கால போருக்கு வழியமைத்தன.

வடக்கில் கொல்லப்பட்ட 13 படையினரின் சடலங்களை கொழும்புக்கு கொண்டு வந்து ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் இறுதிக் கிரியைகள் செய்யப்பட்டன. இவ்வாறான ஓர் தருணத்தில் சிங்கள மக்களின் மனோ நிலையை நான் சொல்லத்தேவையில்லை.

அண்மையில் நடைபெற்ற சம்பவங்களைப் பாருங்கள். சிலர முஸ்லிம் மக்களுக்கு எதிராக செயற்பட்டனர்.

இலங்கையைச் சேர்ந்த 14 இலட்சம் பேர் மத்திய கிழக்கு நாடுகளில் கடமையாற்றி வருகின்றனர். முஸ்லிம் நாடுகள் இவர்களைத்திருப்பி அனுப்ப தீர்மானித்தால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் எவருக்கும் புரிவதில்லை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்

# முஸ்லிம் கலாசார ஆடைகளுக்கு தடை எதுவும் இல்லை

## உயர்நீதிமன்றம் அறிவிப்பு

முஸ்லிம்களின் கலாசார ஆடைகளுக்கு தடை எதுவும் விதிக்கப் படவில்லை என உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது. முஸ்லிம் கலாசாரத்தை பிரதிபலிக்கும் ஆடைகளை அணிந்து கொண்டு தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கு பெற்றோர் செல்ல முடியும் எனத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மகளிர் கல்லூரிக்கு முஸ்லிம் பெற்றோர் ஒருவர் செல்லக்கூடாது என தடை விதிக்கப்பட்டதனைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்து. பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தலைமயிலான நீதியரசர் குழு இந்த மனுவை விசாரணை செய்திருந்தது.

முஸ்லிம் தாய்மார் ஹிஜாப் அணிந்து பாடசாலைகளுக்குள் பிரவேசிக்க தடையில்லை என உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது. இதேவேளை, முஸ்லிம் மாணவி ஒருவர் கலாசார ஆடை அணிந்து பாடசாலைக்குள் பிரவேசிப்பதனையும் இந்த ஜனாதிபதி மகளிர் கல்லூரியின் அதிபர் தடை செய்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பிலும் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு மீதான விசாரணைகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா. விசாரணைக்குழுவிற்கு நுழைவீசா மறுத்ததா இந்தியா?

## தெரியாது என்கிறார் வெளிவிவகார பேச்சாளர்

ஐ.நா விசாரணைக் குழுவுற்கு இந்தியா நுழைவீசா வழங்க மறுத்ததா என்பது குறித்து தனக்குத் தெரியாது என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சையட் அக்பருதீன் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நடந்த செய்தியாளர் சந்திப்பில், ஐ.நா விசாரணைக் குழுவுக்கு இந்தியா நுழை வீசா வழங்க மறுத்துள்ளதா என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர், நான் இதுபற்றிய எந்தவொரு தகவலையும், இந்திய நாளிதழ்களில் பார்க்கவில்லை.

இந்தியாவுக்கு வெளியில் உள்ள நாளிதழ் ஒன்றில் தான் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

இந்தியாவுக்கு வெளியில் உள்ள நாளிதழ்களில் வெளியான செய்தி குறித்த நான் கருத்து வெளியிட வேண்டியதில்லை.

ஆனால், எமது அணுகுமுறை குறித்துக் கூறுகிறேன்.

அந்தத்தீர்மானம் குறித்து நாம கவலை கொண்டுள்ளோம், தீர்மானத்தின் போது நாம் சமூகமளித்திருக்கவில்லை.

ஒரு விசாரணையை நடாத்தக கோரும், தீர்மானத்தின் பந்திக்கு எதிராக நாம் வாக்களித்திருக்கிறோம்.

எனவே இந்த விடயத்தில் எமது நிலைப்பாடு, நன்றாகவே தெரியும்.

இந்தநிலையில், அத்தகைய கோரிக்கைகள் ஏதும் விடுக்கப்பட்டதா என்பது எனக்குத் தெரியவில்லை.

ஆனால், இத்தகைய சூழலில் நிலைமையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எமது அணுகுமுறை, முன்னைய நடைமுறைகள், அனுபவங்களின் அடிப்படையில் மிகவும் நன்றாகவே வகுக்கப்பட்டவை.

எவ்வாறாயினும் நீங்கள் குறிப்பிடும் அறிக்கை உண்மையா என்று நான் அறியவில்லை என்று தெரிவித்துள்ளார்.

# ஊவா மாகாண தேர்தலில் ஆளும் கட்சியுடன் கூட்டில்லை

## என்கிறார் அமைச்சர் விமல்



(கொழும்பு)


எதிர்வரும், ஊவா மாகாணசபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடப் போவதில்லை என்று அமைச்சர் விமல் வீரவன்சவின் கட்சி தெரிவித்துள்ளது

ஏற்கனவே தமது கட்சியில் இருந்து பிரிந்து சென்ற ஒருவருக்கு ஆளும் கட்சியின் சார்பில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படுமானால் தாம் பிரிந்து போட்டியிடப் போவதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்

ஏற்கனவே ஆளும் கட்சி, தேசிய சுதந்திர முன்னணியுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளை மீறிச் செயற்படுவதாகவும் அமைச்சர் குற்றம் சுமத்தினார்

# தேசிய மொழிக்கொள்கையை சில அமைச்சுக்கள் உதாசீனம்

## அமைச்சர் வாசு கவலை



(கொழும்பு)

சில அமைச்சுக்கள் தேசிய மொழிக் கொள்கைகளைப் பின்பற்றுவதில்லை என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தேசிய மொழி ஆணைக் குழுவினால் அண்மையில் மேல் மாகாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மொழிகள் இன்றி கலாசாரத்தையோ, உரிமைகளையோ கட்டியெழுப்ப முடியாது. ஒவ்வொரு மொழிக்கும் உரிய அடையாளங்கள் உண்டு. ஒரு மொழியினால் மற்றுமொரு மொழியின் இலக்கியச் சுவையை மெருகூட்ட முடியாது.

இன்று சில அமைச்சுக்கள் நடாத்தும் நிகழ்வுகளில் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகள் பயன்படுத்தப்படுவதில்லை. இது ஆரோக்கியமானதல்ல. சில இடங்கள் ஆங்கில மொழியில் மட்டும் பெயரிடப்பட்டுள்ளன.

ஏன் இவ்வாறு செய்யப்படுகின்றது என்பது புரியவில்லை. நாம் மீண்டும் காலணித்துவ ஆட்சிக் காலம் நோக்கி நகர்கின்றோமா?

நாம் ஆங்கில மொழியைக் கற்க வேண்டும் எனினும் அதனைத் தோளில் சுமந்து செல்ல வேண்டியதில்லை.

சிங்களமும் தமிழுமே நாட்டின் தாய் மொழியாக அமைய வேண்டும்.

நாட்டின் உயர் வகுப்பைப் பிரதிநிதித்துவம் செய்யும் சிலர் ஆங்கில மொழியை மட்டுமே பயன்படுத்துகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரேபியாவில் ஏற்பட்டுள்ள புரட்சி இலங்கையில் சாத்தியப்படாது

## கூறுகிறார் அமைச்சர் செனிவிரட்ன

(கொழும்பு)



அரேபிய புரட்சியைப் போன்று இலங்கையில் புரட்சியை ஏற்படுத்துவது சுலபமானதல்ல என பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனிவிரட்ன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் தெரிவிப்பதைப் போன்று இலங்கையில் கிளர்ச்சிகளை ஏற்படுத்துவது சுலபமானதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் எதிர்க்கட்சி என்று ஒன்று கிடையாது

அரசாங்கத்தின் நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாக விமர்சனம் செய்வதனை விடுத்து எதிர்க்கட்சிகள் கடுமையான போலிப பிரசாரங்களை செய்து வருவதாக தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்தின் தாளத்திற்கு ஏற்ற வகையில் எதிர்க்கட்சிகள் நடனமாடி வருகின்றன.

மக்களின் தேவைகளைப் புரிந்து கொள்ளாது எதிர்க்கட்சிகள் செயற்பட்டு வருகின்றன.

சொந்தக் கட்சியை வழிநடாத்த முடியாதவர்கள் எவ்வாறு மக்களை வழி நடத்துவார்கள் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# இஸ்ரேலுடனான உறவில் மாற்றம் எதுவும் இல்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இஸ்ரேலுடனான உறவுகளில் மாற்றம் எதுவும் இல்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

காஸா நிலப்பரப்பில் இடம் பெற்று வரும் வன்முறைகள் காரணமாக இஸ்ரேலுடனான உறவுகளை இரத்துச் செய்யுமாறு கோரப்பட்டிருந்தது.

எனினும், இந்தக் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

பலஸ்தீனத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் கொள்கையில் மாற்றமில்லை என்ற போதிலும், நாட்டின் உள்விவகாரங்களில் தலையீடு செய்யப் போவதில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தியாவும் இஸ்ரேலுடனான தூதரக உறவுகளைக் கைவிட முடியாது என அறிவித்துள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்னதாக இலங்கை இஸ்ரேலுடனான இராஜதந்திர உறவுகளைக கைவிட தீர்மானித்தமையினால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிட்டது என சிங்களப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

வன்னிப் போரின் போது போராபடகுகள் சார் யுத்தக் கப்பல்கள், ஆளில்லா விமானம், கிபீர் விமானங்கள் போன்றவற்றை இஸ்ரேல் வழங்கியுள்ளது.

இதேவேளை, அரசாங்கம் பலஸ்தீனத்துடனும் மிக நெருங்கிய உறவுகளைப் பேணி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# மிகக்குறைந்த மழைவீழ்ச்சி கிளிநொச்சியில் பதிவு

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வருடம் 1,250 மில்லிமீற்றர் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 350 மில்லிமீற்றர மழை வீழ்ச்சியே பதிவாகியுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் என்.சுதாகரன் தெரிவித்துள்ளார

கிளிநொச்சி மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் மாவட்ட செயலாளர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே சுதாகரன் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மழை வீழ்ச்சியில்லாத காரணத்தினால் கிளிநொச்சி மாவட்டம் தற்போது வறட்சியான நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இதனால் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள குளங்களின் நீர் மட்டமானது வேகமாக குறைவடைந்து வருவதுடன், சில குளங்கள் நீர் இல்லாமல் காணப்டுவதாகவும் தெரிவித்தார். அந்த வகையில் தற்போது இரணை மடுக்குளத்தில் 11 அடி 3 அங்குலமும், கல்மடுக் குளத்தில் 2 அடி 1 அங்குலமும், அக்கராயன் குளத்தில 2 அடி 7 அங்குலமும், கனகாம்பிகைக்குளத்தில் 1 அடியும், புதுமுறிப்புக் குளத்தில் 4 அடியும், குடமுருட்டிக் குளத்தில் 4 அடியும், வன்னே ரிக்குளத்தில் 3 அடி 4 அங்கு லமும் நீர் உள்தெரிவித்தார். அதனை விட, கரியாலை நாகபடுவான், பிரமந்தனாறு ஆகிய குளங்கள் நீர் இன்றி வற்றிய நிலையில் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், குளங்களை நம்பி மேற்கொள்ளப்படும் சிறுபோக நெற்செய்கையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 800 ஏக்கரில் நெற்செய்கை மேற் கொள்ளப்பட்டு இருப்பதாகவும், அந்த நெற்செய்கையின் பயன் முழுமையாகக் கிடைக்கப்பெறும் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

மேலும், பூநகரிப் பிரதேசத்தின் நிலத்தடி நீர் வளம் குன்றி வரும் நிலையில் அப்பிரதேசத்திலுள்ள குளங்களின் நீரினைச் சிக்கனமாக பயன்படுத்தி நிலத்தடி நீரினைப் பாதுகாக்கும் படியும் அவர் கேட்டுக்கொண்டார்.

# மண்டைதீவு மணியகாரன் வீதி புனரமைக்க நடவடிக்கை



( மண்டைதீவு)

மண்டைதீவு புனிதபேதுறுவானவர் ஆலயத்தின் முன்பாகச் செல்லும் மணியகாரன்வீதி வேலணை பிரதேசசபையினரால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மண்டைதீவுப்பகுதி படையினரது கட்டுப்பாட்டில் இருந்து வந்த 1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து இந்தவீதி புனரமைக்கப்படாது அழிவடைந்து போயிருந்தது.

தற்போது இவ்வீதி வேலணை பிரதேசசபையினரது நடவடிக்கை காரணமாக இரும்புக் கம்பிகள் இடப்பட்டு புனரமைக்கப்பட்டு வருகின்றது. மண்டைதீவு புனிதபேதுறுவானவர் நவா ஆலயத்தில் இருந்து கடற்கரைக்குமான வீதியே இவ்வாறு புனரமைப்புச் செய்யப்படுகின்றது (பா)

# வாள் வெட்டுக்கு மூலகாரணம் சந்தேகநபருக்கு விளக்கமறியல்

(கோண்டாவில்)

கோண்டாவில் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டுக்கு மூலகாரணமாக செயற்பட்ட இளைஞரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஓரிரு மாதங்களுக்கு முன்னர் கோண்டாவில் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் ரவீந்திரன் சுகிர்தன் (வயது 21) என்ற இளைஞர் உயிரிழந்தார்.

இவரின் சகோதரர்கள் இருவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு வாள்வெட்டு சம்பவம் இடம்பெறுவதற்கு உயிரிழந்தவரின் சகோதரன் உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களைத் தாக்கியுள்ளார். என்ற குற்றத்திற்காக கோப்பாய் பொலிஸார் இரு தரப்பு இளைஞர்களையும் கைது செய்தனர்.


அதில், உயிரிழந்தவரின் இளையசகோதரன் கடந்த வழக்கில் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

மேற்படி வழக்கு நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குறித்த இளைஞரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (25)

# றமழான் நற்சிந்தனை

நீங்கள் உங்களுக்கிடையில் தர்க்கம் செய்ய வேண்டாம். அதனால் நீங்கள் பலவீனம் அடைவதுடன் ஆற்றலும் குன்றிப் போய்விடுவீர்கள். (திர்குர்ஆன்)

(105)



# முரசின் இன்றைய பலன்


(26.07.2014 சனிக்கிழமை)



ஜய வருஷம் ஆடி மாதம் 10 ஆம் திகதி.
அமாவாசை / சித்தம்
புனர்பூச நட்சத்திரம் பி.ப. 04.26 வரை. பின் பூசம்.
இராகு காலம் 03.02 -04.32 வரை. சுபநேரம் 06.02 - 07.32 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நம்பகத்தில் சந்தேகம் ஏற்பட்டதால் நிலத்தை வாங்குவதற்கு விரும்பாமை, நண்பர் குழாமுடன் சேர்ந்து திரிந்த மகனை அறிவுரை கூறித்திரிந்தச் செய்தல். |
| ரிஷபம் | அதிகபணம் செலவளித்தும் நோய்மாறாத வேளை தெய்வத்திடம் சரணாகதி அடைதல்.தனியார் கல்வி நிலையம் செல்லும் வழியில் அசிங்கமான வார்த்தைப் பிரயோகங்களைக் கேட்டதால் மனுத்துயரடைதல் |
| மிதுனம் | குழந்தைப்பாக்கியம் கிட்டுவதற்கு வழிவகைளை ஆராய ஜோதிடரின் அறிவுரை பெறச்செல்லுதல். உடையதை விளம்பியதால் திருடர் பயம் பற்றிய பதகளிப்பு ஏற்படல். |
| கடகம் | தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவதில் பிதாபிள்ளைகளின் உறவில் முறுகல் ஏற்படல். மனையாளின் நடத்தையில் ஏற்பட்ட சந்தேகத்தன்மை விலகியதால் கவின்நிலை ஏற்படல். |
| சிம்மம் | கைமாறு கருதாமல் உதவிசெய்யப்போய் தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகுதல்.மன அழுத்தமற்ற நிலையில் இருந்தால் பணியில் தேக்க நிலை அற்றுப்போதல். |
| கன்னி | காதல் விவகாரத்தில் தலையிட்டதால் முரண்பாடு முற்றி கைகலப்பு நிலைக்குச் செல்லல்.இடைத்தங்கல் நாட்டில் நீண்டகாலம் வனவாசஞ் செய்யும் நிலைமாறி தாயகம் திரும்புதல். |
| துலாம் | கடனை இறுக்க முடியாது திண்டாடிய வேளையில் நண்பர் உதவி செய்தல்.சட்டவிரோதமான முறையில் மின்னைப் பாவிப்பது கண்டுபிடிக்கப்பட்டு தண்டனைக் குள்ளாதல். |
| விருச்சிகம் | உங்கள் சாமர்த்தியமான பேச்சின்மூலம் தொடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். நெருப்பு கையாளும் போது மிகமிக அவதானம் தேவை. |
| தனுசு | பிரயாணம் தொடங்கு முன் வாகனத்தைப் பரிசீலனை செய்தால் விபத்தினின்றும் தப்புதல்.மதுபோதையைக் கைவிடும்படி கணவனைஅறிவுறுத்திய மனையாளுடன் தகராறு ஏற்படல். |
| மகரம் | மனைகட்ட வருகை தந்து கொண்டிருக்கும் தொழிலாளர்கள் மீது கண்காணிப்பைக் கச்சிதமாக மேற்கொள்ளவும்.அவுஸ்திரேலியா செல்லும் பயணத்தை நீர்வழி மூலம் செல்வதைக் கைவிடவும். |
| கும்பம் | அரசகரும மொழி விளங்காமையினால் கருத்தினைக் கூறுவதில் இயலாதுபோய்விடல்.குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படல். |
| மீனம் | அட்டமத்துச்சனி நிகழ்வதினால் வெளியூர் பயணத்திற்கான முயற்சியைக் கைவிட்டுவிடல். மனதில் தக்க வைத்துள்ள துயரம் நீங்க தெய்வதலங்களுக்கு விஜயம் செய்தல். |





கைதடிமேற்கு சரஸ்வதி சனசமூகநிலையத்தின் ஆடிப்பிறப்பு விழாவின் போது வடமாகாணக்கல்வி அமைச்சர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் பட்டம் விடும் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில் வழங்கப்படுவதையும் காணலாம். (51, 48)

# 83 இல் அரசின் பிழையான தீர்மானமே 30 ஆண்டுகால போருக்கு வழி வகுத்தது

## அமைச்சர் டியூ தெரிவிப்பு



(கொழும்பு)

1983 ஆம் ஆண்டு அன்றைய அரசாங்கம் எடுத்த பிழையான தீர்மானமே இலங்கையில் 30 ஆண்டுகால போருக்கு வழி வகுத்ததென சிரேஷ்ட அமைச்சர் டி.யூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

1970ஆம் ஆண்டு காலப்பகுதியை விடவும் நாட்டில்தற்போது இனவாதம் அதிகளவில் தலை தூக்கியுள்ளது.

துட்கைமுனு மன்னன் எல்லாள மன்னனுடன் போர் புரிந்தது இனவாதம் காரணமாக அல்ல. அதனால்தான் துட்டகெமுனு மன்னன், எல்லாள மன்னரின் அஸ்தியை வைத்து விஹாரை ஒன்றை அமைத்து மக்களின் கௌரவத்தைப் பெற்றுக் கொடுத்தார்.

அன்றைய விடவும் முன்னேற்றமடைந்த இன்றைய சமூகத்தில் இனவாதம் தலைதூக்குவதனை ஏற்றுக்கொள்ளமுடியாது. 83ஆம ஆண்டில் அரசாங்கம் எடுத்த இரண்டு பிழையான தீர்மானங்கள் 30 ஆண்டு கால போருக்கு வழியமைத்தன.

வடக்கில் கொல்லப்பட்ட 13 படையினரின் சடலங்களை கொழும்புக்கு கொண்டு வந்து ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் இறுதிக் கிரியைகள் செய்யப்பட்டன. இவ்வாறான ஓர் தருணத்தில் சிங்கள மக்களின் மனோ நிலையை நான் சொல்லத்தேவையில்லை.

அண்மையில் நடைபெற்ற சம்பவங்களைப் பாருங்கள். சிலர முஸ்லிம் மக்களுக்கு எதிராக செயற்பட்டனர்.

இலங்கையைச் சேர்ந்த 14 இலட்சம் பேர் மத்திய கிழக்கு நாடுகளில் கடமையாற்றி வருகின்றனர். முஸ்லிம் நாடுகள் இவர்களைத்திருப்பி அனுப்ப தீர்மானித்தால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் எவருக்கும் புரிவதில்லை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்

# முஸ்லிம் கலாசார ஆடைகளுக்கு தடை எதுவும் இல்லை

## உயர்நீதிமன்றம் அறிவிப்பு

முஸ்லிம்களின் கலாசார ஆடைகளுக்கு தடை எதுவும் விதிக்கப் படவில்லை என உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது. முஸ்லிம் கலாசாரத்தை பிரதிபலிக்கும் ஆடைகளை அணிந்து கொண்டு தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கு பெற்றோர் செல்ல முடியும் எனத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மகளிர் கல்லூரிக்கு முஸ்லிம் பெற்றோர் ஒருவர் செல்லக்கூடாது என தடை விதிக்கப்பட்டதனைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்து. பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தலைமயிலான நீதியரசர் குழு இந்த மனுவை விசாரணை செய்திருந்தது.

முஸ்லிம் தாய்மார் ஹிஜாப் அணிந்து பாடசாலைகளுக்குள் பிரவேசிக்க தடையில்லை என உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது. இதேவேளை, முஸ்லிம் மாணவி ஒருவர் கலாசார ஆடை அணிந்து பாடசாலைக்குள் பிரவேசிப்பதனையும் இந்த ஜனாதிபதி மகளிர் கல்லூரியின் அதிபர் தடை செய்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பிலும் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு மீதான விசாரணைகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊவா மாகாண தேர்தலில் ஆளும் கட்சியுடன் கூட்டில்லை

## என்கிறார் அமைச்சர் விமல்



(கொழும்பு)

எதிர்வரும். ஊவா மாகாணசபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடப் போவதில்லை என்று அமைச்சர் விமல் வீர வன்சவின் கட்சி தெரிவித்துள்ளது

ஏற்கனவே தமது கட்சியில் இருந்து பிரிந்து சென்ற ஒருவருக்கு ஆளும் கட்சியின் சார்பில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படுமானால் தாம் பிரிந்து போட்டியிடப் போவதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்

ஏற்கனவே ஆளும் கட்சி, தேசிய சுதந்திர முன்னணியுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளை மீறிச் செயற்படுவதாகவும் அமைச்சர் குற்றம் சுமத்தினார்

# ஐ.நா. விசாரணைக்குழுவிற்கு நுழைவீசா மறுத்ததா இந்தியா?

## தெரியாது என்கிறார் வெளிவிவகார பேச்சாளர்

ஐ.நா விசாரணைக் குழுவுற்கு இந்தியா நுழைவீசா வழங்க மறுத்ததா என்பது குறித்து தனக்குத் தெரியாது என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சையட் அக்பருதீன் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நடந்த செய்தியாளர் சந்திப்பில், ஐ.நா விசாரணைக் குழுவுக்கு இந்தியா நுழை வீசா வழங்க மறுத்துள்ளதா என்று அவரிடம் கேள்வி எழுப்பபப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர், நான் இதுபற்றிய எந்தவொரு தகவலையும், இந்திய நாளிதழ்களில் பார்க்கவில்லை.

இந்தியாவுக்கு வெளியில் உள்ள நாளிதழ் ஒன்றில் தான் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

இந்தியாவுக்கு வெளியில் உள்ள நாளிதழ்களில் வெளியான செய்தி குறித்த நான் கருத்து வெளியிட வேண்டியதில்லை.

ஆனால், எமது அணுகுமுறை குறித்துக் கூறுகிறேன்.

அந்தத்தீர்மானம் குறித்து நாம கவலை கொண்டுள்ளோம், தீர்மானத்தின் போது நாம் சமூகமளித்திருக்கவில்லை.

ஒரு விசாரணையை நடாத்தக கோரும், தீர்மானத்தின் பந்திக்கு எதிராக நாம் வாக்களித்திருக்கிறோம்.

எனவே இந்த விடயத்தில் எமது நிலைப்பாடு, நன்றாகவே தெரியும்.

இந்தநிலையில், அத்தகைய கோரிக்கைகள் ஏதும் விடுக்கப்பட்டதா என்பது எனக்குத் தெரியவில்லை.


ஆனால், இத்தகைய சூழலில் நிலைமையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எமது அணுகுமுறை, முன்னைய நடைமுறைகள், அனுபவங்களின் அடிப்படையில் மிகவும் நன்றாகவே வகுக்கப்பட்டவை.

எவ்வாறாயினும் நீங்கள் குறிப்பிடும் அறிக்கை உண்மையா என்று நான் அறியவில்லை என்று தெரிவித்துள்ளார்.

# தேசிய மொழிக்கொள்கையை சில அமைச்சுக்கள் உதாசீனம்

## அமைச்சர் வாசு கவலை



(கொழும்பு)

சில அமைச்சுக்கள் தேசிய மொழிக் கொள்கைகளைப் பின்பற்றுவதில்லை என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தேசிய மொழி ஆணைக் குழுவினால் அண்மையில் மேல் மாகாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மொழிகள் இன்றி கலாசாரத்தையோ, உரிமைகளையோ கட்டியெழுப்ப முடியாது. ஒவ்வொரு மொழிக்கும் உரிய அடையாளங்கள் உண்டு. ஒரு மொழியினால் மற்றுமொரு மொழியின் இலக்கியச் சுவையை மெருகூட்ட முடியாது.

இன்று சில அமைச்சுக்கள் நடாத்தும் நிகழ்வுகளில் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகள் பயன்படுத்தப்படுவதில்லை. இது ஆரோக்கியமானதல்ல. சில இடங்கள் ஆங்கில மொழியில் மட்டும் பெயரிடப்பட்டுள்ளன.

ஏன் இவ்வாறு செய்யப்படுகின்றது என்பது புரியவில்லை. நாம் மீண்டும் காலணித்துவ ஆட்சிக் காலம் நோக்கி நகர்கின்றோமா?

நாம் ஆங்கில மொழியைக் கற்க வேண்டும் எனினும் அதனைத் தோளில் சுமந்து செல்ல வேண்டியதில்லை.

சிங்களமும் தமிழுமே நாட்டின் தாய் மொழியாக அமைய வேண்டும்.

நாட்டின் உயர் வகுப்பைப் பிரதிநிதித்துவம் செய்யும் சிலர் ஆங்கில மொழியை மட்டுமே பயன்படுத்துகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரேபியாவில் ஏற்பட்டுள்ள புரட்சி இலங்கையில் சாத்தியப்படாது

## கூறுகிறார் அமைச்சர் செனிவிரட்ன

(கொழும்பு)



அரேபிய புரட்சியைப் போன்று இலங்கையில் புரட்சியை ஏற்படுத்துவது சுலபமானதல்ல என பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனிவிரட்ன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் தெரிவிப்பதைப் போன்று இலங்கையில் கிளர்ச்சிகளை ஏற்படுத்துவது சுலபமானதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் எதிர்க்கட்சி என்று ஒன்று கிடையாது

அரசாங்கத்தின் நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாக விமர்சனம் செய்வதனை விடுத்து எதிர்க்கட்சிகள் கடுமையான போலிப பிரசாரங்களை செய்து வருவதாக தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்தின் தாளத்திற்கு ஏற்ற வகையில் எதிர்க் கட்சிகள் நடனமாடி வருகின்றன.

மக்களின் தேவைகளைப் புரிந்து கொள்ளாது எதிர்க்கட்சிகள் செயற்பட்டு வருகின்றன.

சொந்தக் கட்சியை வழிநடாத்த முடியாதவர்கள் எவ்வாறு மக்களை வழி நடத்துவார்கள் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# இஸ்ரேலுடனான உறவில் மாற்றம் எதுவும் இல்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இஸ்ரேலுடனான உறவுகளில் மாற்றம் எதுவும் இல்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

காஸா நிலப்பரப்பில் இடம் பெற்று வரும் வன்முறைகள் காரணமாக இஸ்ரேலுடனான உறவுகளை இரத்துச் செய்யுமாறு கோரப்பட்டிருந்தது.

எனினும், இந்தக் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

பலஸ்தீனத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் கொள்கைளில் மாற்றமில்லை என்றபோதிலும், நாட்டின் உள்விவகாரங்களில் தலையீடு செய்யப் போவதில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தியாவும் இஸ்ரேலுடனான தூதரக உறவுகளைக் கைவிட முடியாது என அறிவித்துள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்னதாக இலங்கை இஸ்ரேலுடனான இராஜதந்திர உறவுகளைக கைவிட தீர்மானித்தமையினால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிட்டது என சிங்களப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

வண்ணிப் போரின் போது போராபடகுகள் சார் யுத்தக் கப்பல்கள், ஆளில்லா விமானம், கிபீர் விமானங்கள் போன்றவற்றை இஸ்ரேல் வழங்கியுள்ளது.

இதேவேளை, அரசாங்கம் பலஸ்தீனத்துடனும் மிக நெருங்கிய உறவுகளைப் பேணி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



# கிண்ணம் வென்றது. றோயல்

(நாவாந்துறை)

நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடாத்திய அணிக்கு 5 பேர் கொண்ட கால்பந்தாட்டப் போட்டியில் ஊரெழு றோயல் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றது.

இதில் பலாலி விண்மீன் அணியும் ஊரெழு றோயல் அணியும் மோதின.

ஆரம்பம் முதலே போட்டியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஊரெழு றோயல் அணி அடுத்தடுத்து கோல்களைப் போட்டு முன்னிலையிலிருந்தது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் விண்மீன் அணி செயற்பட்ட போதும், ஊரெழு றோயல் அணியின் பிற்கள வீரர்களின் சிறப்பான தடுப்பாட்டத்தின் மூலம் அனைத்து முயற்சிகளும் முறியடிக்கப்பட்டன. இறுதியில் ஊரெழு றோயல் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (48)

# வீரர்களின் திறன்களை வெளிக்கொணர கிளி. முல்லை ருவென்ரி-20 தொடர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சிறந்த கிரிக்கெட் நுட்பங்களைக் கொண்ட பல வீரர்கள் உள்ளனர். இவர்களின் திறன்களை வெளிக்கொணரவேண்டுமானால் எமது மாவட்டங்களிலும் பல சுற்றுப்போட்டிகளை நடாத்துவதன் மூலம் அது சாத்தியமாகும். இதன் வெளிப்பாடாகவே எமது கழகம் கிளி., முல்லை ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரை நடாத்தியது என கிளி நொச்சி உதயநகர் நியூஸ்ரார் விளையாட்டுக்கழகத் தலைவர் விக்கினேஸ்வரன் றேகன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் முல்லைத்தீவு சென் யூட் அணியும் தருமபுரம் இளந்தாரகை அணியும் மோதின. இதில் முல்லைத்தீவு சென். யூட் அணி கிண்ணம் வென்றதுடன் போட்டியின் ஆட்டநாயகனாக சென் யூட் அணியின் ஜெயராஜ், தொடரின் சிறந்த வீரராக மிராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டி குறித்து எமது செய்தியாளருக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே றேகன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,



கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களுக்கிடையே கடினப் பந்து கிரிக்கெட் போட்டி மிகப்பலவீனமாக உள்ளதென்ற பொதுவான அபிப்பிராயத்தை மாற்றுவதற்காகவே நாம் இந்தச் சுற்றுப் போட்டியை நடாத்த ஏற்பாடு செய்திருந்தோம்.

எமது மாவட்ட கிரிக்கெட் சங்கச் செயற்பாடுகள் தற்போது சிறப்பாக அமைந்திருந்தால் கிளிநொச்சி மாவட்ட கிரிக்கெட் வளர்ச்சிக்கு அது பேருதவியாக அமையும். அத்துடன் இவ்வாறான சுற்றுப் போட்டிகளை நடாத்துவதற்கு நிறுவனங்களும் முழு மன விருப்புடன் முன்வரவேண்டும். இந்த வகையில் இந்த சுற்றுப்போட்டியை நாங்கள் நடாத்துவதற்கு ஐங்கரன் ஸ்ருடியோ, கிருபா லேணர்ஸ், புத்தளத்தைச் சேர்ந்த றோசன் ஆகியோர் ஆதரவு வழங்கியிருந்தனர். பல்வேறு இடர்களின் மத்தியிலும் இப்போட்டியை நடாத்த, எமது நண்பர்கள் பலரும் உதவியுள்ளனர். இவர்களின் உதவியே இச்சுற்றுப் போட்டியின் வெற்றியாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ். மத்திய கல்லூரியில் 09ஆம் வகுப்புவரை கல்வி பயின்று இடப்பெயர்வுடன் கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்த றேகன் மத்திய கல்லூரியில் 15 வயதுக்கு உட்பட்ட அணியில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (29)

# இராணுவத்தின் ஏற்பாட்டில் கால்பந்து பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தலைமையகமும் ஐக்கிய அமெரிக்க நாட்டின் கால்பந்தாட்ட வெளிவாரி சேவை நிறுவனமும் இணைந்து கடந்த 21 ஆம் திகதி முதல் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடாத்திய பயிற்சி முகாமில் படை வீரர்கள், யாழ்ப்பாணம், வலிகாமம் மற்றும் தீவகத்தைச் சேர்ந்த கால்பந்தாட்ட வீரர்களும் கலந்துகொண்டனர்.

மூன்று நாட்கள் கொண்ட இந்தப் பயிற்சி முகாமில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட கால்பந்தாட்ட வீரர்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் பயிற்சி முகாமினை அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பயிற்றுவிப்பாளர்



களான கிறேச் டேவில், மத்தியு வில்மன், சாளிஸ் சாள்ஸ் ஜோன்சன், றொட்னி பீற்றர்சன் அவன்டேவிஸ் ஆகியோர் நடாத்தினர்.

பயிற்சிநெறி முடிவில் குருநாகல் தெரிவு அணியும் யாழ்ப்பாணம் தெரிவு அணியும் சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டியில் கடந்த புதன்கிழமை மோதின. இப்போட்டியில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றமையினால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இறுதி நாள் நிகழ்வில் பிரிகேடியர் திருநாவுக்கரசு, மேஜர் ஜெனரல் பிரியந்த ஜெயசுந்தர ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சி முகாமில் பங்குகொண்ட வீரர்களின் கழகங்களுக்கு பந்துகளை வழங்கி வைத்தனர்.

# கொற்றாவத்தை வீரர்கள் தேசிய போட்டிக்குத் தகுதி

(கொற்றாவத்தை)

கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை வீரர்கள் இருவர் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்று அசத்தியுள்ளனர். யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்ற வடக்கு மாகாண தடகளப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலமே மேற்படி இரு வீரர்களும் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இதில் 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் வ. ரவிவர்மன் தங்கப் பதக்கத்தையும், 13 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் ம. அஜய் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்று அசத்தியுள்ளனர். தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்ற வீரர்களைப் பாடசாலைச் சமூகம் அண்மையில் பாராட்டியுள்ளது. கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் கல்வியிலும் இணை பாடவிதான செயற்பாடுகளிலுல் பல்வேறு சாதனைகளை புரிந்து வருவது மகிழ்ச்சி அளிக்கின்றது. பாடசாலைக்கும் கிராமத்திற்கும் பெருமை சேர்த்த இவர்கள் நிச்சயம் தேசிய மட்டப் போட்டியில் பதக்கம் வெல்வார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு எனவும், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், புலம்பெயர்ந்தவர்கள் எனப் பலர் இம்மாணவர்களைப் பாராட்டி ஊக்குவித்து வருகின்றனர் எனவும் பாடசாலை சமூகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (116)

# தேசிய மட்ட மெய்வல்லுநர் விண்ணப்பிக்க கோரிக்கை

விளையாட்டுச் செய்திகள்

(கொழும்பு)

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் 92ஆவது தேசிய மெய்வல்லுநர் போட்டி கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கில் எதிர்வரும் 12,13, 14ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட ஆண், பெண்களுக்கிடையில் நடாத்தப்படவுள்ள இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் தங்களது விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாகவோ அல்லது தனிப்பட்ட ரீதியிலோ சமர்ப்பிக்க முடியும் என இலங்கை மெய்வல்லுநர் சங்கம் தெரிவித்துள்ளது. விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் எனவும் விண்ணப்பப் படிவங்களை இலங்கை மெய்வல்லுநர் சங்கத் தலைமையகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, விண்ணப்பங்களை பிரேமா பின்னவெல, செயலாளர், இலங்கை மெய்வல்லுநர் சங்கம்,இல. 33 டொரிங்டன் பிளேஸ் கொழும்பு 7 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# விண்மீன், திக்கம் இளைஞர்கள் இறுதியில் நாளை பலப்பரீட்சை





(பருத்தித்துறை)

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் நாளை உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடாத்தும் அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த 23ஆம் திகதி கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் விண்மீன் அணியும், யங்ஹென்றீஸ் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் விண்மீன் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் திக்கம் இளைஞர்கள் அணியும் வதிரி டையமன்ஸ் அணியும் மோதவிருந்தன. இப்போட்டியிலிருந்து டையமன்ஸ் அணி விலகிக் கொண்டதை அடுத்து திக்கம் இளைஞர் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. இதன் மூலம் திக்கம் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இரு அணிகளுக்குமிடையிலான இறுதிப் போட்டி நாளை பிற்பகல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விலகல் முறையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 51 இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மோடி மகிந்த அரசை அரவணைத்துச் செல்வாரா?

- வே. அர்ச்சுணன் -



இலங்கை மீது விசாரணைகளை நடத்துவதற்கு ஐ.நா ஏற்கனவே களம் இறங்கியுள்ள சூழ்நிலையில், அதற்குப் பதிலீடாக இலங்கை சில ராஜதந்திர நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றது. இந்த விவகாரத்தில் தற்போது இந்தியாவின் அணுகுமுறையையே சர்வதேசம் உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

மோடியின் ஆட்சி மாற்றம் இலங்கையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று பல அரசியல் ஆய்வாளர்கள் வாதிட்டு வந்த போதிலும் இலங்கை தொடர்பில் காங்கிரஸ் கடைப்பிடித்த அணுகுமுறையையே தானும் கடைப்பிடிக்கப் போவதாக வெளிப்படையாக அறிவித்துள்ளது. மோடியின் அரசானது இலங்கையை எதிர்க்கின்ற சூழ்நிலையில் இல்லை என்பதை அதனுடைய நகர்வுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இந்தியா அதன் பூகோள அரசியல் நலன் சார்ந்தே வெளியுறவுக் கொள்கையைத் தீர்மானிக்கும். எனவே மோடி அரசு, இலங்கையை எடுத்த எடுப்பில் பகைத்துக்கொண்டு அரசியல் நடத்த தயாராக இல்லை. மோடியின் அரசாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் ஆட்சியாக இருந்தாலும் சரி, இலங்கையில் வேறு நாடுகளின் ஆதிக்கம் மேலோங்குவதை விரும்பாது.

அண்மையில் உயர் மட்ட அதிகாரிகள் குழுவுடன் கொழும்பு வந்த இந்திய விமானப்படைத் தளபதி எயர் சீவ் மார்சல் அரூப் ராஷஹா, பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவையும், இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்சல் கோலித குணதிலக உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் குழுவினரையும் சந்தித்து பேச்சு நடர்த்தி இருந்தார்.

இரண்டு தரப்பு இராணுவ ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர ஈடுபாடுள்ள விவகாரங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாக கூறப்படுகின்ற போதிலும் இரண்டு தரப்பும் இராணுவ ஒத்துழைப்பு வலையமைப்பைப் பேணுவது என்பதில் உறுதி பூண்டுள்ளதாக தெரியவருகிறது.

இலங்கை தொடர்பில் இறுக்கமான கொள்கையையும், போக்கையும் இந்தியாவின் மோடி அரசு கடைப்பிடிக்கும் என்று கூறப்பட்ட எதிர்வு கூறல்கள் எல்லாம் பிழைத்து வருவதையே காணக்கூடியதாக உள்ளது.

பேருவளை, அளுத்கம வன்முறைகள் தொடர்பாக அமெரிக்காவும், இந்தியாவும் அதிர்ச்சியும், விசனமும் அடைந்தமைக்கு பல காரணங்கள் இருந்தன. முதலாவது காரணம், பௌத்த அடிப்படை வாதிகளின் சிறுபான்மையினர் மீதான வன்முறைகள், இரண்டாவது அதன் விளைவு இஸ்லாமிய தீவிரவாதத்திற்கு இடமளித்துவிடும் என்பது.

ஏற்கனவே இலங்கை, மாலைதீவைப் பயன்படுத்தி இஸ்லாமிய தீவிரவாதிகள் தென்னிந்தியாவில் தாக்குதல் நடத்த முயற்சித்து வருவதாக தகவல்கள் வெளியானதன் பிறகுதான் அளுத்கம, பேருவளை வன்முறைகள் நடந்துள்ளன. சென்னையில் குண்டுத் தாக்குதல்களை நடத்த திட்டமிட்ட பாகிஸ்தான் உளவுப் பிரிவுடன் தொடர்புடைய கண்டியைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். அவரிடமிருந்து பல அதிர்ச்சியான தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக இந்திய ஊடகங்களில் வெளியாகியிருந்தன.

பாகிஸ்தான் உளவு அமைப்பும் தீவிரவாத அமைப்புக்களும், இந்தியாவுக்கு எதிரான தாக்குதல்களுக்கான தளமாக, இலங்கையைப் பயன்படுத்த முனைவதாக அவரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களையடுத்து, இந்தியா இலங்கைக்கு இது தொடர்பில் ஆலோசனை கூறியதாக கூறப்படுகிறது. ஆனால் பாகிஸ்தான் தீவிரவாதிகள் இலங்கையைத் தளமாக பயன்படுத்த நாங்கள் அனுமதிக்கவில்லை. அனுமதிக்கவும் மாட்டோம் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ இந்தியாவிடம் உறுதிபடக் கூறியுள்ளார்.

இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இப்போது தெற்காசியாவில் குறிப்பாக மாலைதீவு, இலங்கை நாடுகளில் இஸ்லாமிய தீவிரவாதம் பரவிடுமோ என்ற அச்சம் தொற்றியுள்ளது. ஏற்கனவே ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறி வருகின்றன. அமெரிக்கப் படைகள் அங்கிருந்து முற்றாக வெளியேறிய பின்னர் தலிபான்களின் கவனம் இந்தியாவின் மீது திரும்பும் என்று பாதுகாப்பு வல்லுநர்கள் இந்தியாவை எச்சரித்துள்ளனர்.

இதனால்தான் ஆப்கானிஸ்தானுக்கு பாதுகாப்பு மற்றும் உட்கட்டமைப்பு உதவிகளை இந்தியா கூடுதலாக வழங்கி வருகின்றது. இசிஸ் போன்றதொரு அடிப்படைவாத எழுச்சி ஏற்பட்டால் ஈராக்கில் நடப்பது போன்ற நிலை ஆப்கானிஸ்தானில் ஏற்படாது என்று கூறுவதற்கில்லை. ஏற்கனவே இது போன்றதொரு நிலையை ரஷ்யப் படைகள் வெளியேறிய பின்னர் ஆப்கானிஸ்தான் 1990 களின் தொடக்கத்தில் எதிர்கொண்டிருந்தது.

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் இஸ்லாமியத் தீவிரவாதம் குறித்து இந்தியா அதிக கவலை கொண்டுள்ள நிலையில் இலங்கையிலும், மாலைதீவிலும் அது வேரூன்றுமானால் இந்திய பாதுகாப்புக்கு மேலும் அச்சுறுத்தல் ஏற்படும். அது உலகளாவிய தீவிரவாத செயல்களுக்கு இன்னும் முனைப்பை ஏற்படுத்தும் என்று அமெரிக்காவும் கருதுகின்றது.

இத்தகைய பின்புலத்தில், இலங்கையுடன் அதிகளவில் முட்டி மோதிக்கொள்ளாமல் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதிலேயே இந்தியா கவனம் செலுத்தும். எனவே இந்த விடயத்தில் இலங்கையின் ஒ[illegible]ழைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக இந்தியா ஏனைய விவகாரங்களில் விட்டுக் கொடுக்கவும் தயங்காது.

இந்தியாவிற்கு தனது பூகோள நலன் மற்றும் பாதுகாப்பே முக்கியமானதும், முதன்மையானதுமான சவால் ஆகும். எனவே மோடி அரசு மகிந்த அரசை அரவணைத்துச் செல்வதற்கே வாய்ப்புகள் உள்ளன்.

# உலகக்கிண்ண கால்பந்தில் கலக்கிய பாடகி ஷகிரா...!



உலகக் கிண்ண கால்பந்துப் போட்டிகளை விட விறுவிறுப்பாக இருந்தது நிறைவு விழாவில் நடந்த பொப் பாடகி ஷகிராவின் நடனமும் பாடலும். ஏறத்தாழ 50 மில்லியன் ரசிகர்களை உற்சாகத்தின் உச்சிக்கே கொண்டு சென்ற இந்த நிகழ்ச்சியைப் பாராட்டாதவர்களே இல்லை. அவ்வளவு துள்ளல், விறுவிறுப்பு, உற்சாகம்..!

யார் இந்த ஷகிரா?

முழுப் பெயர் ஷகிரா இஸபெல் மெபாரக் ரிபோல். 1977 பெப்ரவரி 2-ஆம் திகதி கொலம்பியாவின் பாரன்க்வில்லா நகரில் பிறந்தவர். இப்போதைய வயதைக் கணக்கிட்டுப் பார்த்துக்கொள்ளுங்கள். ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்!

இவரது தந்தை லெபனான் நாட்டுக்காரர். தாய், கொலம்பியாக்காரர். அரேபியா மற்றும் கொலம்பியாவின் பாரம்பரிய இசைகளின் கலவைதான் இவரது பாடல்கள். தனது எட்டாவது வயதில் தனது முதல் பாடலை எழுதினார். பதின்மூன்று வயதில் இசைத்தொகுப்பு வெளியிட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

இவரது முதல் இரண்டு இசைப்பேழைகளும் முழுத் தோல்வி அடைந்தன! மூன்றாவது இசைப்பேழையின் ஒவ்வொரு சிறிய விஷயத்திலும் இவரே முழுக்கவனம் செலுத்தி, கடுமையாக உழைத்தார். 1996-ஆம் ஆண்டு "வெற்றுக் கால்கள்" என்ற பெயரில் வெளியான அந்த இசைத்தொகுப்பு 3 மில்லியன் எண்ணிக்கையில் விற்றுத் தீர்ந்தன. அதன்பிறகு ஏறுமுகம்தான்.

முதலில் ஸ்பானிஷ் மொழியுலகில் மட்டுமே பிரபலமாக இருந்த இவர், வெகுவிரைவில் ஆங்கிலத்திலும் பாடி உலக இசை ரசிகர்களைத் தனது கவர்ச்சி நடனத்தாலும் எல்லாவற்றுக்கும் மேலாக இனிமையான குரலாலும் தன்வயப்படுத்தினார். 20ஆவது வயதில் அமெரிக்காவின் மியாமி நகருக்குக் குடும்பத்தோடு குடியேறினார்.

2000ஆம் ஆண்டில் தனது முதல் கிராமி விருதைப் பெற்றார். அதன்பிறகு பொப் இசை உலகின் சூப்பர் ஸ்டார்களில் ஒருவரானார்.

2010இல் வெளியான இவரது இசைப்பேழையின் ஒரு பாடல்தான் "வக்கா... வக்கா...." இந்தப் பாடல் 2010ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக்கிண்ண கால்பந்து போட்டிகளின் தீம் பாடலாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, தொடக்க நாள் நிகழ்ச்சியில் பாடி, ஆடி கவர்ந்தார். அப்பாடல் பட்டி தொட்டியெங்கும் ஒலித்தது.

2012ஆம் ஆண்டுக்குள் எல்லாக் காலங்களிலும் உலகிலேயே மிக அதிக ரசிகர்களைப் பெற்ற ஒரே கொலம்பிய பாடகி என்ற இடத்தைப் பிடித்தார்.

குழந்தைகளுக்காக ஓர் அமைப்பை நிறுவி கொலம்பியா நாட்டுக் குழந்தைகளுக்கு நல்ல கல்வி அளிப்பதில் தான் சம்பாதிக்கின்ற பணத்தில் பெரும் பகுதியைச் செலவிடுகிறார். ஐ.நா.சபையின் அமைப்பான யுனிசெப்பின் நல்லெண்ணத் தூதராகவும் பணியாற்றுகிறார்.


ஸ்பெயின் நாட்டுக் கால்பந்து வீரர் ஜெரார்ட் என்பவருடன் தற்போது வாழ்ந்து வருகிறார். இவருக்கு மிலன் என்ற பெயரில் ஓர் ஆண் குழந்தையும் இருக்கிறது.

இந்த மிலனுடன்தான் உலகக் கோப்பை இறுதி விழாவில் தோன்றினார்.

# தேன் சில எச்சரிக்கைகள்!

- ◆ நெருப்பின் மீது வைத்து தேனைச் சூடாக்கக் கூடாது.
- ◆ அசைவ உணவுகளுடன் தேன் உண்ணக் கூடாது.
- ◆ சம அளவில் நீர் கலந்தும் குடிக்கக் கூடாது.
- ◆ நெய், எண்ணெய், வெண்ணெய் முதலியவற்றுடன் தேன் கலக்கக் கூடாது.
- ◆ மது அருந்திய பின் தேன் உண்ணக்கூடாது.
- ◆ தேன் கலந்த பொருட்களுடன் சீனி சேர்க்கக் கூடாது. சீனி தேனின் நல்ல பண்புகளை அழித்துவிடும்.
- ◆ குளிர்காலத்தில் வெதுவெதுப்பான பாலோடும், கோடையில் குளிர்பானத்தோடும் தேன் கலந்து சாப்பிடலாம்.





# பறத்தலில் வீழ்தல் இனிது

– எம்.டி.முத்துக்குமாரசாமி –

ரிச்சர்ட் பாக்கின் "ஜொனாதன் லிவிங்ஸ்டன் கடற்பறவை" எல்லா கடற்பறவைகள் போல அல்லது எல்லா பறவைகளையும் போல உணவுக்காக மட்டும் பறக்கின்ற பறவை அல்ல. பறத்தலின்பத்தினால் பறவைக்கு பறத்தலென்ற செயலே எப்படி வாழ்தலாகிறது என்பதை "ஜொனாதன் லிவிங்ஸ்டன் சீகல்" ஒரு நீதிக்கதை வடிவத்தில் சொல்கிறது.

கலை என்றால் என்ன, வாழ்க்கையே கலையாவது எப்போது, கலை எதற்காக கூட்டத்திலிருந்து விலகி தனியாக இருக்கவேண்டியதன் அவசியத்தை முன் நிபந்தனையாகக் கொண்டிருக்கிறது ஆகியவற்றை "ஜொனாதன் லிவிங்ஸ்டன் சீகல்" போல கவித்துவமாக சொன்ன வேறொரு கதை இல்லை. மிகுந்த உற்சாகத்தினையும், உத்வேகத்தினையும், கலை ஈடுபாட்டின் மேல் அளப்பரிய நம்பிக்கையினையும் உண்டாக்குகிற கதை அது.

ஜொனாதன் கடற்பறவைக்கு நாவலின் ஆரம்பத்திலேயே அது பறப்பதற்குக் காரணம் உணவே என்று வலியுறுத்தி சொல்லப்படுகிறது; அந்த வலியுறுத்தலை மீறியே ஜொனாதன் இலக்கற்ற பறத்தலை வாழ்தலாக அடையாளம் கண்டுகொள்கிறது.

என்னுடைய நோக்கம் வானில் மிதக்கும் பறவைகள் தங்கள் இரைகள் நோக்கி வீழ்வதிலுள்ள அழகையும் கம்பீரத்தையும் கவனப்படுத்துவதன் மூலம் "ஜொனாதன் லிவிங்ஸ்டன் சீகல்" வழங்கும் வாசிப்பனுபவத்தை உங்களுடையதாக்கிக்கொள்ள கோருவதுதான்.

நான் பயணம் செய்த விமானம் வானத்திலிருந்து ஒரு முறை கீழே விழுந்திருக்கிறது. 2000 ஆண்டில் சென்னையிலிருந்து விமானத்தில் கல்கத்தாவுக்கு பயணம் செய்துகொண்டிருந்தேன். மே மாதம். அந்தப் பருவத்தில் வருடந்தோறும் வங்காள விரிகுடாவில் தாழ்வழுத்த மண்டலங்கள் உருவாகும். பொதுவாகவே வங்காள விரிகுடாவில் கடல் இந்தியாவின் மேற்கிலிருக்கும் அரபிக்கடலைப் போல அமைதியானது அல்ல. வங்காள விரிகுடாவில் கடல் பல கொந்தளிப்புகளையும் புயல்களையும் வான வேடிக்கைகளையும் உருவாக்க வல்லது. "வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை" என்ற விஷ்ணு துதிக்கான வரி வங்கக் கடல் பற்றிய அனுபவத்தால் உண்டானது.

பருவ மழையும் தாழ்வழுத்த மண்டலங்களும் மே, ஜூன், ஜூலை மாதங்களில் வங்காள விரிகுடாவிலும் அதையொட்டிய இந்திய நிலப்பகுதிகளிலும் வானில் பல air pockets என்று அழைக்கப்படுகின்ற தாழ்வழுத்த வெற்றிடங்களை உண்டாக்குகின்றன. 2000 வருடம் மே மாதம் நான் பயணம் செய்த விமானம் வங்காள விரிகுடாவின் மேல் வானத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய air pocket ஒன்றினுள் வசமாக மாட்டிக்கொண்டது.

இரை நோக்கி இறக்கைகள் மடக்கி வானில் இருந்து செங்குத்தாக கீழே விழும் பறவை போல எங்கள் விமானம் கீழே விழுந்தது. நடுவானில் அதன் வீழ்தலைக் கட்டுப்படுத்தி விமானி காற்றழுத்த அறையிலிருந்து வெளிக்கொணர முயன்றபோதெல்லாம் விமானமே துண்டு துண்டாய் சிதறப்போவது போல அதிர்ந்து அடங்கியது.

பயணிகள் அலற ஆரம்பித்துவிட்டார்கள். சுமார் முப்பத்தைந்து நிமிட நேரம் நீடித்த அந்த வீழ்தலும் பறத்தலும் யுகாந்திரமாய் நீடிப்பது போல தோன்றியது.

அந்த அரைமணி நேர நரக வேதனையும் அச்சமும் நிறைந்த நிமிடங்களில் விமானத்தின் கப்டனிடமிருந்து எந்த ஒரு அறிவிப்பும் இல்லை. என்ன நடக்கிறது என்பதைப் பற்றி கிலேசமும் பயணிகளான எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

விமானம் காற்றழுத்த வெற்றிடப் பொறியிலிருந்து தப்பித்து கல்கத்தா செல்வதற்கு பதிலாக அருகாமையிலிருந்த புவனேஷ்வர் சென்று தரையிறங்கியது. பூமியைத் தொடுவதற்கு சற்று முன்னர்தான் விமான கப்டன் ஒலிபெருக்கியில் முதல் முறையாக அறிவித்தார்: "நாம் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிவிட்டோம். வானில் காற்றழுத்த வெற்றிடத்தில் நம் விமானம் சிக்கிக்கொண்டது. நான் வடக்கு, கிழக்கு, மேற்கு என்று ஒவ்வொரு திசையாய் மோதி வெளிவரப்பார்த்தேன். ஆனால் மூன்று திசைகளிலும் மேகங்கள் அடர்ந்து வழிவிடவில்லை. நல்ல வேளையாக தெற்கில் நமக்கு வழி கிடைத்தது. புவனேஷ்வரில் நாம் தரையிறங்குகிறோம். நான் உங்களை பயமுறுத்தவேண்டாம் என்றுதான் எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை. அறிவிப்பு எதுவும் இதுவரை வெளியிடாததற்கு மன்னிக்கவும். உங்கள் அனைவரையும் பத்திரமாக பூமியில் இறக்குவது எனக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. வானில் இருந்து இரை நோக்கி கீழே விழும் பறவைகளுக்கு இது தினசரி அனுபவம். நமக்கு கடவுளின் ஆசி கிடைத்த பேரனுபவம்."

புவனேஷ்வரில் விமானம் தரையிறங்கியதும் பயணிகளின் ஆனந்தக்கூச்சல் எழுந்தது.

அருணாசலப் பிரதேசத்திலுள்ள மிஷிங் ஆதிவாசிகளின் மூப்பர் செர்னாவ் மிரி என்னுடைய நல்ல நண்பர். செர்னாவ் மிரி இருவாட்சிகளை (hornbills) நுட்பமாகத் தெரிந்து வைத்திருப்பவர். அவரிடம் நான் விமானம் பறவை போல கீழே விழுந்ததைச் சொன்னேன். செர்னாவ் மிரி இருவாட்சிகள் இரை நோக்கி கீழே வானில் இருந்து எய்த அம்பு போல இறங்கும்போது அவை உயிர் வெறுத்து உயிர் வாழ விழைகின்றன என்று சொன்னார்.

இருவாட்சிகளின் வாழ்வினைப் பற்றி செர்னாவ் மிரி எனக்களித்த நுட்பமான பார்வை ரிச்சர்ட் பாக்கின் நாவல் "ஜொனாதன் லிவிங்ஸ்டன் சீகல்"லில் இல்லாதது; ஆனால் பாக்கின் நாவலை மீண்டுமொரு முறை வரி வரியாய் வாசிக்க வைத்தது.

காடுகளில் ஏன் யு-டியூப் வீடியோக்களில் இரை பிடிக்க கீழே விழும் பறவைகளைப் பார்க்கும்போது நான் பயணம் செய்த விமானம் கீழே விழுந்த அனுபவம் மீண்டும் நினைவுக்கு வருகிறது. பறத்தலுக்கான உந்துதல் அந்த உயிர் வாழும் இச்சையில் இருக்கிறது.

கோழிகள், தவிட்டுக் குருவிகள் போன்றவையும் பறவைகள்தான் அவற்றிற்கு உயரப் பறந்து உயிர் வெறுத்து இரை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

உயிர் வாழ இச்சை நிறையும் மனதினையே அமிர்தகலசம் என்று புராணங்கள் உருவகித்ததாய் எனக்கொரு சம்சயம் உண்டு; அமிர்த கலசங்களை உயரப் பறக்கும் பறவைகள் தங்களகத்தில் கொண்டிருக்கின்றன.

# அந்த்ரெய் தார்கொவ்ஸ்கி - ஸொலாரிஸ் [1972]


– வெ.ராமசாமி –

நான் முதலில் இந்தப் படத்தைப் பார்த்தது 1980இல். அரண்டு விட்டேன் - அதற்குச் சில வருடங்கள் முன் தான் ஸ்டான்லி க்யுப்ரிக்-ன் "2001: ஒரு விசும்புச் சாகசம்" (2001: A Space Odyssey) பார்த்திருந்தேன் என்றாலும் கூட! பல தளங்களில், ஒரு பிரமிக்கத்தக்க படமாக இது இருந்தது.

ஸ்டானிஸ்லாவ் லெம் எனும் போலந்து தேச அறிவியல்-புனைவு எழுத்தாளர் கைவண்ணத்தில் வெளிவந்த நாவலின் திரையுருவாக்கம் இது.

பொதுவாகவே - எனக்கு ஏதாவது ஒரு புனைவு மிகவும் பிடித்திருந்தால், அது பின்னர் ஒரு திரைப்படமாக எடுக்கப்பட்டால், முடிந்த வரை, அதனைப் பார்க்காமல் இருந்துவிடுவேன். ஏனெனில் - ஒரு புனைவைப் படித்து அதன்மேல் நான் எழுப்பியிருக்கும் பல கட்டுமானங்களுக்கு, புரிந்துகொள்ளல்களுக்கு - பெரும்பாலும் திரைப்படங்கள் ஊறு செய்வனவாகவே இருப்பதுண்டு.

தார்கொவ்ஸ்கி என் அபிமானத் திரை இயக்குநர் - இருந்தாலும்கூட அவரால் லெம்-ன் கதையைக் கட்டுக்குலையாமல் எடுக்கக்கூடுமா என்று எனக்குச் சந்தேகமாகவே இருந்தது. கொஞ்சம் அடிவயிற்றுக் கலவரத்துடன் தான் இதனைப் பார்த்தேன். ஆனால் இயக்குநர் ஏமாற்றவில்லை.




**இதுதான் கதை:**

"விண்வெளி ஆய்வுகூடத்தில் தற்கொலை செய்து கொண்ட வீரரின் இறப்பை ஆராய அனுப்பப்படும் உளவியல் மருத்துவர் கிறிஸ் கெல்வின், நியூட்ரன்களால் செயற்கையாக உருவாக்கப்படும், இறந்து போன தன் மனைவி ஹாரியை சந்திக்கிறார். எது அசல், எது பிம்பம் என்று புரியாமல், மனம் பிறழ்ந்து பூமிக்குத் திரும்புகிறார்.

ஆய்வுகூடம் அருகில் இருக்கும் கடலின் உயிரினம் ஒன்று, கூடத்தில் உள்ளவர்களின் மூளையைப் படிக்கும் சக்தி கொண்டதாக இருக்கிறது. அவர்களது மூளையின் பழைய நினைவுகளைக் கிண்டி சில பிம்பங்களை எடுத்துக்கொண்டு, அவர்கள் விரும்பும் நபர்களை, நியூட்ரன்கள் மூலம் உருவாக்கி அவர்களை குழப்பமடையச் செய்கிறது."

கதைக் கட்டும், தத்துவ விசாரமும், பெரும்பாலும் மிகச் சரியான அறிவியல் கட்டமைப்புகளும், அற்புதமான இசையும் (எட்வேர்ட் ஆர்டெம்யெவ்) - அதுவும் யோஹான் ஸெபாஸ்டியன் பாக்ஹ் அவர்களின் "ஏசுவே, உன்னை நான் அழைக்கிறேன்" (=Ich ruf zu dir, Herr Jesu Christ, 1732) அழகாக கீபோர்ட் வடிவம்தான் படத்தின் தீம். மறுபடியும், மறுபடியும்... எப்படித்தான் தேடித்தேடி இந்த அற்புதமான இசையை படத்தின் மெலிதாக இழையோடும் சோகத்துடன், புதிர்களுடன் ஒன்று சேர்த்தார்களோ!

இளையராஜா அவர்கள் ஒருசமயம் சொன்னதைப் போல (அவர் சொல்லியிருக்காவிட்டாலும், சொல்லக்கூடியவர்தான்!) பாக்ஹ் ஒரு நாததேவன் தான்!

ஸொலாரிஸ் அமைதியான, ஆரவாரமற்ற, ஆழமான படம். நீங்கள் இதுவரை இப்படத்தைப் பார்க்கவில்லையானால், மிக அவசியமாகப் பார்க்கவேண்டிய ஒன்று!


**வ**லது பக்கம் சாய்த்து எழுதுகிறவர்கள் பொதுவாக ஊக்கம் உழைப்பு உள்ளவர்களாகவும், தம்மைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் விஷயங்கள் ஆகிய எல்லாவற்றையும் அறிந்துகொள்ள ஆசைப்படுபவர்களாகவும் எல்லாருடனும் சகஜமாய் பழகுகிறவர்களாகவும் இருப்பர் என்பது கணிப்பு.

**செ**ங்குத்தாய் எழுதுகிறவர்கள் பெரும்பாலும் உணர்ச்சி வசப்படுபவர்களாகவும் தனிமை விரும்பிகளாகவும் இருப்பார்கள்.

**இ**டது பக்கம் சாய்த்து எழுதுகிறவர்கள் தனிமை விரும்பிகளாக இருப்பதோடு எதிர்காலம் குறித்து பயந்த சுபாவம் உடையவர்களாக இருப்பார்கள்.

**வா**ர்த்தைகளுக்கு இடையேவிடப்படும் இடைவெளி சம அளவாக இருந்தால்

# உங்கள் கையெழுத்து எப்படி?



எழுதுகிறவர்கள் தெளிவான மனம் எண்ணம் உடையவர்களாக இருப்பார்கள்.

**இ**டைவெளி சமஅளவாக இல்லையென்றால் அது அவர்களின் குழப்பமான மனோநிலையைக் காட்டுகிறது.


## மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு



வட்டிக்கு ஆசைப்பட்ட வங்கிகளும் தப்பிவிட்டன, வாங்கிய கடனாளிகளும் தப்பிவிட்டன. இடையில் நின்று இரக்கப்பட்ட அரச உத்தியோகத்தரகளே தற்போது பாதிக்கப்படுகின்றனர். இந்தப்பிரச்சினை தற்போது பாரியகுடும்பப் பிரச்சினைகளாகவும் குடும்ப பிரிவுகளிற்கான அடிப்படையாகவும் மாறி

# கடன் பிணைக்கு கையொப்பமிட்டு விட்டு

வருகின்றன. தற்கால சூழலில் பரவலாக ஏற்பட்டுள்ள செலாவணித் தொல்லைகளால்



அடிப்படையில் தங்கள் பதவி உயர்விற்காக வங்கி முகாமையாளர்கள் செய்யும் இந்த செயற்பாடு இறுதியில் அப்பாவி அரச உத்தியோகத்தர்களை வந்து பாதிக்கின்றது. மறுபுறத்தில் பிணையாளியாகிய இவர்கள் ஏன் கையொப்பமிடுவாரென வங்கியாளர்கள் வாதிடமுடியும். அதுவும் உண்மைதான் ஆனால் உறவுகள் அயலவர்கள் என வந்து கேட்கும் போது மறுப்பதும் ஒருதுருவத்தில் சமூகப்பிரச் சினைகளையும், உறவுநிலைத் துண்டாட்டஙகளையும் ஏற்படுத்தும் விடையமல்லவா இதையும் மக்கள் மயப்படுத்தப்பட்ட வங்கிகள் சிந்திக்க வேண்டுமல்லவா?...

குறிதத ஓர் வங்கிக்கிளை முகாமையாளர் தறபோது விவசாயிகளைத் தேடி வீடு வீடாக அலைந்து திரிகின்றாராம் ஏன் தெரியுமா?... அளவுக்கதிகமாக விவசாயக் கடன்களை வழங்கி விட்டு மீளப்பெற முடியாத கட்டத்தல் வங்கியில் இருந்து இவர் நீங்கப்படடு கடன் அறவிடப்பணிக்கப்பட்டுள்ளதாம் இதுவெல்லாம் தேவைதானா?... தற்போது இடையில் நிற்பவர்கள்தான் பாதிக்கப்படும்

## அவதியுறும் அரச உத்தியோகத்தர்கள்

பொருளாதாரப்பிரச்சினை பெரும்பாலான குடும்பங்களில் முற்றுகையிட்டு விட்டது. இதனால் திட்டமிட்டுபெற்ற வங்கிக் கடன்களைக் கூடகட்டமுடியாத சூழல் பலருக்கு ஏற்பட்டுள்ளது. இப்பிரச்சினையில் இருந்து விடுபட பல கடனாளிகள் கைவிரிப்பதோடு சிலர் தலை மறைவாகியும் வருகின்றனர். இந்தச் சூழலில் வங்கிகள் சிறிதும் தயக்கமின்றி உடனடியாக பிணையாளியாகிய அரச உத்தியோகத்தர்களின் சம்பளக் கணக்கி லிருந்து கழித்து வருகின்றனர். சட்டப்படி இது சரியாக இருப்பினும் சமூகப்பிரச்சினைகள் உட்பட்ட பல குடும்பப்பிரச்சினைகளை இது உருவாக்குகின்றன. என்பதை முதலில் வங்கியாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வட்டியை சம்பாதித்து வங்கியின் வருமானத்தைப் பெருக்குவதற்காக வங்கி முகாமையாளர்கள் கடனாளியின் வருமானத்தை சிறிதேனும் வங்கி உறுதிப்படுத்தாது எல்லைகளற்ற ரீதியில் கடன்களைக் கொடுக்கின்றனர். சுயலாபத்தின் சூழல் உருவாகியுள்ளது. எனவே சமூகப் பொறுப்புடனும் வங்கி நிர்வாகங்கள் சற்றுச் சிந்திக்கவேண்டும்.

ஓர் தனிநபருக்கு கடன்களை வழங்கும்போது அவரின் வருமான எல்லைகளை உறுதிப்படுததுங்கள் இல்லையேல் சொத்துப்பிணைக்கடன் மற்றும் வியாபார நடைமுறைசார் கணக்கின் தற்காலிகக்கடன் (ஓடி) B.O.D,T.OD போன்றவற்றின் மூலம் வங்கி வருமானத்தைத் திரட்டலாம் தானே பிணையாளிகள் மூலம் உருப்பெறும் கடன்களை சற்றுக்குறைக்கலாமல்லவா, பல அரச உத்தியோகத்தர் குடும்பங்கள் இதனால் தற்போது பிரிந்துவிட்டன. பசியோடு தம் பிள்ளைகள் தவிர்க்க அடுத்தவர் கடனை பல அரச உத்தியோகத்தர்கள் கட்டிக்கொண்டிருக்கின்றார்கள். இதுமிககொடூரமான செயற்பாடு. தயவுசெய்து இதற்கோர் எல்லை போடுங்கள் இதுவும் ஓர் சமூகக்கடமை என்பதை வங்கியாளர்கள் மறந்து விடாதீர்கள்.


-தீபன்

## பாடசாலைக்கு வரும் மாணவர்களின் பிற்பாரத்தைக் குறைக்க பாடசாலை நிர்வாகங்கள் நடவடிக்கை எடுக்காதா...?

பாடசாலைக்கு செல்லும் பிஞ்சுகள்படும் துன்பத்தை பலர் பார்க்கின்றோம். இருப்பினும் இது தொடர்பாக சிந்தித்து இதில் மாற்றங்களைக் கொண்டு வர எவரும் இதுவரை முன்வரவில்லை. ஏராளமான புத்தகங்களையும் கொப்பிகளையும் கொண்டு பெரும் பாரச்சுமையோடு மூன்றுமாடி நான்குமாடியென பிள்ளைகள் ஏறி இறங்கிவிட்டு இரவுவேளைகளில் கொதிவலியால் அவதிப்படுகின்றார்கள் பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டும் இருக்கின்றார்கள்.

இதனை ஏதோ ஓர் திட்டமிடல்களின் அடிப்படையில் குறைக்கமுடியாதா? வீட்டு வேலைக்கென்று தனியொரு கொப்பிகளை உருவாக்கிவிட்டு பாடசாலை வகுப்பறையில் பிரத்தியேக பாக் (Bag) ஒன்று வைத்துப் பேணும் நடைமுறைகளால் பெரும் பாரத்தைக் குறைக்கலாம். அல்லது நேர சூசிகைளைச் செப்பனிடுவதன் மூலம் இப்பெரும் பாரத்தைக் குறைக்கலாம் இது தொடர்பாக பாடசாலை நிர்வாகங்கள் கவனமெடுத்து செயற்படவேண்டும் பெற்றோர் கூட்டத்தில் இது தொடர்பாக கலந்துரையாடி ஓர் பொது முடிவு எடுக்கலாம்.

இது இன்றைய ஓர் கட்டாய தேவையாகும்.



ஏனெனில் இதனால் மாறாக்குறைபாடுகள் சில பிள்ளைகளுக்கு ஏற்பட்டு விடும். பாரத்தினை சமநிலைப்படுத்த கூனி நடக்கின்றார்கள். இதனால் நிரந்தர கூனல் சுபாவங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. மருத்துவர்கள் இது தொடர்பாக கவனமெடுக்க வேண்டுமென பெற்றோர்க்கு அறிவுறுத்தல் வழங்குகின்றார்கள். பெற்றோருக்கு பாடசாலை நிர்வாகங்களுக்குத் தெரியப்படுத்தியும்கூட பாடசாலை நிர்வாகங்கள் இது தொடர்பாக கவனமெடுக்கவில்லையென பலமாக குற்றம் சாட்டப்படுகின்றது.

இது மாணவர்களின் எதிர்கால உடல் வளர்ச்சியோடு தொடர்புடைய தென்பதால் கூடிய கவனமெடுக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும்.




அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் ஐவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.

01) (i) 14 (ii) 28 (iii) 15

02) 5675 → 4564 → 3453 → -------

(i) 2464 (ii) 2542 (iii) 2342

03) 3972 → 4083 → 4194 → -------

(i) 6205 (ii) 6215 (iii) 6305

### சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- எஸ்.கௌசிகன்
தரம் :- 7
பாடசாலை:- யா/ வட்டு இந்துக் கல்லூரி.

பெயர் :- சி.சுபர்ணா
தரம் :- 5
பாடசாலை:- யா/ வல்வை மகளிர் கல்லூரி.

பெயர் :- சி.சபீதா
தரம் :- 12
பாடசாலை:- யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

பெயர் :- க.துளசிகா
தரம் :- 7
பாடசாலை:- கிளி/ பாரதி வித்தியாலயம்.

பெயர் :- ஈ.சுமன்ராஜ்
தரம் :- 8
பாடசாலை:- கிளி/ பாரதி வித்தியாலயம்.

### 19.07.2014 வெளியான புதிர்ப்போட்டியின் விடைகள்

1) (iii) 3) (iii)
2) (iii)

### அனுப்பவேண்டிய முகவரி

புதிர்ப்போட்டி
இல: ------- 373,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

# வடமாகாண கல்வித்திணைக்களத்தால் ஆசிரியர் இடமாற்ற நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்குமாகாண கல்விப் பணிப்பாளரின் சுற்றுநிருபத்திற்கமைய யாழ். கல்வி வலயத்தினூடாக பின்வரும் இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இதன்படி வலயத்திற்குள்ளான இடமாற்றங்கள் (மாவட்டத்திற்குள்), மாவட்டங்களுக்கிடையினான இடமாற்றங்கள், மாகாணங்களுக்கிடையிலான இடமாற்றங்கள் என்பனவாகும் மேலும் இடமாற்றத்திற்கு விண்ணப்பிப்பதற்கு பின்வருவோர் தகுதியானவர்களாக கருதப்படுவர்.

நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட சேவைக்காலத்தினை பூர்த்தி செய்தவர், கஷ்டப் பிரதேசங்களில் ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றிய ஆசிரியர்கள், வசதியான பிரதேசங்களில் ஆறு வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றிய ஆசிரியர்கள், விசேட வைத்திய காரணங்கள், வேறு விசேட காரணங்கள் தொடர்பாக இடமாற்றம் கோரும ஆசிரியர்கள் (வைத்திய காரணங்களுக்கு அரச வைத்திய அதிகாரியின் சான்றிதழும், விசேட காரணங்களுக்கு அதனை உறுதிப்படுத்தும் சான்றிதழும் இணைக்கப்படல்வேண்டும்.

இடமாற்ற விண்ணப்பங்கள் யாவும் பாடசாலை அதிபர், கோடடக் கல்வி அலுவலர் ஊடாக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 05ஆம் திகதிக்கு முன்னதாக எனக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

சகல இடமாற்ற விண்ணப்பத்துடனும் முதல் நியமனக் கடிதப் பிரதி கட்டாயம் இணைக்கப்படல் வேண்டும் அத்துடன் சான்றுபடுத்தக்கூடிய பொருத்தமான ஆவணங்களும் இணைக்கப்படல் வேண்டும்.

எக் காரணத்தின் பொருட்டும் இத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது மற்றும் மேலதிக விபரங்கள் தேவைப்படின் வலயக்கல்வி அலுவலகத்தில் உள்ள விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையத்திற்கு உதவி

(யாழ்ப்பாணம்)

கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையத்திற்கு அலுவலக பாவனைக்காக உபகரணங்கள் நேற்றுமுன்தினம் யாழ். வணிகர் கழகத்தினால் வழங்கப்பட்டன.

மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள வணிகர் கழக தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் கழகத் தலைவர் எஸ். ஜெயசேகரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கருவி நிறுவனத்தின் அதிகாரிகளிடம் அலுவலக பாவனைக்கான இரும்பு அலுமாரிகள் கையளிக்கப்பட்டன.



அத்துடன் வணிகர் கழகத்தில் கடமைபுரியும், வறுமை நிலையிலுள்ள ஊழியர் ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா கடனுதவியும் வழங்கப்பட்டது.

யாழ். வணிகர் கழகம் ஒவ்வொரு மாதமும் இவ்வாறு போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் வாழ்வாதார உதவிகள் பெறும் நிலையிலுள்ள வறிய மக்களுக்கு கிராமசேவகர்கள், பிரதேச செயலர்களின் சிபாரிசுக்கமைவாக இவ்வாறான வாழ்வாதார உதவிகளை தொடர்ச்சியாக செய்து வருகின்றனர். (இ)

# குருநகர் இளம் யுவதி மரணம் மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

குருநகர் யுவதி மரணம் தொடர்பான வழக்கில் மருத்துவ அறிக்கை இப்போது கோரப்பட்டிருக்கிறது.

குறித்த யுவதி பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமைக்கான தகுந்த மருத்துவ ஆதாரங்கள் இருந்தால் அவற்றை நீதிமன்றில் சமர்ப்பிக்கும்படி யாழ். நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குருநகர் அடம்பன் வீதியைச் சேர்ந்த ஜெரோம் கொன்சலிற்றா (வயது 21) என்ற யுவதியே சடலமாக மீட்கப்பட்டார். இவரின் மரணத்திற்கு யாழ். மறைக்கல்வி நடு நிலையத்தில் பணியாற்றும் குருமார்கள் இருவர் காரணம் என பெற்றோரினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில் பொலிஸார் மரணம் தொடர்பான அறிக்கையினை யாழ். நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பித்ததுடன், கடந்த 3 மாதங்களாக வழக்கு விசாரணை இடம் பெற்று வந்தது.

அதனடிப்படையில், மேற்படி வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்ட போது, சட்டவைத்திய அதிகாரி குறித்த யுவதி நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என தெரிவித்தமைக்கு அமைவாக யாழ். நீதிவான் யுவதியின் மரணம் நீரில் மூழ்கியதால் ஏற்பட்டுள்ளதென விசாரணையினை நிறைவு செய்ததுடன், யுவதிபாலியல் துஷ்பிரயோகம் செய்யப் பட்டிருக்கின்றார். என்ற தடயங்கள் கிடைத்தால் மன்றில் எதிர்வரும் -09 ஆம் திகதிசமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (25)



**கிளி.மலையாளபுரம் பாடசாலையில் தரம் 5 இல் கல்வி பயிலும் 20 மாணவர்களுக்கு தனது மகளின் பிறந்த நாளை முன்னிட்டு ராஜ் கண்ணா என்பவர் கற்றல் உபகரணங்களை வழங்குவதைக் காணலாம். (29)**

## வாரம் ஒரு காரம்

### அரச எதிர்ப்பு எனும் பெயரில் பல அரசியல் துரோகங்களுக்கு இடம் கொடுக்கின்றோம்...

இன்றைய சூழலில் இலங்கையரசு இலங்கைச் சிறுபான்மையினர்க்குச் செய்யும் துரோகங்களை விட அச்சிறுபான்மை அரசியல்வாதிகள் தமது இனங்களுக் கெதிராக பல துரோகங்களைச் செய்துவருகின்றமை கண்கூடு.

இனவாதம் என்கின்ற பெயரில் இன்னோர் இனம் செய்கின்ற துரோகங்களை விமர்சிக்கின்ற நாம் எமக்குள் இருந்து துரோகம் செய்து கொண்டிருப்பவர்களை இனங்காண மறந்து விடுகின்றோம். இதுவே எமது தீர்வு தள்ளிச் செல்வதற்கான அடிப்படைக் காரணமாகும்.

பெரும்பான்மை அரச பலம் மத்தியில் சிறுபான்மையின பிரதிநிதிகள் இணக்க அரசியலினூடாகத்தான் மக்களுக்கான தேவைகளை நிறைவு செய்ய முடியும் என்பதை முஸ்லிம்களின் தலைவர் அஷ்ரப்பும் மலையகத் தலைவர் தொண்டமானும் எப்போதோ அறிந்துகொண்டு அரசியல் நடாத்தியதன் மூலம்தான் இன்று அவ்விரு சமூகங்களும் ஓப்பீட்டளவில் பல முன்னேற்ற நிலைகளை அடைந்துள்ளன.

முஸ்லீம் மக்கள் இணக்க அரசியலைத் தவிர இங்கு வேறு வழிகள் சாத்தியப்படாதென்பதைத் தெளிவாக புரிந்தவர்கள். மாறாக, தமிழ் மக்களின் தலைமைகளோ அன்று தொட்டு இன்று வரை அரச எதிர்ப்பென்கின்ற பெயரில் அழிவுகளைச் சந்தித்தது தான் கண்ட மிச்சமாச்சு.

ஆனால் தமிழ்மக்களின் வாக்குரிமைகளை வென்ற அரசியல் வாதிகள் செய்யும் துரோகங்களுக்கப்பால் தமிழ் மக்களின் மாறாச் சிந்தனைகள்தான் இந்தத் துரோகங்களுக்கெல்லாம் அடிப்படையென்றும் வாதிடலாம்.

பெரும்பான்மை அரசியல் பலங்களின் மத்தியிலிருந்து சிறுபான்மையினத் தலைவர்கள் தமது இனத்திற்கான உரிமைகளை வென்றெடுக்கவோ அல்லது அபிவிருத்திகளை மேற்கொள்ளவோ இணக்கப்பாதையொன்றை அரசியலில் உருவாக்கவேண்டும். அல்லாமல் என்றுமே சிறுபான்மையினருக்கு விடிவு கிடையாது.

எதிர்ப்பு அரசியல் மூலம் உலகில் எந்தச் சிறுபான்மையினரும் வென்றதாக சரித்திரம் இல்லை. தமிழ்மக்களின் சிந்தனைக்கூடாகச் சொன்னால் பலமாக இருந்த பிரபாகரனால் கூட சாதிக்க முடியாததை, மக்களுக்கு கபட நாடகங்களையே அரங்கேற்றி வருகின்ற இந்தக் கூட்டமைப்பு எதிர்ப்பு அரசியல் மூலம் எவ்வாறு சாதிக்கப்போகின்றது?

இவற்றை யெல்லாம் அடிப்படையாகக் கொண்டு இணக்க அரசியல் மூலம் சில இலக்குகளை அடைய முற்பட்டால் தேர்தலில் அவர்களை மக்கள் புறக்கணிக்கின்றனர். இதனால் தான் கூட்டமைப்பினர் அரசியலில் நிலைப்பதற்கு அரச எதிர்ப்பைப் பிரச்சாரமாக பயன்படுத்துகின்றனர்.

இதன் மூலம் என்றுமே இலங்கையரசிடம் எதையும் பெறமுடியாதென்பது அவர்களுக்கும் தெரியும். இருந்தும் பேசுகின்றனர் ஏனெனில் வேறு வழிகள் எதுவும் இவர்களிடம் இல்லை.

சாவகச்சேரி மே தினக் கூட்டத்தில் யதார்த்தத்தைப் பேசும் போது கிடைத்த எதிர்ப்பை உணர்ந்த வடக்கு முதலமைச்சர் பின்னர் அதே சாவகச்சேரியில் அந்த மக்களுக்கு ஏற்ற முறையில் மண்டபத்திறப்பு விழாவில் அழகாக வீரவசனம் பேசியுள்ளார்.

ஆகவே ஒரு துருவத்தில் இவற்றிற்கெல்லாம் அடிப்படை மக்கள் சிந்தனையே எனவும் வாதிடமுடியும். இதில் வேடிக்கை என்னவெனில் சுயதேவைகளுக்காக இணக்க அரசியல் வழிமுறையில் அரசிடமிருந்து தனிப்பட்ட உதவிகளைப் பெறுவோர் தேர்தலில் இணக்க அரசியலை எதிர்த்து வாக்களிக்கும்படி கோருகின்றனர்.

மக்களும் தங்களது சுயதேவைகளுக்கு இணக்கவழியில் செல்வோரையே நாடவேண்டும் என்பதைத் தெரிந்திருக்கின்றனர். சுயதேவை நிறைவிற்கு எது சாதகமான வழியென புரிந்து கொள்ளும் மக்கள் அரசியல் தீர்விற்கு எது சாதகமான வழியென சிந்திக்க ஏன் மறுக்கின்றனர்?

உதாரணமாக அண்மையில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆங்கிலப்பாடத் துறையை ஆரம்பிக்கவேண்டும் எனும் கோரிக்கையோடு ஆசிரிய மாணவர்கள் அமைச்சரைத் தேடிச் சென்றார்கள். ஏன் முதலமைச்சரைத் தேடிச் செல்லவில்லை? முதலமைச்சரால் முடியாதா?... ஏன் கூட்டமைப்பு எம்பிக்களைத் தேடிச் செல்லவில்லை அவர்களாலும் முடியாதா?

இலங்கையில் நமது தேவைகளை நிறைவு செய்ய இணக்க அரசியலே சாதகமானது என்பது நடைமுறையளவில் அனைவருக்கும் தெரிந்திருக்கிறது. ஆனாலும் அதைப் புரிந்து வைத்திருக்கும் மக்களில் பலர் அதையேன் வெளிப்படையாக ஒப்புக்கொள்ள மறுக்கின்றனர்?....

அவ்வாறானால் சுயதேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள ஓர் அரசியல் – வீண் வம்பில் வெறுவாய் வீரம் பேச வேறோர் அரசியலா?... இத்தனை உயிர்களைப் பலி கொடுத்த பிறகும் கூட வீண்வம்பில் வீரம் பேசுவது தான் மக்களின் விருப்பமென்றால் மீண்டும் மீண்டும் உயிர்ப்பலிகளால் சொந்தலாபம் தேடுவோரைத் தடுக்க எவராலும் முடியாது.

# மாகாண மட்டத்தில் மீன்பிடித்துறையில் புதிய கலாசாரத்தை உருவாக்கத் திட்டம்

## நீர்வள அபிவிருத்தி அமைச்சின் செயலர் தெரிவிப்பு



(கொழும்பு)
மாகாண மீன்பிடித்துறை அமைச்சர்களுக்கான மாநாடு ஒன்றை நடாத்தி- அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்று மாகாண மட்டத்தில் மீன்பிடித்துறையில் புதிய கலாசாரத்தை உருவாக்குவதே தனது நோக்கம் என மீன்பிடித்துறை மற்றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி டி.எம்.ஆர்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

மேல்மாகாணம்- வடக்கு-கிழக்கு மாகாணங்கள்- மத்திய வடமேல்- வடமத்திய- சப்ரகமுவ மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களின் மீன்பிடித்துறை அமைச்சர்கள் கலந்துகொண்ட விசேடகூட்டம் அமைச்சின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்- மாகாண மட்டத்தில் மீன்பிடித்துறையின் 2014ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்யத் தீர்மானித்துள்ளது. அதற்கமைய ஒரு மாகாணத்திற்கு தலா 10இலட்சம் ரூபா என்றவகையில் நிதியொதுக்கீடு செய்ய தீர்மானித்துள்ளது.

மாகாண மீன்பிடித்துறை அமைச்சர்கள் - மாகாண மட்ட மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சிற்கு முன்மொழியப்பட்ட மதிப்பீட்டுக்கமைய பிரதான விடயங்களைக் கண்டறிந்து அவற்றிற்கான நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது.

இதன் இரண்டாம் கட்டமாக 2015ஆம் ஆண்டு வரவுசெலவு திட்டத்தின் கீழ் ஒரு மாகாணத்தின் மீன்பிடித்துறை அபிவிருத்திக்காக அமைச்சு 50 இலட்சம் ரூபா வீதம் ஒதுக்கீடு செய்வது தொடர்பாக முன்மொழிய எதிர்பார்த்துள்ளது.

மீன்பிடித்துறை மற்றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சர் டாக்டர் ராஜித்த சேனாரத்ன தலைமையில் இம்மாதம் முதலாம் திகதி நடை பெற்ற மாகாண மட்ட மீன்பிடித் துறை அமைச்சர்கள் மாநாட்டின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய ஒருமில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த மாகாண மட்ட மீன்பிடித்துறை அமைச்சர்கள்- மாகாண மீன்பிடித்துறை அமைச்சு மற்றும் அமைச்சர்களுக்கு கௌரவமான இடத்தை மீன்பிடித்துறை அமைச்சர் வழங்கியுள்ளமையினால் இன்று நாட்டு மக்களிடையே மாகாண மீன்பிடி அமைச்சு தொடர்பாக நல்லமுறையில் பேசப்படுகிறது.

இவ்வளவுகாலமும் மதிககப்படாமல் இருந்த அமைச்சு தொடர்பாக இப்போது கவனமெடுக்கின்றனர்.

எனவே அமைச்ச ரும் அமைச்சும் மாகாண மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்ய முன்னெடுக்கும் நடவடிக்கைக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என்று தெரிவித்தனர்.

இவ்விசேட கூட்டத்தில் அமைச்சின் மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்) பி.எச்.ஜி. கித்சிறி- மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) அஸங்க அபேகுணவர்தன- பிரதான கணக்காளர் ஆர்.எஸ்.ராஜபக்ஷ தேசிய நீர்வள உயிரின அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஜயந்த சந்திரசோம- மற்றும் மாகாண மீன்பிடித்துறை அமைச்சின் செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அரிசி ஏற்றுமதிக்காக 4 வலயங்கள் அமைப்பு

(கொழும்பு)
இந்த ஆண்டில் இலங்கையின் அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கென தெற்கு கிழக்கு வட மத்திய வடக்கு ஆகிய மாகாணங்களில் நான்கு ஏற்றுமதி வலயங்கள் ஏற்படுத்தப்படும் என விவசாய அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பீ.ஹரிசன் மூலம் விவசாய அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன இத்த கவலை தெரிவித்தார்.

தென் மாகாணத்தில் சூரிய வெளியிலும், கிழக்கு மாகாணத்தில் நிந்தவூர் ,அட்டாளைச்சேனை, சம்மந்துறை ,பொத்துவில், கல்முனை ஆகிய பகுதிகளிலும் அரிசி ஆலைகள் அமைக்கப்படும்.

அவ்வாறே வட மத்திய மாகாணத்தில் தலாவை, மதவாச்சி, ரம்பேவை ,தம்புத்தேகமை ஆகிய பகுதிகளிலும் வட மாகாணத்தில் மன்னாரிலும் அரிசி ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# ஸ்ரீ ஜயவர்த்தனபுர பெரியாஸ்பத்திரி 107 இலட்சத்தை இலாபமாக பெற்றது



ஸ்ரீ ஜயவர்த்தனபுர பெரியாஸபத்திரி கடந்த வருடம் 107 லட்சம் ரூபாவை இலாபமாக பெற்றுள்ளதாக பிரதி சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்க தெரிவித்தார்.


ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவின் வாய்மொழிமூல கேள்விக்கு விடையளிக்கும் போதே சுகா தார அமைச்சர் லலித் திசாநாயக்க இத்தகவலை தெரிவித்தார்.

இதேவேளை இந்தப் பெரியாஸ்பத்திரியின் வருமானம் 016ஆம் ஆண்டளவில் 200மில்லியன் ரூபாவால் அதிகரிக்கும் எனவும் தற்சமயம் 1553 ஊழியர்கள் இங்கு கடமை புரிவதாகவும் பிரதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த ஆஸ்பத்திரி குறுகிய கால. மத்திய கால மற்றும் நீண்ட கால கடன் எதுவும் எடுக்கவில்லை எனவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

# நியதிச் சட்டங்கள் குறித்து குழுநிலை விவாதத்தில் முடிவு

## அவைத்தலைவர் சிவஞானம் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண சபையால் உருவாக்கப்பட்டு ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்ட 3 நியதிச் சட்டங்களில் முத்திரை வரிகள் தொடர்பான சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஏனைய சட்டங்களிலுள்ள சில சரத்துக்கள் தொடர்பாக ஆராயுமாறு ஆளுநர பரிந்துரைத்துள்ளார் என வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையால் உருவாக்கப்பட்ட நிதி நியதிச் சட்டங்கள் தொடர்பாக ஆளுநர் அனுப்பி வைத்துள்ள சிபார்சுகள் மற்றும் ஒப்புதல்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபையால் முதன் முதலாக 3 நிதிநியதிச்சட்டங்கள் உருவாக்கப்பட்டு மாகாண ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தன..

இந்தச் சட்டங்களில் முத்திரை வரி தொடர்பான சட்டம் ஆளுநரால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் எங்களுடைய நியதிச் சட்டத்திலுள்ள சில சரத்துக்கள் எமது மாகாண சபையின் சட்ட வரையறைக்குள் உள்ளனவா என்பது தொடர்பாக பரிசீலிக்குமாறும் ஆளுநர் எமக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதனால் இந்த விடயங்கள் தொடர்பாக விசேட மாகாண சபை அமர்வொன்றினை எதிர்வரும் ஐந்தாம் திகதி நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம். இந்த மாகாண சபை அமர்வில் எமது நிதி நியதிச்சட்டங்கள் மீது ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ள பரிந்துரைகள் தொடர்பாக பரிசீலனை செய்யப்படவுள்ளது. மேலும் இவ்விடயம் தொடர்பாக குழு நிலை விவாதத்தை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

இந்த அமர்வில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அமைவாக எதிர்காலத்தில் எமது நிதி நியதிச்சட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளோம் என்றார்.

# குடிநீரின்றித் தவிக்கும் பாடசாலை மாணவர்கள்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி கல்வித் திணைகளத்துக்குட்பட்ட திருவையாறு மகாவித்தியாலயத்தில் கடும் வரட்சி காரணமாக குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் இதனால் மாணவர்கள் குடிநீர்க் குழாய்களை உடைக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உதயநகர் கிருஷ்ணபுரம் புகையிரதநிலைய வீதி திருவையாறு, பழைய முறுகண்டி போன்ற இடங்களில் பாடசாலைகள் முதல் கிராம மக்கள் வரை குடிநீருக்காக அலைந்து திரிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரையில் நம்நாட்டில் நிலவி வரும் கடும் வறட்சியால் கால் நடைகள் மற்றும் உயிரினங்களே தமது உணவுக்கு அல்லல்பட்டு வந்தன.

ஆனால் தற்போது பல கிராம மக்கள் உட்பட மாணவர்கள் மற்றும் சிறுவர்களும் குடிநீருக்காக அல்லல்பட்டு வருகின்றனர். இந்த சூழ்நிலை மீண்டும் தொடருமானால் எமது மக்கள் உயிர் நீக்கும் சந்தர்ப்பங்களும் தொடர வாய்ப்புக்கள் உள்ளன. (140)

# கிறிஸ்மஸ் தீவிலுள்ளோர் நலனில் கூடுதல் கரிசனை அவசியம்

## ஆஸி.மனித உரிமைகள் ஆணைக்குழு கவலை



கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புகலிடக் கோரிக்கையாளர்களின், குறிப்பாக தாய்மார் மற்றும் பிள்ளைகளின், நலன்கள் குறித்து தீவிர கரிசனை கொண்டுள்ளதாக அவுஸ்ரேலிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவுஸ்ரேலியாவில் கட்டாயமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள புகலிடம் கோரும் பிள்ளைகள் பற்றிய தேசிய மட்ட விசாரணையின் ஒரு கட்டமாக ஆணைக்குழுவின் தலைவி கில்லியன் ட்ரிக்ஸ் கடந்த வாரம் கிறிஸ்மஸ் தீவிற்கு விஜயம் செய்தார்.

தாம் நான்கு மாதத்திற்கு முன்னர் சென்ற போது இருந்த நிலைமை இன்று மிகவும் மோசமானதாக மாறியிருப்பதாக பேராசிரியர் ட்ரிக்ஸ் அம்மையார் தெரிவித்தார்.

கிறிஸ்மஸ் தீவு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை உள்ளிட்ட நாடுகளின் புகலிடக் கோரிக்கையாளர்களின் பிள்ளைகளில் பெரும்பாலும் அனைவரும் நோய்வாய்ப்பட்டவர்களாக மற்றும் மன அழுத்தம் உள்ளவர்களாக காணப்படுகிறார்கள். அவர்களில் பலர் படுக்கையை நனைக்கிறார்கள். சிலருக்கு பேச்சாற்றல் பாதிக்கப்பட் டுள்ளதென அவர் கூறினார்.


கிறிஸ்மஸ் தீவில், 174 பிள்ளைகள் அடங்கலாக 1,102 புகலிடக் கோரிக்கையாளர்கள் உள் ளனர். தமது மூன்று நாள் பயணத்தின் போது நூற்றுக்கணக்கானவர்களைப் பேட்டி கண்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவி தெரிவித்தார்.

# வேலணை முத்துமாரி அம்மன் வருடாந்த மஹோற்சவம்

வேலணை பெருங்குளம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 31 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

இவ்வுற்சவத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி மாலை சப்பறத்திருவிழாவும் 9 ஆம் திகதி மு.ப 10.35 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் மு.ப 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகமும் இரவு 8 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

திருவிழாக்காலங்களில் தினமும் பிற்பகல் 4.30 மணி முதல் 5 மணி வரை ஆலயத்தில் பஜனை நடைபெறவுள்ளது.



# கடந்த தினங்கள் கல்விமுரசில் வெளியான மாதிரி வினாத்தாள்களுக்கான விடைகள்

## 20 யூலை 2014 ஞாயிற்றுக்கிழமை

1) 1. தோமஸ் அல்வா எடிசனின் சாதனை
2. ஊக்கமும் விடாமுயற்சியும்
3. பத்தொன்பதாம் நூற்றாண்டில்
4. அவரது முயற்சி
5. “முயற்சி திருவினையாக்கும்”
6. அல்லும் பகலும்
7. அல், இல்லம்
8. தோல்வி, சோம்பல்
9. மீண்டும் மீண்டும் முயற்சி செய்தால் வெற்றி கிடைக்கும்.
10. தோமஸ் அல்வா எடிசன்.

2) 1. ஒருவரின் முகத்தைக் கொண்டு அவரை மதிப்பிடலாம்
2. சிறுவயதில் பழகும் பழக்கம் இறுதிவரை நிலைக்கும்.

3) 1. “ஆந்தைக்கு இரவில் கண் தெரியுமா”? என்று கேட்டார்.
2. “உங்களுக்கு சொர்க்கத்துக்குப் போக விரும்புகிறவர்கள் எழுந்து நில்லுங்கள்” என்றார்.

4) 1. தம்பி பாடங்களைப் படிக்கத் தொடங்கினான்.
சூரியன் கிழக்கு வானில் உதித்தது.
மாலைக்காட்சி மிகவும் அழகாக இருந்தது.

5) 1. Ball 2. Good morning

6) Please give me your book

7) நான் முத்திரைகள் கொண்டு வருவேன்.
அம்மா சமைத்து முடித்து விட்டாரா?
வியாழக்கிழமை

10) வினாகிரி 11) புரதம் 12) அகத்தி
13) கண்டமாலை 14) சிகிரியா 15) அடைப்புத்தையல்
16) பச்சை 17) 4.2.1948 18) தியவன்ன
19) கலாவாவி 20) 2004.12.26 21) துத்திரிப்புல்
22) மண்ணெண்ணெய் 23) கழுத்துப்பகுதியை
24) வாகனங்களை நிறுத்த வேண்டாம் 25) சட்டக்காந்தம்
26) மரமஞ்சள் 27) மின்காந்தம் 28) அட்டமி
29) ஒளித்தொகுப்பு 30) 4, 6, 4 31) தென்மேற்கு
32) காற்றுத்திசைகாட்டி 33) சரியாக இணைத்தல் 34) மிருதங்கம்
35) தூக்குக்குண்டு 36) மழைமானி
37) மின் முள்ளுத்தையல் 38) கம்பளித்தையல்

## 22 யூலை 2014 திங்கட்கிழமை

(a) (i) 3, 4, 6
3, 6, 9
5, 6, 10

(ii) ① ② ③ ⑥

(iii) பொ.கா.பெ = 6

(b) இலக்கச்சுட்டி = 2 + 1 + 5 + 3 + 7
= 18 = 1 + 8
= 9
எனவே இவ்வெண் 9 ஆல் வகுபடும்

(c)
2 | 8, 5, 12
2 | 4, 5, 6
2 | 2, 5, 3
3 | 1, 5, 3
5 | 1, 5, 1
1, 1, 1

∴ பொ.ம.சி = 2 x 2 x 2 x 3 x 5
= 120

∴ 120 நிமிடங்களின் பின்னர் அதாவது பி.ப 10.00 மூன்று விளக்குகளும் ஒருமித்து அணையும்.

(i) 144 = 2 x 2 x 2 x 2 x 3 x 3
= $2^4 \times 3^2$

(ii) 48 = 1 x 48
2 x 24
3 x 16
4 x 12
6 x 8

(iii) 1, 2, 3, 4, 6, 8, 12, 16, 24, 48

(iv)
2 | 24, 30, 18
2 | 12, 15, 9
2 | 6, 15, 9
3 | 3, 15, 9
3 | 1, 5, 3
5 | 1, 5, 1
1, 1, 1


பொ.ம.சி = 2 x 2 x 2 x 3 x 3 x 5 = 360

(v) 16 = 2 x 2 x 2 x 2
48 = 2 x 2 x 2 x 2 x 3
80 = 2 x 2 x 2 x 2 x 5

பொ.கா.பெ = 2 x 2 x 2 x 2
= 16

03) (i) A = {9, 18, 27, 36, 45, 54, 63, 72, 81, 90, 99}

(ii) P = {C,O,M,U,N,I,A,T}




(iii) S = { 100 வரையுள்ள சதுர எண்கள்}

(iv) (a) A = {2, 3, 5, 7, 11, 13}
B = {2, 4, 6, 8, 10, 12, 14}
C = {1, 3, 5, 7, 9, 11, 13, 15}


(b) 2

04) (i) 4965, 4695, 6495, 6945, 9645, 9465 ஏதாவது இரண்டு
(ii) 4569, 4596, 5964, 9654, 9564 ஏதாவது மூன்று
(iii) 4956, 4596, 5964, 9654 ஏதாவது மூன்று
(iv) 5964, 9564
(v) 4956, 5964, 4596, 9654 ஏதாவது ஒன்று
(vi) 9465, 9456, 9654, 9645, 9546, 9564 ஏதாவது நான்கு

05) (i) x - பின்வளைகோணம்
Y - செங்கோணம்
z - விரிகோணம்


(ii) $x = 270^0$
$y = 90^0$
$z = 135^0$

(iii)





(iv) (a) விரிகோணம் (b) $150^0$

06) (i) (a) (+5) + (-7) = (-2)




(b) (-3) + (+6) = (+3)




(ii) (a) (+11) (b) (-10) (c) (+15)

(iii)

| + | 5 | 7 | 0 | -3 | -6 |
|---|---|---|---|---|---|
| 2 | 7 | 9 | 2 | -1 | -4 |
| 6 | 11 | 13 | 6 | 3 | 0 |
| -1 | 4 | 6 | -1 | -4 | -7 |
| -4 | 1 | 3 | -4 | -7 | -10 |
| -7 | -2 | 0 | -7 | -10 | -13 |

## ஆங்கில மொழிமூலம் கணிதம்

### Algebraic Expressions Answers

Ex. 2.1

1) 80 2) 600 3) 11600 4) 7000
5) 4200 6) 9400 7) 200 8) 99700000
9) 9991 10) 391 11) 2436 12) 9975
13) 506 14) 400 15) 100 16) 50
17) 28 18)50 19) 100 20) 10

*Ex:-2.4.1*

1) (x+6)(x+2) 2) (x+2) (x+1) 3) $(x+1)^2$ 4) (x+4)(x+3)
5) (x+5) (x+3) 6) (x-3) (x-1) 7) (x-4) (x-2) 8) (x-7) (x-1)
9) (x-7) (x-2) 10) (x+8)(x-7) 11) (x+5) (x-1) 12) (x+8) (x-3)
13) (x+4) (x-2) 14) (x-6) (x+2) 15) (x-6) (x+3) 16) (x-5) (x+4)
17) (x-7) (x+3) 18) (x-4) (x+3) 19) (x-8) (x+2) 20) (x-8) (x-2)

**Ex:- 2.4.2**

1) (2x+3) (x+4) 2) (3x+2) (x+1) 3) (3x+1) (x+6) 4) (2x-1) (x-3)
5) 3(x-1) (x-5) 6) (3x-4) (x+3) 7) (3x-2) (x+5) 8) (2x-1) (x+16)
9) (3x+4) (x-1) 10) (3x+1) (x-6) 11) (8x+6) (x-2) 12) (3x-4) (4x+5)
13) (10x-3) (x+3) 14) (9x-2) (x-3) 15) (2x-1) (2x+3)

**Ex:-3.1**

1) $x^2+2x+1$ 2) $x^2+10x+25$ 3) $x^2+20x+100$ 4) $x^2-12x+36$
5) $x^2-16x+64$ 6) $4x^2+4x+1$ 7) $4x^2+20x+25$ 8) $9x^2-12x+4$
9) $16x^2-24x+9$ 10) $9x^2-30x+25$ 11) $9y^2-12y+4$ 12) $4x^2-12+9$
13) $a^2+a+\frac{1}{4}$ 14) $x^2-2+\frac{1}{x^2}$ 15) $x^2-6+\frac{9}{x^2}$ 16) $4x^2-3x+\frac{9}{16}$
17) $16x^2+8x+1$ 18) $25x^2-15x+\frac{9}{4}$ 19) $81x^2+18x+1$ 20) $49x^2-70x+25$

**Ex:-3.2**

1) 15 2) 52 3) 87 4) 59
5) 16 6) 6 7) 8 8) 30
9) (-30) 10) 20

**Ex:-3.3**

1) 10404 2) 9409 3) 529 4) 1936
5) 784 6) 5184 7) 39204 8) 1008016
9) 998001 10) 248004 11) 110.25 12) 90.25
13) 20.25 14) 2601 15) 289

**Ex:-3.4**

1) 23 2) 62 3) 83 4) 51
5) 34 6) 4 7) 8 8) 119
9) 102 10) 9

**Ex:-3.5**

1) 3,9 2) $c = (b/2)^2$ 3) a. 25,5 b. 8x,4y
c. 25/4, 5/2. f. 22x,11 g. 2x,1 h, 16x,64
i. 3x. 3/2 j. 7x, 7/2

**Ex:- 4.1**

a.
1) $x^3+6x^2+12x+8$ 2) $x^3+3x^2+3x+1$
3) $a^3-6a^2+12a-8$ 4) $x^3-9x^2+27x-27$
5) $8x^3+12x^2+6x+1$ 6) $8x^3-12x^2+6x-1$
7) $a^3-15a^2+75a+125$ 8) $x^3-12x^2+48x+6y$
9) $64x^3-240x^2+300x-125$ 10) $343y^3+294y^2+84y+8$

**Ex:-4.1**

b.
1) $(x-1)(x^2+x+1)$ 2) $(a-2)(a^2+2a+4)$
3) $(2x-1)(4x^2+2x+1)$ 4) $(2-a)(4+2a+a^2)$
5) $(x-10)(x^2+10x+100)$ 6) $(x+1)(x^2-x+1)$
7) $(2x+1)(4x^2-2x+1)$ 8) $(10x+1)(100x^2-10x+1)$
9) $(p+5)(p^2-5p+25)$ 10) $(5x+3y)(25x^2-15xy+9y^2)$

**Ex:-4.1**

c.
i) 140608 ii) 1259712
iii) 21952 iv) 140616
v) 140600 vi) 1061235
vii) 1030301 viii) 4913
ix) 226981 x) 704969

**Ex:- 5.1**

1) 6 2) 6 3) 9 4) 16 5) 1
6) 12 7) 4 8) 13 9) 108 10) (−19)

**Ex:-5.2**

1) [illegible] 2) 34 3) 1/6 4) 12 5) 59

**Ex:- 5.3**

1) [illegible](−12) 2) 36 3) 12 4) $(-4\frac{1}{2})$ 5) 3
8) 252 9) (−18) 10) 13

1) $c = y - mx$ 2) $x = \frac{y}{a-b}$ 3) $y = \frac{a-x}{2}$ 4) $h = \frac{A-2\pi r^2}{2\pi r}$
5) $t = \frac{s-q}{2}$ 6) $r = \frac{p}{2\pi}$ 7) $h = \frac{2A}{b}$ 8) a = p[illegible] (b + c)
9) $h = \frac{2A}{b^1 + b_2}$ 10) $c = d(A+b)$ 11) $b = \frac{at}{a-t}$ 12) $r_1 = \frac{Rr_2}{r_2 - R}$

**6.1**

1) $C = \sqrt{\frac{E}{m}}$ 2) $r = \sqrt{\frac{A}{\pi}}$ 3) $t = \sqrt{\frac{2s}{g}}$ 4) $I = \sqrt{\frac{w}{r}}$
5) $a = \sqrt{c^2 - N}$ 6) $x = \sqrt{y^2 + a^2}$ 7) $b = \sqrt{a^2y^2 - x^2}$ 8) $x = \sqrt{y^2 -}$
9) $x = \frac{ab}{\sqrt{1-a}}$ 10) $x = \sqrt{y^2b + a^2}$ 11) $A = \frac{N^2}{6.25}$ 12) $L = \frac{8T^2}{\pi^2}$
13) $T = \frac{CQ^2}{a}$ 14) $b = \sqrt{c^2 - a^2}$ 15) $E = \frac{mv^2}{2g}$

**22 யூலை 2014 செவ்வாய்க்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| 1. | 3 | 21. | 9874 |
| 2. | 2 | 22. | வடக்கு |
| 3. | 1 | 23. | 60 |
| 4. | 2 | 24. | E |
| 5. | 3 | 25. | 2 |
| 6. | 2 | 26. | 3 |
| 7. | 2 | 27. | 1 |
| 8. | 3 | 28. | 3 |
| 9. | 2 | 29. | 1 |
| [illegible] | 3 | 30. | 2 |
| 11. | 3 | 31. | அன்னாசி |
| 12. | 2 | 32. | வயலின் |
| 13. | 2 | 33. | 1 |
| 14. | 3 | 34. | 2 |
| 15. | 2 | 35. | 2 |
| 16. | 2 | 36. | நேற்று நான் சோறு சாப்பிட்டேன் |
| 17. | 2 | 37. | மாலதி தபாற்கந்தோரில் காசோலையை மாற்றினாள். |
| 18. | 2 | 38. | 2 |
| 19. | 3 | 39. | 67 |
| 20. | 2 | 40. | பன்றிக் காய்ச்சல் அல்லது பறவைக் காய்ச்சல் |


**25 யூலை 2014 வெள்ளிக்கிழமை**

| | | |
|---|---|---|
| 1. | 1990 | 21. |
| 2. | 3 - 60, 2 - 60 | 22. |
| 3. | (i) 540 (ii) 108 | 23. |
| 4. | 1kg 500g | 24. |
| 5. | 300 | 25. |
| 6. | (i) 4.10 (ii) 16:10 | 26. |
| 7. | 3/4 | 27. |
| 8. | 4/10 oR 2/5 | 28. |
| 9. | 80 | 29. |
| 10. | (i) 6 (ii) 4 | |

| | |
|---|---|
| 11. | 10019 |
| 12. | 8690 |
| 13. | (i) 60 (ii) 25வரை. நிழற்றல் |
| 14. | $56cm^2$ |
| 15. | 0 |

| | |
|---|---|
| 16. | 7 பெட்டி நிழற்றல் |
| 17. | 4000/= |
| 18. | 140 |
| 19. | (i) அரியம் (ii) 9 |
| 20. | 10223 |

| | |
|---|---|
| 21. | 675 |
| 22. | (i) 45நிழற்றல் (ii) 15 |
| 23. | $24cm^2$ |
| 24. | 3/4 or 6/8 |
| 25. | 27cm |
| 26. | 0.7 |
| 27. | $32cm^2$ |
| 28. | 280 |
| 29. | 1/6 |






கவிஞர் கருணாகரனின் மூன்று நூல்களான 'வேட்டைத்தோப்பு', 'இப்படி ஒரு காலம்', 'நெருப்பின் உதிரம்' ஆகியவற்றின் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் பெருமளவான வாசகர்கள் கலந்துகொள்ள சிறப்புற இடம்பெற்றது. கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நூலின் முதல் பிரதியை கரைச்சி பிரதேச செயலாளர் வெளியீட்டு வைக்க கிளிநொச்சி மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதிகேதீஸ்வரன் பெற்றுக்கொள்வதையும் நூல் அறிமுக உரைகளை கவிஞர் சோ.பத்மநாதன், ஆய்வாளர் யதீந்திரா ஆகியோர் நிகழ்த்துவதையும் காணலாம். (29)

# மக்களுக்கு இடையூறாகும் கள்ளுத் தவறணைகள்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் 6 கள்ளுத் தவறணைகள் இயங்கி வருவதாகவும் இவை இப்பிரதேசத்தில் அதிகரித்துள்ளதாகவும் இது கலாசார சீர்கேடுகளும் வன்முறைகளும் ஏற்படுவதற்கு வழிசமைப்பதாகவுள்ளது என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கள்ளுத்தவறணையால் மதுப்பிரியர்கள் அதிகரித்திருப்பதாகவும் இளைஞர்கள் இதற்கு அடிமையாவதாகவும் சுட்டிக்காட்டும் பொதுமக்கள் நாளாந்தம் மதுப்பிரியர்களால் சிமரங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் பெண்கள் வீண் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடுவதாகவும் இரவு வேளைகளில் வீதிகளில் பயணஞ் செய்வோருக்கு இடையூறை ஏற்படுத்தும் வகையில் தகாத வார்த்தைப் பிரியோகங்களை பாவிப்பதாகவும் இதனால் தாம் அச்சத்துடன் பயணிக்க வேண்டிய நிலை காணப்படுவதாகவும் பொதுமககள் சுட்டிக்காட்டுகின்றனார்.

இதேவேளை மக்களுக்கு இடையூறை ஏற்படுத்தும் கள்ளுத்தவறணைகளை அகற்றுமாறு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை உறுப்பினர் க.பரஞ்சோதி சபையில் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

# மக்களது பிரச்சினையை தீர்ப்பதற்கு சுய கருத்துக்களை வரவேற்கிறோம்

## ஒருங்கிணைப்பாளர் ஜெகன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் மத்தியில் இறங்கி மக்களது கருத்துக்களைக் கேட்டறியும் போதுதான் மக்களது வாழ்வாதாரப் பிரச்சினைகளும் நாங்கள் விடும் தவறுகளும் தெரியவருகின்றது. இத்தகைய மக்களின் சுய கருத்துக்களை நாம் மிகவும் வரவேற்கின்றோம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) கூறியுள்ளார்.

வாழ்வாதாரம் குறைந்த மக்களது அபிவிருத்தியை



மேம்படுத்துவது தொடர்பாக நுணாவில் மேற்கு பகுதி மக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட மக்கள் சந்திப்பு அப்பகுதி மகளிர் நிலையத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றிய ஒருங்கிணைப்பாளர் வி.கே. ஜெகன் மேலும் கூறுகையில்,

மக்களுக்கான நிரந்தர தீர்வையும், திட்டங்களையும் கொண்டுவந்தால் அவர்கள் துரோகப் பட்டம் சூட்டப்பட்டு அவர்களை ஓரங்கட்டும் செயலைத்தான் தேசியவாதிகள் எனக்கூறுபவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் எவ்வளவுக்கு இந்த அரசிடம் இருந்து பெறமுடியுமோ அவற்றையெல்லாம் அள்ளி வந்து மக்களுக்கு கொடுப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

நான் உங்கள் முன் ஒரு கேள்வியை முன்வைக்கின்றேன். நீண்ட ஒரு வரலாற்றைக் கொண்ட தமிழர்களது அரசியல வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட தலைமையே மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கின்றது. இதற்கு ஒரு மாற்றத்தைக் கொண்டுவருவதன் மூலமே நிரந்தரத் தீர்வு ஒன்றை தமிழர்கள் எட்டமுடியும்.

வரவுள்ள அரசியல் பருவகாலத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கையில் கொடுப்பீர்களானால் அவர் தமிழர் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுத் தருவார். என்றார்.

இச்சந்திப்பில் தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ், நகரசபை உறுப்பினர் திருக்குமரன் மெடிஸ்கோ, சமுர்த்தி உத்தியோகத்தர்,கிராம சேவகர் ஆகியோருடன் அப்பகுதி மக்களும் கலந்துகொண்டனர்.

# புதிய ஆசிரிய மாணவருக்கான திசைமுகப்படுத்தல் பயிற்சி




கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அண்மையில் புதிதாக அனுமதி பெற்றுள்ள 591 மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றன.

ஆசிரிய பயிற்சியை வழங்குவதற்கேற்ற வகையில் ஆசிரிய மாணவர்களைத் தயாராக்கும் நோக்குடன் இருவாரங்களுக்கு இப்பயிற்சிகள் இடம்பெறுகின்றன. யாழ்ப்பாணத்தின் துறைசார்ந்த வளவாளர்கள் சேவை அடிப்படையில் இதில் பங்கேற்றுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கல்வியியற்றுறை பேராசிரியர் மா.சின்னத்தம்பி 'ஆசிரியர்' என்ற பொருளிலும் , மூத்த விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி 'ஆசிரிய வாண்மையின் புதிய செல்நெறிகள்' என்ற பொருளிலும், வணிக முகாமைத்துவக் கற்கைகள் பீடாதிபதி தி.வேல்நம்பி 'நேரமுகாமைத்துவம்' என்ற பொருளிலும் , சத்திரசிகிச்சை நிபுணர் வெ.சுதரசன் 'உடல் ஆரோக்கியம் பேணல்' என்ற பொருளிலும் , உளமருத்துவநிபுணர் எஸ்.சிவயோகன் 'வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் என்ற பொருளிலும், சட்டமருத்துவ அதிகாரி வைத்தியர் எஸ்.சிவரூபன் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஆசிரியரின் பங்களிப்பு என்ற பொருளிலும், மேலும் மருத்துவ பீடப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா திறனுள்ள ஆசிரியத்துவம் என்ற பொருளிலும், சின்மயாமஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத் சைதன்யர் ஆன்மீக நோக்கில் ஆசிரியத்துவம் என்ற பொருளிலும், முன்னாள் பேராயர் எஸ்.ஜெபநேசன் 'ஆசிரியரும் வாசிப்புப் பழக்கமும் என்ற பொருளிலும், புனித வளனார் குருத்துவக் கல்லூரி அதிபர் செ.அன்புராசா அடிகள் சமூகப் பார்வையில் ஆசிரியம் என்ற பொருளிலும், கருத்துரைகளை வழங்குகின்றனர். கொழும்பு பங்குப் பரிவர்த்தனை முகாமையாளர் மு.திலீபன் 'வணிகமுறைமையில் புதிய செல்நெறிகள்' என்ற பொருளிலும், சட்டவாளர் ஜொனி மதுரநாயகம் 'ஆசிரியர் அறிந்திருக்க வேண்டிய சட்டங்கள்' என்ற பொருளிலும், சூழலியலாளர் எஸ்.அசோகன் சூழல் பாதுகாப்பில் ஆசிரியரின் பங்களிப்பு என்ற பொருளிலும் கருத்துரைகளை வழங்கி வருகின்றனர்.

இவர்களுடன் கலாசாலை விரிவுரையாளர்களும் இணைந்து வெவ்வேறு தலைப்புக்களில் இப்பயிற்சிகளை வழங்கி வருகின்றனர். மாலையில் விளையாட்டுச செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

# வடமராட்சி வலயத்தின் பாடசாலை மட்ட போட்டி முடிவுகள்

(கரணவாய்)

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட வினாடிவினாப் பேச்சு கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டி முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**வினாடிவினாப் போட்டி**

தரம் 10 கே.நிலவன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி) எஸ்.அபிவர்ணா (வடஇந்து மகளிர் கல்லூரி), கே. அருள்தாஸ் (கரணவாய் மகாவித்தியாலயம்)

**தரம் 11** எஸ்.விதுர்சிகா (வட இந்து மகளிர் கல்லூரி), எஸ். சுலிங்கன் (தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்), கே.புனின்தாஸ் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி),

**தரம் 12** எஸ்.ஜெயக்குமார் (சிதம்பராக் கல்லூரி), கே.வைதேகி (வடஇந்து மகளிர் கல்லூரி), எஸ்.தர்சினி (வடஇந்து மகளிர் கல்லூரி)

**பேச்சுப்போட்டி**

**தரம்10** (கே.ஜெயப்பிரின்சிகா (சென்தோமஸ் றோ.க.த.க. பாடசாலை), எஸ்துவாரகா (வட இந்து மகளிர் கல்லூரி), ரி.விருஜா, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி) (18)

(தொடரும்)

# இரதோற்சவம்

யாழ்.நாயன்மார்கட்டு அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த இரதோற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.15 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 30 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 6.30 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளதுடன் மறுநாள் மு.ப 11 மணிக்கு அன்னாபிஷேகமும் இடம்பெறவுள்ளது.

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................

முகவரி :- ........................................

பிறந்த ஆண்டு :- ........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

# அல்ஜீரிய ஏ.எச். 5017 விமானத்தின் சிதைவுகள் மாலியில் கண்டுபிடிப்பு



கட்டுப்பாட்டுப் பிரிவுடனான தொடர்புகள் அற்றுப் போயிருந்த அல்ஜீரியாவின் ஏ.ஏச் 5017 விமானத்தின் சிதைவடைந்த பாகங்கள் மாலியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பேர்கினோ ஃபஸோவில் இருந்து 116 பேருடன் பயணித்த அல்ஜீரிய விமானம் தனது பயணத்தை ஆரம்பித்து, ஒரு மணித்தியாலத்தில், தொடர்பு முழுமையாக அற்றுப்போனதாக அல்ஜீரியா தெரிவித்திருந்தது. மேலும் வான்பரப்பு தெளிவாக இல்லாமையால், விபத்து ஏற்படுவதனைத்தடுக்கும வகையில், விமானத்தின் பயணத்தை மாற்றுமாறு அறிவிக்கப்பட்ட சில நிமிடங்களில் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நைஜர் பகுதியில் குறித்த விமானம் விபத்துக்குள்ளான்தாக பின்னர் அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து தேடுதல் பணிகள் தீவிரப்படுத்தப்பட்ட நிலையில் விமானத்தின் சிதைவுகள் மாலியின் வடக்கு பகுதியில் கிடைத்திருப்பதாக மாலி ஜனாதிபதி இப்ராகிம் பவ்பகர் கீட்டா ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

தமது நாட்டின் வடக்குப் பகுதியிலுள்ள பாலைவன பிரதேசத்திலேயே விமானத்தின் சிதைவடைந்த பாகங்கள் கிடைததிருப்பதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளது என அவர் மேலும் கூறியுள்ளார். அதுமட்டுமன்றி 110 பயணிகளுடன் பயணித்த விமானத்தில் 51 பேர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# உக்ரைனில் அரசியல் குழப்பம் பதவி விலகினார் பிரதமர்



உக்ரைன் பிரதமர் அர்செனி யட்சென்யுக் ஆளும் கூட்டணியில் விரிசல் ஏற்பட்டதைத் தொடர்ந்து தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். இதனால் உக்ரைன் உள்நாட்டு அரசியலில் மேலும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

ஆளும் கூட்டணியில் இருந்து பல்வேறு கட்சிகள் தங்கள் ஆதரவை விலக்கிக் கொண்டதால் பதவியை ராஜினாமா செய்வதாக அர்செனி யட்சென்யுக் தெரிவித்தார்.

இந்நிலையில், ஆளும் கட்சி முடங்கியுள்ளதால் இன்னும் 30 நாட்களுக்குள் தேர்தலை நடத்த வேண்டிய நெருக்கடிக்கு அதிபர் பெட்ரோ போரோசென்கோ தள்ளப்பட்டுள்ளார்.


இந்த நெருக்கடி ஒரு புறம் இருக்க, பிரதமர் ராஜினாமாவால், கடந்த வாரம் உக்ரைனில் கிளர்ச்சியாளர்களால் மலேசிய விமானம் எம்.எச்.17 சுட்டு வீழ்த்தப்பட்டது தொடர்பான விசாரணைக்கும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

கிளர்ச்சியாளர்கள், அரசு தரப்பினருக்கு இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில் விபத்து பகுதியில் தாக்குதல் நிறுத்தப்பட்டிருந்தாலும், அங்கிருந்து 60 கி.மீ. தொலைவில் உள்ள டோனெட்ஸ்கில் தாக்குதல் தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# மலேசிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு ரஷ்ய அதிபரே பொறுப்பேற்க வேண்டும்

## அமெரிக்கா குற்றச்சாட்டு



மலேசிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் தான் பொறுப்பு என்று அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் மேரி ஹார்ப் வாஷிங்டனில் நிருபர்களிடம் கூறியதாவது:

கிழக்கு உக்ரைனில் செயற்படும் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள்தான் மலேசிய விமானத்தை சுட்டு வீழ்த்தியதாகத் தெரிகிறது. ஆனால் ரஷ்யாவின் உதவியின்றி அவர்களால் விமானத்தை சுட்டு வீழ்த்தியிருக்க முடியாது. இந்த விவகாரம் அனைத்துக்கும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின்தான் பொறுப்பு. இந்த ஒரு சம்பவத்துக்கு மட்டுமல்ல. உக்ரைன் விவகாரத்தில் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அவர்தான் பொறுப்பு என்றார்.

# 220கோடி மக்கள் ஏழ்மை நிலையில் ஐ.நா. மேம்பாட்டு திட்டம் தகவல்

ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்ட அறிக்கை ஜப்பானின் டோக்கியோ நகரில் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. இதில், 220 கோடி பேர் ஏழ்மை அல்லது ஏழ்மைக்கு அருகில் என்ற நிலையில் வசித்து வருகின்றனர். இதற்கு நிதி நெருக்கடி, இயற்கை பேரிழப்புகள், அதிகரித்து வரும் உணவு விலைகள் மற்றும் வன்முறைகள் ஆகியவை பிரச்சினைகளாக அமைந்துள்ளன என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

150 கோடி மக்கள் - உலக அளவில் வறுமை குறைந்து வந்தாலும், சமத்துவமற்ற நிலை அதிகரிப்பு மற்றும் குடும்ப கட்டமைப்பு அச்சுறுத்தல்கள் ஆகியவை ஆபத்தான அச்சுறுத்தலாக விளங்குகிறது. மேலும் 80 கோடி பேர் அதன் முனை பகுதியில் உள்ளனர்.



வறுமையை முற்றிலுமாக ஒழிப்பது என்பது பூஜ்ய நிலை என்பதுடன் இல்லாமல் அதை அந்த நிலையிலேயே தொடர்ந்து வைத்திருப்பது என்பதுவும் ஆகும் என்று மனித மேம்பாட்டு அறிக்கை 2014 தெரிவித்துள்ளது. இயற்கை பேரிழப்புகள், பருவநிலை மாற்றம் மற்றும் நிதி நெருக்கடிகள் ஆகியவற்றால் பாதிக்கப்படுபவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின் தலைவர் ஹெலன் கிளார்க் கூறும்போது, வருடாந்திர அறிக்கை முதன் முறையாக அச்சுறுத்தல் மற்றும் தீர்வு ஆகியவற்றை மனித மேம்பாட்டு பார்வையுடன் உற்று நோக்கியுள்ளது என தெரிவித்துள்ளார்.

# காஸா மீதான தாக்குதல் விசாரணைக்கு இந்தியா ஆதரவு

காஸா மீதான இஸ்ரேல் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடாத்த ஐ.நா. மனித உரிமை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வாக்கெடுப்பு ஐ.நா.வில் நடந்தது, ஐ.நா. வாக்கெடுப்பில் மொத்தம் 47 உறுப்பு நாடுகள் வாக்களிக்கலாம். இதில், இந்தியா, ரஷ்யா, பிரேசில், சீனா, தென் ஆபிரிக்கா உள்பட 29 நாடுகள் பலஸ்தீனத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. 7 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. இதில் இஸ்ரேலை சொல்லளவில் ஆதரிக்கும் பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளும் அடங்கும். இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா மட்டும் வாக்களித்தது.

வாக்கெடுப்புக்கு முன்னதாக, இஸ்ரேல் போர்க் குற்றத்தில் ஈடுபடுவதாக, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் நவநீதம் பிள்ளை எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதனிடையே போர் நிறுத்தம் ஏற்படுத்தச் செய்யும் முயற்சியில் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரி, இஸ்ரேல் பாலஸ்தீன தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருகிறார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதை இஸ்ரேல் எதிர்த்துள்ளது. இதனை கட்டப்பஞ்சாயத்து என இஸ்ரேல் வர்ணித்துள்ளது. மேலும், இம்முடிவு கேலிக்குரியது என்றும் தெரிவித்துள்ளது.

ஏற்கெனவே, இஸ்ரேலுக்குச் செல்லும் விமானங்களை பல்வேறு விமான நிறுவனங்கள் ரத்து செய்துள்ள நிலையில் ஐரோப்பா விமான நிறுவனங்களும் தடையை நீட்டித்துள்ளன.

காஸா மீதான தாக்குதலைக் கைவிட பல்வேறு நாடுகள் வலியுறுத்திய போதும் இஸ்ரேல் அதற்கு செவிசாய்க்கவில்லை. தனது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. இத்தாக்குதல்களில் இதுவரை 800 பாலஸ்தீனர்கள், 34 இஸ்ரேலியர்கள் உயிரிழந்துள்ளனர்.

தென்கிழக்கு காஸா பகுதியைக் குறி வைத்து இஸ்ரேல் தாக்குதல் நடாத்திவருவதுடன் அப்பகுதியிலிருந்து மக்கள் வெளியேறிவருகின்றனர்.

சமீபத்தில் நடாத்தப்பட்ட தாக்குதலில் ஒரே குடும்பத்தில் இரு குழந்தைகள் உட்பட 6 பேர் உயிரிழந்தனர். இஸ்ரேல் தாக்குதலில் 475 வீடுகள் முற்றிலும் தகர்க்கப்பட்டன. 2,644 வீடுகள் பாதி சேதமடைந்தன.

46 பள்ளிக்கூடங்கள், 56 மசூதிகள், 7 மருத்துவமனைகளும் சேதமடைந்துள்ளன.

# நளினி வழக்கு தொடர்பில் பதிலளிக்க மத்திய உள்துறை செயலருக்கு உத்தரவு

## உச்சநீதிமன்றம் உத்தரவு



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கு குற்றவாளியான நளினி உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் ஒன்றை செய்திருந்தார். அதில் குற்றவாளியை விடுவிக்க மத்திய அரசிடம் கருத்து கேட்கும்படி 435 (1ஏ) சட்டப் பிரிவு கூறுகிறது என்றும் 435 (1ஏ) சட்டப் பிரிவை நீக்க வேணடும். சி.பி.ஐ. வழக்குகளில் குற்றவாளிகளை விடுவிக்க மாநில அரசுகளுக்கு அதிகாரம் உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே இந்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள், மத்திய உள்துறை செயலாளர் பதில் அளிக்க வேண்டு மென உத்தரவிட்டுள்ளனர்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் நளினி, முருகன், பேரறிவாளன் உட்பட பலர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இந்தவழக்கில் நளினிக்கு முதலில் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது. அதன்பின் ஆயுளாக அது மாற்றப்பட்டது. இந்நிலையில் சமீபத்தில் ஆயுள்தண்டனை கைதிகள் நீண்ட காலம் சிறையில் இருப்பதாலும், வழக்கு தாமதம் ஏற்பட்டதாலும் அவர்களை அரசு விடுதலை செய்யலாம் என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஒரு வழக்கில் தீர்ப்புக் கூறினார்கள்.

இதன் அடிப்படையில் நளினி உட்பட பலபேரை விடுதலை செய்யத் தமிழக அரசு முடிவு செய்தது. இதை எதிர்த்து மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் மனு செய்தது. இந்தமனு மீதான விசாரணை நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# காகித அரசியல் நடாத்துகிறது வடக்கு மாகாண அரசு

### பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் கண்டனம்



(வடமராட்சி கிழக்கு)

முன்பள்ளி ஆசிரியைகளின் நியமனங்கள் மற்றும் ஊதியம் தொடர்பாக வடக்கு மாகாண சபை ஆக்கபூர்வமான எவ்வித நடவடிக்கை எதனையும் இதுவரை மேற்கொள்ளவில்லை. இந்நாட்டின் நற்பிரஜைகள் உருவாவதற்கு அடித்தளக் கல்வியான முன்பள்ளிக் கல்வியை போதிக்கும் ஆசிரியர்களின் ஊதியத்தைக் கூட பெற்றோர்கள் தலையில் சுமத்திவிட்டு, காகித அரசியலையே மாகாணசபை நடாத்தி வருகிறது என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி இணைப்பாளரும் பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு, செம்பியன் முன்பள்ளியின் விளையாட்டு விழா முன்பள்ளித் தலைவி திருமதி இ.சிவமணி ஆசிரியை தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய குழந்தைகள் நாட்டின் வருங்காலத் தலைவர்கள், அதிகாரிகள் மற்றும் பொறுப்புள்ள குடிமக்கள். அதனால்தான் குழந்தைகளின் கல்வி மற்றும் அறிவு வளர்ச்சி விடயத்தில் அரசாங்கம் அதிக அக்கறை காட்டி வருகின்றது.

பெற்றோருக்குத் தங்கள் பிள்ளைகள் எதிர்காலத்தில் மருத்துவராகவோ பொறியியலாளராகவோ அல்லது விஞ்ஞானியாகவோ உருவாகவேண்டும் என்ற கனவுகளில்தான் உள்ளார்கள்.

அவர்களின் ஆரம்பக் கல்விப் பயிற்சி முன்பள்ளிகளில் தான் ஆரம்பமாகின்றது. அவர்களை உருவாக்கும் பெண் ஆசிரியர்கள் ஒரு தாயாக, ஒரு தாதியாக, ஒரு குருவாக தன்னை மாற்றியமைத்தே கல்வியைப் போதிக்கின்றார். ஆனால் அவர்களது ஊதியமோ பெற்றோர்கள் கொடுக்கும் சிறு கொடுப்பனவு தான்.

முன்பள்ளி மாணவர்களின் விருத்தியை நெறிப்படுத்த கல்வி வலயங்களில் அதற்கென ஒரு கல்வியதிகாரி உள்ளார். அவர்களுக்கு மாகாண அரசு ஊதியம் வழங்குகிறது. ஆனால் முன்பள்ளி டிப்ளோமா முடித்த ஆசிரியைகள் இதுவரை நியமனமும் இல்லை. நிரந்தர ஊதியமும் இல்லாமலே உள்ளார்கள்.

இந்த முன்பள்ளி ஆசிரியைகளின் நியமனங்கள் மற்றும் ஊதியம் தொடர்பாக வடக்கு மாகாண சபை ஆக்கபூர்வமான எவ்வித நடவடிக்கை எதனையும் இதுவரை மேற்கொள்ளவில்லை. எனவே வட மாகாணசபை இவ்வாசிரியர்களுக்கு நிரந்தர வேதனம் கிடைக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

இவ்விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக மருதங்கேணி பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன், சிறப்பு விருந்தினர்களாக செம்பியன்பற்று பங்குத்தந்தை எம்.ஜேசுரட்ணம் அடிகளார், பாடசாலை அதிபர் க.கண்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# கடலில் தரித்திருந்த கப்பலுக்கு கட்டணம் செலுத்தியது ஏன்?

### தொழிற்சங்கங்கள் போர்க்கொடி

(கொழும்பு)

எரிபொருள் கப்பல்களில் இருந்து கொழும்புத் துறைமுகத்திற்கு எரிபொருளை கொண்டு வருவதற்காக தருவிக்கப்பட்டுள்ள சிறிய கப்பலின் மூலம் சேவைகளைப் பெற்றுக்கொள்ளாத காரணத்தினால் பத்து நாட்களுக்கும் மேலாக எரிபொருள் கப்பல் இந்த நாட்டு கடற்பரப்பில் நிறுத்தப்பட்டுள்ளதாக பெற்றோலிய தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இதனால் நாளொன்றுக்கு சுமார் 12,000 அமெரிக்க டொலர்களை வீணாக சிங்கப்பூர் கப்பல் நிறுவனத்திற்கு செலுத்த நேரிட்டுள்ளதாக தேசிய ஊழியர் சங்க பெற்றோலிய கூட்டுத்தாபன கிளையின் செயலாளர் ஆனந்த பாலித குறிப்பிடுகின்றார்.

எரிபொருளை விநியோகிக்கும் குழாயில் ஏற்பட்டுள்ள வெடிப்பு காரணமாக கப்பல்கள் மூலம் நாட்டிற்கு தருவிக்கப்படுகின்ற எரிபொருள் தொகையை கடலில் இருந்து துறைமுகத்திற்கு கொண்டுவருவதற்காக சிறிய கப்பல் கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதுகுறித்து பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பதில் தலைவரான பிரதமரின் செயலாளர் எஸ்.அமரசேகரவிடம் வினவிய போது, அந்தக் கப்பலின் சேவை அவசியமற்றது என குறிப்பிட்டார்.

கடந்த 10 ஆம் திகதியளவில் சிறிய கப்பலின் மூலம் எரிபொருளை துறைமுகத்திற்கு கொண்டுவருவதற்கான சகல ஆயத்தங்களும் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், எரிபொருள் விநியோக கப்பலின் உரிமையாளருக்கும், சிறிய கப்பல் உரிமையாளர் நிறுவனத்திற்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றியதாக கூட்டுத்தாபன பதில் தலைவர் கூறினார்.

இதற்கிடையே வெடிப்பு ஏற்பட்டிருந்த எரிபொருள் விநியோக குழாய் புனரமைக்கப்பட்டு விட்டதால், எரிபொருளை துறைமுகத்திற்கு விநியோகிப்பதற்காக சிறிய கப்பலின் உதவி தேவைப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதே அனைவரதும் நோக்கம்

### மாதுளுவாவே சோபித தேரர் தெரிவிப்பு



நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து புதிய அரசியல் சீர்திருத்தத்தை கொண்டுவருவதே சகல அரசியல் கட்சிகளினதும் நிலைப்பாடாகும் என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்போம் என்ற தொனிப்பொருளில் நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா, முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க, மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சபையின் தலைவரும் எம்.பியுமான கருஜெயசூரிய உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது உரையாற்றிய மாதுளுவாவே சோபித தேரர், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை அனைவரும் எதிர்ப்பதாக குறிப்பிட்டார்.

இலங்கையில் நடைமுறையில் உள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை அனைவராலும் வெறுக்கப்படும் ஒன்றாக காணப்படுகிறது. ஜனாதிபதியும் அவர் இதனை ஒழிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார், சிறிமாவோ பண்டாரநாயக்கவும் இதனை கடுமையாக எதிர்த்தார், இதனை கொண்டுவந்த ஐக்கிய தேசியக் கட்சியும் இன்று இதனை இல்லாது செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறது. நீதிமன்றம் முழுமையாக ஜனாதிபதியின் அனுசரணையில் செயற்படுகிறது. அவர் நீதிமன்றத்திற்கு மேலாக உள்ளார்.

முழு நாட்டுக்கும் வேண்டாம் என்று போன ஒன்றை இல்லாதொழிக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

## கொழும்புடன்...

அதேவேளை இந்திய மீனவர்களை பாதுகாக்கும் நோக்கில் தமிழக கடற்பரப்பில் கடற்படைப் பாதுகாப்பு கப்பல்கள் நிலைநிறுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருவதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் அருண் ஜெயட்லீ மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை தடுத்து நிறுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்தும் கப்பல்கள் கண்காணித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கை - இந்திய மீனவர்கள் சர்வதேச கடல் எல்லைகளை [illegible]ம் போது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இணககப்பாடு எட்டப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதில்லை என இரு தரப்புக்குமிடையில் இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்ததாக தெரிவித்தார்.

## தமிழரசுக்....

இதேவேளை இந்த விடயம் தொடர்பாக தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரை தொடர்புகொண்டு கேட்டவேளை, இது தொடர்பாக என்னிடமும் பலர் கேட்டவண்ணம் உள்ளனர். இது நடக்கக்கூடிய சாத்தியமும் உள்ளது. ஏனெனில் தமிழரசுக் கட்சியின் தீர்மானங்கள் எதுவும் தற்போது அடிமட்டத்திலிருந்து எடுக்கப்படுவதில்லை. மத்திய செயற்குழுவிலும் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படுவதில்லை.

தமிழ்த் தேசியம் என்பது தற்போது வழிப்போக்கர்களின் கைகளில் சிக்கியுள்ளது. நீண்டகாலமாக தமிழ்த் தேசியத்திற்காக களத்தில் நின்றவர்கள் இன்று கட்சியிலிருந்து ஒதுக்கப்படுகின்றனர். ஆனால் கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் சுகபோக வாழ்க்கை வாழ்ந்தவர்கள் இன்று முன்னிலைப்படுத்தப்படுகின்றனர்.

மக்களுடன் பழகாத, பரிச்சயமில்லாத ஒருவரை தமிழரசுக் கட்சியின் தலைவராக நியமித்தால் அது சம்பந்தரின் அராஜகத்தையே வெளிக்காட்டுவதாக அமையும்.

அதேபோன்று தற்போது மீளவும் ஜனாதிபதித் தேர்தலுக்காக பொது வேட்பாளர் தெரிவில் சம்பந்தனும் கலந்துகொள்கிறார். இதனால் தமிழ் மக்களுக்கு என்ன நன்மை? முன்னரும் சரத் பொன்சேகாவை பொது வேட்பாளராக ஆதரிப்பதென மோசமான முடிவை எடுத்தனர். தற்போதும் அதே முடிவையே எடுக்கின்றனர். இதனால் தமிழ்மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த மாற்றம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை தொடர்புகொண்டு கேட்டபோது, தமிழரசுக் கட்சியின் தலைவரை நியமிப்பது தொடர்பாக கட்சிதான் தீர்மானிக்க வேண்டும். பொதுச்சபை மற்றும் நிர்வாகக் குழு என்பன உள்ளது.

அத்துடன் கட்சியின் மாநாடு எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளது. அதன்போது இது குறித்து தீர்மானிக்கப்படும். எல்லா விடயத்தையும் வெளிப்படையாக கூறமுடியாது எனத் தெரிவித்தார்.

## "மாறுதடம்" திரையிடல் நிறுத்தம்

யாழ்.நகரிலுள்ள திரையரங்கு ஒன்றில் நேற்று மாலை 4.00 மணிக்கு காண்பிக்கப்பட்ட 'மாறுதடம்' திரைப்படம் இடைநடுவில் பொலிஸாரால் நிறுத்தப்பட்டுள்ளது. சினிமா திரையரங்கில் இவ்வாறான படங்களை காண்பிக்க முடியாது என்று தெரிவித்து படத்தை இடைநடுவில் பொலிஸார் நிறுத்தினர் என்று அந்தப் படத்தின் இயக்குநர் தெரிவித்தார்.

'மாறுதடம்' திரைப்படம் புலம்பெயர் வாழ். மக்களின் பிரச்சினைகளையும் இலங்கையில் ஒற்றுமையையும் சமாதானத்தையும் மட்டுமே வலியுறுத்துகின்றது என்றும் அதில் எந்தவிதமான அரசியலும் புகுத்தப்படவில்லை என்றும் இயக்குநர் தெரிவித்தார்.

இந்த நிலையில் உண்மையான காரணங்களின்றி திரையரங்கில் திரைப்படம் காண்பிக்க ஆரம்பித்த சமயம் அங்கு வந்த பொலிஸார் படத்துக்குத் தடை விதித்துள்ளனர். இதுகுறித்து நாம் பொலிஸாரிடம் பேசி வருகிறோம் என்றார்.

## கம்யூனிஸ்ட்...

டீ.யூ.குணசேகர, சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர ஆகியோருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் பதாதையை தாங்கியவாறு பேரணியில் கலந்து கொண்டார்.

பிரதான வாயிலில் அதிதிகள் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து பிரதான மண்டபத்தில் மங்கள விளக்கேற்றி வைக்கப்பட்டது.

தொடர்ந்து அரங்கில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஸ் குணவர்தன, சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண, தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் உரையாற்றியதைத் தொடர்ந்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டீயூ குணசேகர கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் விளக்கவுரை நிகழ்த்தினார்.

கட்சியின் தலைவர் இராஜா கொல்லூரே தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் கடந்த, நிகழ்கால வரலாறுகள் தொடர்பில் கருத்துரைக்கப்பட்ட அதே வேளை, எதிர்கால திட்டங்கள் தொடர்பிலும் கருத்துரைக்கப்பட்டன.

இதன்போது நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆகியோருடன் சீனா, கியூபா, வியட்நாம், இந்திய உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த தூதுவராலயங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 20 ஆவது தேசிய மாநாட்டுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாந்தை கிழக்கில் மீள்குடியமர்வு 2,744 குடும்பங்கள் சொந்த இடத்தில்

முல்லைத்தீவு மாவட்டம், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் இதுவரை 2 ஆயிரத்து 744 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 767 பேர் மீளக்குடி யேறியுள்ளதாக மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் ரி.பிருந்தாகரன் நேற்றுத் தெரிவித்தார்.

2009 டிசம்பர் மாதம் முதல் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்த்த அனுமதிக்கப்பட்ட பின்னர் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள 15 கிராம அலுவலர்கள் பிரிவுகளிலுமே இவ்வாறு மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

அந்தவகையில், வன்னிவிளாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 131 குடும்பங்களும், அம்பாள்புரம் கிராம அலுவலர் பிரிவில் 237 குடும்பங்களும், கொல்லவிளாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 184 குடும்பங்களும், ஒட்டறுத்த குளம் கிராம அலுவலர் பிரிவில் 181 குடும்பங்களும், சிவபுரம் கிராம அலுவலர் பிரிவில் 114 குடும்பங்களும், பாலிநகர் கிராம அலுவலர் பிரிவில் 451 குடும்பங்களும், கரும்புள்ளியான் கிராம அலுவலர் பிரிவில் 178 குடும்பங்களும், பூவரசங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 134 குடும்பங்களும், பாண்டியன் குளம் கிராம அலுவலர் பிரிவில் 322 குடும்பங்களும், செல்வபுரம் கிராம அலுவலர் பிரிவில் 242 குடும்பங்களும், மூன்றுமுறிப்பு கிராம அலுவலர் பிரிவில் 173 குடும்பங்களும், நட்டாங்கண்டல் கிராம அலுவலர் பிரிவில் 161 குடும்பங்களும், விநாயகபுரம் கிராம அலுவலர் பிரிவில் 121 குடும்பங்களும், பொன்னகர் கிராம அலுவலர் பிரிவில் 59 குடும்பங்களும், சிறாட்டிகுளம் கிராம அலுவலர் பிரிவில் 56 குடும்பங்களும் என 2 ஆயிரத்து 744 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளதாக செயலர் தெரிவித்தார்.

மீள்குடியமர்த்தப்பட்டவர்களுக்கான அடிப்படை வசதிகள் படிப்படியாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# விபத்துக்குள்ளானவர் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

நுணாவில் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் விபத்துக்குள்ளாகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நுணாவிலைச் சேர்ந்த கணேசமூர்த்தி சாந்தினி (வயது-50) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த புதன்கிழமை முற்பகல் நுணாவிலில் அவரது மகனது வீட்டில் இருந்து வெளியே புறப்பட்டுச் சென்றுள்ள நிலையில் விபத்தில் சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தலையில் காயமடைந்த அவரை அடையாளம் தெரியாதவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதித்துச் சென்றதாகவும் அவர் வைத்திருந்த கைத் தொலைபேசியில் உள்ள இலக்கத்திற்கு குறித்த பெண், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பதாக தகவல் கொடுக்கப்பட்டதனை அடுத்த உறவினர்கள் வைத்தியசாலைக்குச் சென்ற சமயம் குறித்த பெண், சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்த தாகத் தெரிவிக்கப்படுகிறது. (பா)

# ஆஸி.படகு அகதிகளை கொழும்புக்கு திருப்பி அனுப்ப முடிவு

அவுஸ்ரேலியா சென்றபோது இடைமறிக்கப்பட்டு கடலிலே தடுத்துவைக்கப்பட்டிருந்த 157 தஞ்சக் கோரிக்கையாளர்களை தாம் ஏற்று அவர்களை அங்குள்ள தடுப்புக்காவல் மையங்களுக்கு அனுப்பிவைக்க முடிவு செய்துள்ளனர் என்று அவுஸ்ரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொறிசன் தெரிவித்துள்ளார்.

இந்த தஞ்சக் கோரிக்கையாளர்களை ஒரு மாதத்துக்கும் அதிக காலமாக அவுஸ்ரேலிய அரசு கடலிலேயே தடுத்துவைத்திருந்தது. இவர்கள் நடத்தப்படும் விதம் பற்றி மனித உரிமைக் குழுக்கள் கவலை எழுப்பியிருந்தன.

இதேவேளை இவர்களை கடலில் இருந்து அப்படியே இலங்கைக்கு திருப்ப அவுஸ்ரேலிய உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்தது. இந்தப் படகில் இருந்தவர்களில் பலர் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றாலும், இப்படகு தனது பயணத்தை இந்தியாவில் இருந்து துவங்கியிருந்ததால், அதிலுள்ள தமிழர்களை அவுஸ்ரேலியா இந்தியாவுக்கு அனுப்பிவைக்கவும் முயற்சித்திருந்தது.

அவுஸ்ரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொறிசன் இது சம்பந்தமாக இந்தியாவுடன் பேசியிருந்தார். இவர்களை ஏற்றுக்கொள்ள இந்தியா மறுத்து விட்டது என்று இந்த அகதிகளின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வருபவர்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில் அவர்களை அவுஸ்ரேலிய நிலப்பரப்புக்கே கொண்டுசென்று தடுத்து வைத்து விசாரிக்க அந்நாட்டு அரசு தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

# கோண்டாவில் வாள்வெட்டு வழக்கு; இருவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் உட்புகுந்து இளைஞர் ஒருவரை வாளால் வெட்டிக் கொலை செய்த இரு இளைஞர்களையும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி பொ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஓரிரு மாதங்களுக்கு முன்னர் கோண்டாவில், பகுதி இளைஞர்களுக்கும், உரும்பிராய் பகுதி இளைஞர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தகராற்றில், உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் குழு கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் உட்புகுந்து மேற்கொண்ட வாள்வெட்டில், ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த மூவர் வாள் வெட்டுக்கு இலக்காகியதில், ரவீந்திரன் சுகிர்தன் (வயது-21) என்ற இளைஞர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

வாள்வெட்டில் படுகாயமடைந்து உயிரிழந்த இளைஞரின் சகோதரி மற்றும் சகோதரன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தனர்.

அதன் பிரகாரம், வாளால் வெட்டி மரணத்தினை ஏற்படுத்தினார் என்ற குற்றத்திற்காக உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த நிரோஜன் (வயது-23) என்ற இளைஞும், மற்றொரு இளைஞரும் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி வழக்கு விசாரணை தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில், நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி பொ.சிவகுமார். மேற்படி இரு இளைஞர்களையும் எதிர் வரும் ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (25)

# எரிபொருள் நிலையத்துக்கு நீதிமன்றம் அனுமதி

யாழ்ப்பாணம், கச்சேரிப் பகுதியில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் காணியில் எரிபொருள் நிரப்பு நிலையத்தை அமைக்க உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

எரிபொருள் நிலையம் அமைப்பதற்கு மாநகர சபை ஏற்கனவே அனுமதியை வழங்கிய நிலையில் பின்னர், மக்களின் எதிர்ப்பை அடுத்து இடைக்கால தடை விதித்தது. இந்தத் தடையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையினர் வழக்குத்தாக்கல் செய்தனர். இந்த வழக்கு நேற்று உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது இடைக்காலத் தடையை மீளப்பெறுகிறோம் என்று யாழ்.மாநகரசபை சார்பாக முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்தார். இந்த நிலையில் குறித்த இடத்தில் எரிபொருள் நிரப்பு நிலையத்தை அமைக்கலாம் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்திய எண்ணை கூட்டுத்தாபனத்தின் நிதியுதவியுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை கச்சேரிப்பகுதியில் எரிபொருள்நிரப்பு நிலையத்தை அமைக்கத்திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆலய உற்சவத்துக்கு அனுமதி

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள வசாவிளான் புனித யாகப்பர் ஆலயத்தின் நூற்றாண்டு விழா உற்சவத்தினை நடத்துவதற்கு யாழ். மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதயப் பெரேரா அனுமதியளித்துள்ளதாக யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, மேற்படி ஆலயத்தில் நூற்றாண்டு விழா உற்சவம் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் ஒத்துழைப்புடன் நடைபெறும் இந்த உற்சவத்தை, யாழ் மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நடத்திவைக்க வுள்ளார்.

வசாவிளான் பகுதிகளில் இருந்து, இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் வாழும் பொதுமக்களின் நலன் கருதி, யாழ்ப்பாணம் புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயம் மற்றும் கோப்பாய் புனித மரியாள் ஆலயம் ஆகிய இடங்களிலிருந்து பேருந்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# ஊவாவில் ஆசனக் குறைப்பு தொடுக்கப்பட்ட வழக்கு நிராகரிப்பு

(கொழும்பு)

ஊவா மாகாண சபைக்கான பதுளை மாவட்ட ஆசனக் குறைப்புக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி தாக்கல் செய்த மனுவை உயர்நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தலைமையிலான மூவரடங்கிய நீதிபதிகள் குழு முன்னிலையில் இடம்பெற்ற விசாரணையின் போதே இந்த மனு நிராகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஊவா மாகாண சபைக்கான மொனராகலை மற்றும் பதுளை மாவட்ட ஆசனக் குறைப்புக்களுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்ணாண்டோ அண்மையில் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய மற்றும் சட்டமா அதிபர் உள்ளிட்ட குழுவினர் பெயரிப்பட்டுள்ளனர்.

# நிபுணர் குழு அடுத்த வாரம் கொழும்புக்கு

(கொழும்பு)

காணாமற்போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் ஆலோசகர்களாக மூன்று வெளிநாட்டு நிபுணர்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்தார்.

இந்தக் குழுவினர் அடுத்த வாரம் கொழும்பு வரவுள்ளதாக தெரியவருகிறது.

சேர் டெஸ்மன் டி சில்வா், சேர் ஜெப்ரி ணைஸ், பேராசிரியர் டேவிட் க்ரோன் ஆகியோர் ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆலோசகர்களாக கடந்த 15 ஆம் திகதி நியமிக்கப்பட்டனர்.

மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் தொடர்பான விசேட நிபுணர்களாக இவர்களை ஆணைக்குழுவுடன் இணைத்துக் கொண்டதன் மூலம், அதன் வினைத்திறன் அதிகரிக்கும் என காணாமற் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வல் பரணகம தெரிவித்திருந்தார்.

அத்துடன் ஆணைக்குழுவிற்கு சர்வதேச அங்கீகாரமும் கிடைக்கும் என்றும் அவர் கூறியிருந்தார்.

# கிளிநொச்சியில் சிறு தானிய உற்பத்தி விவசாயிகளுக்கு பெரு வெற்றி

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் இவ்வருடம் (2014) சிறுபோக நெற்செய்கை காலத்தில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட மாற்றுத்தானியப் பயிர்ச் செய்கை (பயறு, கௌப்பி, நிலக் கடலை) பெரும் வெற்றிப்பெற்றுள்ளதாக திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத்திட்டக் கமக்கார அமைப்பின் தலைவர் சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனின் தலைமையில் இடம்பெற்ற மாவட்ட விவசாய குழு கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில் இவ்வருடம் பரீட்ச்சார்த்த முயற்சியாக மருதநகர் கமக்கார அமைப்பின் கீழ் உள்ள சிறுபோக வயல்காணியில் 150 ஏக்கர் பரப்பளவில் திருவையாறு கமக்கார அமைப்பு, ஊரியான் கமக்கார அமைப்பு, வட்டக்கச்சி கமக்கார அமைப்பு, மருதநகர் கமக்கார அமைப்பு ஆகிவற்றில் தெரிவுசெய்யப்பட்ட 600 விவசாயிகளுக்கு தலா கால் ஏக்கர் வீதம் வழங்கப்பட்டு மேற்படி பயிர்ச்செய்கை பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது வழமையாக சிறுபோக நெற்ச்செய்கையில் பெறும் வருமானத்தை விடவும் மாற்றுத்தானியப் பயிர்ச்செய்கை மூலம் அதிக வருமானம் பெற முடியும் என நம்பிக்கை வெளியிட்ட அவர் ஒரு ஏக்கர் சிறுபோக நெற்செய்கைக்கு 8 ஏக்கர் கன அடி நீர் பயன்டுத்த வேண்டும் ஆனால் ஒரு ஏக்கர் மாற்றுத்தானியப் பயிர்ச்செய்கைக்கு இரண்டு ஏக்கர் கன அடி நீர் போதுமானது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூலை 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.